இந்த விலைக்கழிவு நாரஹேன்பிட்டி எலைற்றேடியோ காட்சியறையில் மற்றும் shop.eliteradio.com மூலமான கொள்வனவுகளுக்கு மட்டும் வழங்கப்படும்.

Ceiling
Pedestal
Table
Orbital
Wall
Exhaust

KDK SINCE 1909 JAPAN

அங்கீகரிக்கப்பட்ட ஏகவிநியோகஸ்தர்கள்
ELITERADIO Since 1959
facebook.com/kdksrilanka | shop.eliteradio.com
வார நாட்களில: 9:00am - 5:00pm | சனிக்கிழமை: 9:00am - 1:00pm

Follow us:

# தமிழன்

THAMILAN தமிழன்

தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்

மலர் : 03, இதழ்: 240 சோபகிருது வருடம், வைகாசி மாதம் 11ஆம் திகதி வியாழக்கிழமை
(25.05.2023) ஹிஜ்ரி 1444, துல்கஃதா - 04, 0115 886187 - பக்கங்கள் 10

விலை ரூ.50

Special offer
2023 மே 1 தொடக்கம் மே 31 வரை

KDK SINCE 1909 JAPAN

DISCOUNT 15% (On selected models only) *Conditions apply Cash or Card

Ceiling | Pedestal | Table | Orbital | Wall | Exhaust

அங்கீகரிக்கப்பட்ட ஏகவிநியோகஸ்தர்கள்
ELITERADIO Since 1959
Inquiries (011) 250 0823 | (011) 236 8472 / 73 / 74

# ஜனகவை நீக்க சபை அங்கீகாரம்!

## அரசால் கொண்டுவரப்பட்ட பிரேரணை 46 மேலதிக வாக்குகளால் நிறைவேறியது

•நா.தினுஷா

பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவின் தலைவர் ஜனக ரத்நாயக்கவை அந்தப் பதவியிலிருந்து நீக்குவதற்காக அரசாங்கத்தினால் பாராளுமன்றத்தில் முன்வைக்கப்பட்டிருந்த பிரேரணை 46 மேலதிக வாக்குகளால் நேற்று (24) நிறைவேற்றப்பட்டது.

இந்தப் பிரேரணைக்கு ஆதரவாக 123 வாக்குகளும் எதிராக 77 வாக்குகளும் அளிக்கப்பட்டன.

பாராளுமன்றத்தில் வாய்மூல விடைக்கான கேள்வி நேரத்தின் பின்னர் பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவின் தலைவர் ஜனக ரத்நாயக்கவை பதவிநீக்கம் செய்வது தொடர்பான பிரேரணை மீது விவாதம் ஆரம்பமாகியது. 02 பக்கம்



## ஜனகவுக்கு அனுமதி அளிக்கப்படாதது ஏன்?

### பயமா காரணம் எனக் கேட்கிறார் ஹக்கீம்



பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவின் தலைவர் ஜனக ரத்நாயக்கவை பதவி நீக்கம் செய்வது தொடர்பான பிரேரணை மீதான விவாதத்தைப் பார்வையிட அவருக்கு அனுமதியளிக்கப்படாமை ஏன் என ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவர் ரவூப் ஹக்கீம் பாராளுமன்றத்தில்... 02 பக்கம்



## அலி சப்ரிக்கு ரூ.75 இலட்சம் அபராதம் விதிப்பு

### தங்கம், கைபேசிகள் அரசுடைமை

•கே. சுபானி

பாராளுமன்ற உறுப்பினர் அலி சப்ரி ரஹீமினால் நாட்டுக்குக் கொண்டு வரப்பட்ட தங்கம் மற்றும் கையடக்கத் தொலைபேசிகள் உள்ளிட்ட அனைத்து பொருட்களும் அரசுடைமையாக்கப்பட்டுள்ளதுடன், அவருக்கு 75 இலட்சம் ரூபா அபராதமும் விதிக்கப்பட்டுள்ளது. 02 பக்கம்



பஞ்ச ஈச்சரங்களில் ஒன்றான மன்னார் திருக்கேதீஸ்வர ஆலய வருடாந்த மகோற்சவப் பெருவிழா பிரதம குரு கருணாநந்த குருக்கள் தலைமையில் கொடியேற்றத்துடன் நேற்று (24) ஆரம்பமானது.

(மன்னார் நகர் செய்தியாளர்)

கமெண்ட் கந்தர்...



ஆனானப்பட்ட கோட்டாவையே விரட்டிய நாட்டில ஜனக ரத்நாயக்க எம்மாத்திரம்?

## பதுளை பணிப்பெண் உயிரிழப்பு

# உரிய விசாரணை நடத்துமாறு சஜித், மனோ, விமல் கோரிக்கை



•நா.தினுஷா

பிரபல கலைஞர் சுதர்மா ஜயவர்தன வீட்டில் பணிபுரிந்த நிலையில், குற்றச்சாட்டு ஒன்றின்பேரில் வெலிக்கடை பொலிஸாரால் கைதுசெய்யப்பட்ட பின்னர் உயிரிழந்த பதுளையைச் சேர்ந்த ராஜகுமாரியின், சடலத்தை தோண்டியெடுத்து மீண்டும் பிரேத பரிசோதனைக்குட்படுத்துமாறு தமிழ்... 02 பக்கம்

## உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கையை அதிகரிக்க முடியாது

### கட்சிகளுடனான கலந்துரையாடலின் பின்னர் எல்லை நிர்ணயக்குழு திட்டவட்டம்



•நா.தினுஷா

"தேசிய எல்லை நிர்ணயக்குழுவின் இறுதி அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டுள்ள நிலையில், அவ்வறிக்கையிலுள்ள பரிந்துரைகள் தொடர்பில் அரசியல் கட்சிகளுடன் தேசிய எல்லை நிர்ணய ஆணைக்குழு கலந்துரையாடல்களை முன்னெடுத்து வருகின்றது. இதுவரையில் இரு கலந்துரையாடல்கள் நிறைவடைந்துள்ளதுடன் அதன் பிரகாரம் எங்களால் பரிந்துரைக்கப்பட்டுள்ள உள்ளூராட்சி உறுப்பினர்களின் எண்ணிக்கையை அதிகரிக்குமாறு ஒரு சில அரசியல் கட்சிகள் கோரியுள்ளன. ஆனால், அதனை எங்களால் செய்ய முடியாது. 02 பக்கம்

## சட்டவிரோதமாக வெளிநாடு செல்வோருக்கு கடும் சட்டம்

### அரச செலவில் அழைத்துவரப்படமாட்டார்களென அமைச்சர் மனுஷ அறிவிப்பு



•நா.தினுஷா

வெளிநாட்டு வேலைவாய்ப்பை இலக்காகக் கொண்டு சுற்றுலா விசாவில் சட்டவிரோதமாக வெளிநாடுகளுக்குச் சென்று, அங்கு நிர்க்கதிக்குள்ளாவோரை இனிமேல் வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்தின் பாதுகாப்பு விடுதிகளில் இணைத்துக்கொள்ளப்போவதில்லை. இவ்வாறு சட்டவிரோதமாக நாட்டிலிருந்து... 02 பக்கம்

## ஜெரோம் மீது குற்றவியல் விசாரணை



•நா.தினுஷா

போதகர் ஜெரோம் பெர்னாண்டோவினால் முன்வைக்கப்பட்டதாக குறிப்பிடப்படும் சர்ச்சைக்குரிய கருத்து தொடர்பில் குற்றவியல் விசாரணைத் திணைக்களத்தின் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக சட்டமா அதிபர் நேற்று (24) உயர் நீதிமன்றத்துக்கு அறிவித்துள்ளார்.

போதகர் ஜெரோம் பெர்னாண்டோவை கைதுசெய்து அவருக்கு எதிராக சட்டத்தை அமுல்படுத்துமாறு கோரி எல்லே குணவங்ச தேரர் உள்ளிட்ட சிலரினால்... 02 பக்கம்

### கல்முனை உப பிரதேச செயலக விவகாரம்

## நீதிமன்ற விசாரணை ஜூன் 07க்கு ஒத்திவைப்பு

•நூருல் ஹுதா உமர்

கல்முனை உப பிரதேச செயலக தரமுயர்வு தொடர்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் தவராசா கலையரசன் மேன்முறையீட்டு நீதிமன்றில் தாக்கல் செய்த வழக்கு ஜூன் மாதம் 07ஆம் திகதிக்கு தவணையிடப்பட்டுள்ளது. திகாமடுல்ல மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சட்டத்தரணி எச்.எம்.எம்.ஹரீஸ், கல்முனை மாநகர சபை... 02 பக்கம்

## காரணமில்லாமல் விமர்சிப்பதை நிறுத்துங்கள்

### கூட்டணி உறுப்பினரை சாடி மனோவிடம் கோரினார் ஜீவன்



•கே. சுபானி

தமிழ் முற்போக்குக் கூட்டணியுடன் உறவைத் தொடர வேண்டும் என விரும்புவதாக மனோ கணேசன் எம்.பியிடம் தெரிவித்த நீர்வழங்கல், வடிகாலமைப்பு மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு அபிவிருத்தி அமைச்சர் ஜீவன் தொண்டமான், கூட்டணி உறுப்பினர் ஒருவர் காரணமில்லாமல் தமது கட்சியை விமர்சிப்பதை ஏற்றுக்கொள்ள முடியாதெனக் குறிப்பிட்டார்.

இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவின் தலைவர் ஜனக ரத்நாயக்கவை பதவி நீக்குவது தொடர்பிலான பிரேரணை மீதான விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றிய பின்னர் தமிழ் முற்போக்குக் கூட்டணியின்... 02 பக்கம்

## டெங்கு அபாய வலயங்கள் 61

### காய்ச்சல் தொடர்பில் சுகாதார பிரிவினர் எச்சரிக்கை

•கே. சுபானி

இரண்டு நாட்களுக்கும் மேல் காய்ச்சல் காணப்படுமாயின், கட்டாயமாக வைத்தியரின் ஆலோசனையை பெற்றுக்கொள்ள வேண்டும் என சுகாதார அமைச்சின் தேசிய டெங்கு ஒழிப்புப்பிரிவின் சமூக வைத்திய நிபுணர், வைத்தியர் லஹிரு கொடித்துவக்கு தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்,

தற்போது காய்ச்சல் அறிகுறிகளுடன் கூடிய பல்வேறு நோய்கள் பரவிவருவதால் இரண்டு நாட்களுக்கும் மேல் காய்ச்சல் இருக்கும் நோயாளியொருவர் மேலும் காலம் தாமதிக்கும்போது உயிராபத்து ஏற்படக்கூடிய வாய்ப்புள்ளது.

இவ்வாறு பல்வேறு காரணங்கள் முன்வைக்கப்படும் நிலையில், வைத்தியர்களின் ஆலோசனைக்கமைய... 02 பக்கம்

## பாடசாலை சீருடை விநியோகம் ஜூன் 12க்கு முன்னர் பூர்த்தி

### கல்வி அமைச்சு அறிவிப்பு




2023ஆம் ஆண்டு பாடசாலை மாணவர்களுக்கான சீருடை விநியோகம் ஜூன் 12ஆம் திகதிக்கு முன்னர் பூர்த்தி செய்யப்படும் என கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது.

இதன் முதற்கட்டமாக சீனாவினால் வழங்கப்பட்ட சீருடைத் துணி வடக்கு, கிழக்கு, மத்திய... 02 பக்கம்




முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் தனிப்பட்ட செயலாளருக்கு ஜனாதிபதி செயலகத்தில் விசேட அறையொன்றும் இதர வசதிகளும் செய்துகொடுக்கப்பட்டிருப்பது சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளது.

முன்னாள் ஜனாதிபதி என்ற அடிப்படையில் கோட்டாபய ராஜபக்ஷ அதற்குரிய பாதுகாப்பு மற்றும் இதர வசதிகளை பெற்றுக்கொண்டாலும் அவரின் பணியாட்களை ஜனாதிபதி செயலகத்தில் கடமையாற்ற இடமளித்திருப்பது குறித்து விளக்கமளிக்க வேண்டுமென பலதரப்பிலிருந்தும் ஜனாதிபதிக்கு கோரிக்கைகள் சென்றுள்ளதாக தகவல்

# மூன்றரை கிலோ குஷ் போதைப்பொருள் மீட்பு

இலங்கை சுங்கத்தின் மத்திய தபால் பரிவர்த்தனைப் பிரிவின் அதிகாரிகள் 03 கிலோ 475 கிராம் எடையுடைய குஷ் போதைப்பொருளை நேற்று கண்டுபிடித்துள்ளனர். இதன் மொத்தப் பெறுமதி 34.75 மில்லியன் ரூபா என இலங்கை சுங்கம் தெரிவித்துள்ளது.

அமெரிக்கா மற்றும் அவுஸ்திரேலியாவில் இருந்து பொரலஸ்கமுவ, வெள்ளவத்தை, மினுவாங்கொட, வெலிசர, நுவரெலியா மற்றும் தலங்கம ஆகிய இடங்களிலுள்ள முகவரிகளுக்கு சுமார் 10 பொதிகள் தபால் மூலம் அனுப்பப்பட்டன.

அந்தப் பொதிகளைப்பெற அவற்றின் உரிமையாளர்கள் முன்வராததால் போதைப்பொருள் தடுப்புப் பிரிவு அதிகாரிகள், தபால் துறை அதிகாரிகள் முன்னிலையில் சுங்கத்துறை அதிகாரிகள் சோதனை நடத்தினர்.

அந்தச் சோதனையின்போது போதைப்பொருள் பதுக்கியிருப்பது கண்டுபிடிக்கப்பட்டது. இந்தப் போதைப்பொருள் மேலதிக விசாரணைகளுக்காக போதைப்பொருள் ஒழிப்புப் பிரிவினரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

## ஜெரோம் மீது...

முன்வைக்கப்பட்ட அடிப்படை உரிமைமீறல் மனு நேற்று விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டபோது சட்டமா அதிபர் சார்பில் நீதிமன்றில் ஆஜரான மேலதிக சொலிஸிட்டர் ஜெனரல் பிரியந்த நாவான நீதிமன்றத்துக்கு இதனை அறிவித்துள்ளார்.

சம்பந்தப்பட்ட போதகருக்கு எதிராக சிவில் மற்றும் அரசியல் உரிமை தொடர்பான சட்டம் மற்றும் தண்டனைச் சட்டக்கோவை என்பவற்றின் அடிப்படையில் குற்றவியல் விசாரணைத் திணைக்களத்தின் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும் அது தொடர்பில் கொழும்பு கோட்டை நீதவான் நீதிமன்றத்துக்கு அறிவிக்கப்பட்டுள்ளதாகவும் மேலதிக சொலிஸிட்டர் ஜெனரல் பிரியந்த நாவான குறிப்பிட்டுள்ளது.

## டெங்கு அபாய...

இரத்த மாதிரியை பெற்றுக்கொள்ளுதல் அவசியம். மேலும், நோய் அறிகுறிகளுடன் இருப்போரிடமிருந்து விலகியிருத்தல் வேண்டும்.

அத்தோடு, பொதுமக்கள் இதுகுறித்து மிகுந்த அவதானத்துடன் இருக்கவேண்டுமெனவும் அவர் மேலும் சுட்டிக்காட்டியுள்ளார்.

இதேவேளை, நாட்டின் 61 சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுகள், டெங்கு அபாய வலயங்களாக அடையாளம் காணப்பட்டுள்ளதாக தேசிய டெங்கு ஒழிப்புப்பிரிவு தெரிவித்துள்ளது.

இதுகுறித்து தேசிய டெங்கு ஒழிப்புப்பிரிவு நேற்று (24) வெளியிட்டுள்ள அறிக்கையில்,

இந்த ஆண்டின் இதுவரையான காலப்பகுதியில் நாட்டில் 36 ஆயிரத்து 584 டெங்கு நோயாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளதுடன் 23 பேர் உயிரிழந்துள்ளனர்.

இதில் அதிகளவிலான டெங்கு நோயாளர்கள் கம்பஹா மாவட்டத்திலேயே பதிவாகியுள்ளனர்.

அதன்படி கம்பஹா மாவட்டத்தில் 8ஆயிரத்து 228 நோயாளர்களும் கொழும்பு மாவட்டத்தில் 7 ஆயிரத்து 652 பேரும் களுத்துறை மாவட்டத்தில் 2 ஆயிரத்து 226 பேரும் திருகோணமலையில் ஆயிரத்து 481 பேரும் மட்டக்களப்பில் ஆயிரத்து 539 பேரும் புத்தளத்தில் 2 ஆயிரத்து 509 நோயாளர்களும் என அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

## காரணமில்லாமல்...

தலைவர் மனோ கணேசன் எம்.பியிடம் இந்த விடயத்தைச் சுட்டிக்காட்டி அவர் பேசினார்.

"பாராளுமன்ற உறுப்பினர் மனோ கணேசனிடம் ஒரு விடயத்தைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றேன். அண்மையில் நாமொரு பட்டியலை வெளியிட்டிருந்தோம். மக்களுக்கு தவறான விடயத்தைப் பரப்பக்கூடாது என்பதற்காக அந்தப் பட்டியலை வெளியிட்டிருந்தோம். இது இருகட்சிகளுக்கிடையே இருக்கும் மோதலல்ல. இது எங்களுடைய துறைசார்ந்த அபிப்பிராயம். இதுதொடர்பில் இராஜாங்க அமைச்சர் செஹான் சேமசிங்கவிடமும் பேசியிருந்தோம். அதன் பின்னரே அந்தப் பட்டியலை வெளியிட்டிருந்தோம்.

மலையகக் கட்சிகளிடையே ஒற்றுமை இருக்க வேண்டும் என்பதை நாம் விரும்புகின்றோமே தவிர, ஒருவரையொருவர் தாக்கிக்கொள்ள வேண்டும் என நினைக்கவில்லை.

தமிழ் முற்போக்குக் கூட்டணியைப் பொறுத்த வரை இன்று நல்லதொரு உறவு உள்ளது. அந்த உறவு தொடரவேண்டும் என்பதையே நாம் விரும்புகின்றோம். ஆனால், கூட்டணிக்குள் உள்ள ஒரு பிரதான கட்சியொன்றின் உறுப்பினர் ஒருவர் தொடர்ச்சியாகவே இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸை சம்பந்தமே இல்லாமல் விமர்சித்து வருகிறார். நாங்கள் கூறிய விடயத்தில் தவறுகள் இருப்பின் அதை விமர்சிக்கும்படி அவரிடம் கேட்டுக்கொள்கிறோம். மலையக மக்கள் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸால் தான் கஷ்டத்தில் உள்ளனர் என்றால் எம்மால் ஏற்றுக்கொள்ள முடியாது.

இன்று அவர் கண்டி மாவட்டத்தில் வந்ததற்கு காரணம் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் தான். வேறு எவராலும் அல்ல - என்றார்.

## ஜனகவுக்கு அனுமதி...

நேற்று (24) கேள்வி எழுப்பினார்.

ஜனக ரத்நாயக்கவை பதவி நீக்குவது தொடர்பிலான விவாதம் பிரதி சபாநாயகர் அஜித் ராஜபக்ஷ தலைமையில் ஆரம்பமானபோது குறுக்கிட்டுப் பேசிய ரவூப் ஹக்கீம் இந்தக் கேள்வியை முன்வைத்தார்.

"இந்தப் பிரேரணையுடன் தொடர்புடைய நபர் விவாதத்தைப் பார்வையிடுவதற்காக பாராளுமன்ற பார்வையாளர் கலரிக்கு வருவதற்கு அனுமதி கோரியிருந்தார். எனினும், பார்வையாளர் கலரி இன்றைய தினம் (நேற்று) மூடப்பட்டிருக்குமென சபாநாயகர் அறிவித்திருந்தார்.

ஆனால், இன்று பாடசாலை மாணவர்கள் கலரியில் அமர்ந்திருக்கிறார்கள். இந்தளவுக்கு பயப்படவேண்டிய அவசியம் என்னவென்று நான் கேட்கிறேன். முறையற்ற வகையில் ஒருவரை பதவியிலிருந்து நீக்க முற்படும்போது அது தொடர்பான விவாதத்தை அவரால் பார்வையிட அனுமதிக்க வேண்டுமல்லவா?" என ஹக்கீம் எம்.பி. கேள்வி எழுப்பினார்.

இதற்குப் பதிலளித்த பிரதி சபாநாயகர், பாடசாலை மாணவர்களுக்கும் மக்கள் பிரதிநிதிகளால் பரிந்துரைக்கப்படுபவர்களுக்குமே கலரியில் பார்வையிட அனுமதி வழங்கப்பட்டுள்ளது என்றார்.

## பாடசாலை சீருடை...

மற்றும் வடமேல் மாகாணங்களிலுள்ள பாடசாலை மாணவர்களுக்கு விநியோகிக்கப்பட்டுள்ளதாக கல்வியமைச்சு தெரிவித்துள்ளது.

உள்ளூர் விநியோகஸ்தர்களால் வழங்கப்பட்ட 3,831,000 மீற்றர் சீருடைத் துணியில் 3,561,000 மீற்றர் இதுவரை விநியோகிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் மீதமுள்ள 27,000 மீற்றர் சீருடைத் துணி காலி, களுத்துறை மற்றும் சிலாபம் ஆகிய இடங்களில் இறுதிக் கட்டத்தின் கீழ் விநியோகிக்கப்படுகின்றன. பாடசாலைச் சீருடைக்கான தேவை 12,694,000 மீற்றர் எனவும், 4.2 மில்லியன் பாடசாலை மாணவர்கள் மற்றும் மாணவ பிக்குகளுக்கு இது விநியோகிக்கப்படுமெனவும் கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது.

## அலி சப்ரிக்கு...

3.5 கிலோகிராம் தங்கம் மற்றும் 91 கையடக்கத் தொலைபேசிகளே இவ்வாறு அரசுடைமையாக்கப்பட்டுள்ளதுடன் பாராளுமன்ற உறுப்பினர் அலி சப்ரி ரஹீமுக்கு 75 இலட்சம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டுள்ளதாக பதில் நிதி அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

பாராளுமன்ற உறுப்பினர் அலி சப்ரி ரஹீம் நேற்றுமுன்தினம் (23) காலை டுபாயிலிருந்து ஃப்ளை டுபாய் விமானத்தில் இலங்கை வந்தபோது, இலங்கை சுங்கத் திணைக்கள அதிகாரிகளால் கைதுசெய்யப்பட்டார்.

அதன்படி அலி சப்ரி ரஹீமின் பயணப் பையிலிருந்து 3.5 கிலோகிராம் தங்கம் மற்றும் 91 ஸ்மார்ட் கையடக்கத் தொலைபேசிகளும் கைப்பற்றப்பட்டுள்ளன.

இந்நிலையில், சட்டவிரோதமான முறையில் நாட்டுக்குள் தங்கம் மற்றும் கையடக்கத் தொலைபேசிகளை கொண்டுவந்த குற்றச்சாட்டில் அவருக்கு 75 இலட்சம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டுள்ளதுடன், அவர் கொண்டுவந்த அனைத்து பொருட்களையும் பறிமுதல் செய்ய உத்தரவிடப்பட்டதாக சுங்க ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

கட்டுநாயக்க விமானநிலையத்தின் விசேட விருந்தினர் பகுதியின் ஊடாக மேற்படி தங்கம் மற்றும் ஸ்மார்ட் கையடக்கத் தொலைபேசிகளை கொண்டுவருவதற்கான முறையான சுங்கப் பரிசோதனை நேற்று (24) அதிகாலை 4 மணியளவில் நிறைவடைந்ததாக சுங்கத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

மேற்படி பாராளுமன்ற உறுப்பினரால் சட்டவிரோதமான முறையில் நாட்டுக்கு கொண்டுவரப்பட்ட தங்க பிஸ்கட்கள், தங்க ஆபரணம் மற்றும் ஸ்மார்ட் கையடக்கத் தொலைபேசிகளை பறிமுதல் செய்வதற்கு உத்தரவிடப்பட்டுள்ளதுடன் அவருக்கு ரூ. 75 இலட்சம் அபராதமும் விதிக்கப்பட்டுள்ளது.

இதன்படி நேற்று (24) காலை அபராதத் தொகையை செலுத்திவிட்டு அவர் சுங்க தலைமையகத்திலிருந்து வெளியேறியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

பாராளுமன்ற உறுப்பினர் அலி சப்ரி ரஹீமினால் சட்டவிரோதமாக இலங்கைக்கு கொண்டுவரப்பட்ட தங்கத்தின் பெறுமதி 74 மில்லியன் ரூபா என மதிப்பிடப்பட்டுள்ளதுடன், 91 ஸ்மார்ட் கையடக்கத் தொலைபேசிகளின் பெறுமதி 4.2 மில்லியன் ரூபா என்றும் சட்டவிரோத பொருட்களின் மொத்த பெறுமதி 78.2 மில்லியன் ரூபா என்றும் இலங்கை சுங்கத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

## ஜனகவை நீக்க...

தனிப்பட்ட அரசியல் நோக்கங்களுக்காக தன்னிச்சையாக செயற்பட்டு பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவின் அதிகாரத்தை அவர் துஷ்பிரயோகம் செய்துவிட்டதாகவும் அதனால் மின், எரிபொருள் மற்றும் நீர் விநியோகப் பிரிவுக்கு பாரிய இழப்புகள் ஏற்பட்டுள்ளதாகவும் தெரிவித்து ஆளுந்தரப்பு சார்பில் கல்வி அமைச்சர் சுசில் பிரேம ஜயந்தவினால் இந்தப் பிரேரணை பாராளுமன்றத்தில் முன்வைக்கப்பட்டது.

அமைச்சினால் முன்னெடுக்கப்பட்ட ஒவ்வொரு வேலைத்திட்டங்களுக்கும் ஜனக ரத்நாயக்க தடையாக இருந்ததாகவும் அவர் தனிப்பட்ட நோக்கங்களுக்காகவே செயற்பட்டதாகவும் இந்த விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றிய மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சர் காஞ்சன விஜேசேகர தெரிவித்தார்.

இது தொடர்பிலான விவாதம் ஆளும், எதிர்த்தரப்பு உறுப்பினர்களின் பங்கேற்புடன் நேற்றுமாலை 05 மணிவரை இடம்பெற்றது. அதன் பின்னர் சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தனவால் வாக்கெடுப்புக்கு அழைப்பு விடுக்கப்பட்டது.

வாக்கெடுப்பின் முடிவில் 46 மேலதிக வாக்குகளால் பிரேரணை நிறைவேறியதாக சபாநாயகர் அறிவித்தார்.

இந்தப் பிரேரணைக்கு எதிராக புத்தளம் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் அலி சப்ரி ரஹீம் வாக்களித்துள்ளார்.

சட்டவிரோதமான முறையில் சுமார் மூன்றரை கிலோ தங்கத்தை இலங்கைக்குள் கொண்டு வந்தபோது, சுங்கப் பிரிவினரால் நேற்றுமுன்தினம் கைது செய்யப்பட்டு அதற்கான அபராதத் தொகையை செலுத்திய ரஹீம் எம்.பி. நேற்று பாராளுமன்றத்துக்கு வருகைதந்திருந்தார்.

இதேவேளை, ஐக்கிய மக்கள் சக்தியை பிரதிநிதித்துவப்படுத்தும் பாராளுமன்ற உறுப்பினர்களான வடிவேல் சுரேஷ், ஏ.எச்.எம்.பௌசி, குமார வெல்கம ஆகியோர் பிரேரணைக்கு ஆதரவாக வாக்களித்தனர்.

பாராளுமன்ற வாக்கெடுப்பு முடிவுகளின் பிரகாரம் 2002ஆம் ஆண்டின் 35ஆம் இலக்க இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுச் சட்டத்தின் ஏழாம் பிரிவின்படி ஆணைக்குழுவின் தலைவர் பதவியிலிருந்து ஜனக ரத்நாயக்க நேற்று முதல் நீக்கப்பட்டுள்ளார்.

## கல்முனை உப பிரதேச...

முன்னாள் உறுப்பினர் ஏ.கலீலுர் ரஹ்மான் ஆகியோர் இடையீட்டு மனுதாரர்களாக நுழைந்த கல்முனை உப பிரதேச செயலக வழக்கு எதிர்வரும் ஜூன் மாதம் 07ஆம் திகதிக்கு தவணையிடப்பட்டுள்ளது.

கல்முனை உப பிரதேச செயலக தரமுயர்வு தொடர்பில் பல்வேறு சிக்கல்கள் நீடித்து வரும் சூழ்நிலையில், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் தவராசா கலையரசன் மேன்முறையீட்டு நீதிமன்றில் கல்முனை விவகாரம் தொடர்பில் சில மாதங்களுக்கு முன்னர் தாக்கல் செய்திருந்த வழக்கு நேற்று விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட போதே இந்த அறிவிப்பு நீதிபதிகள் குழாமினால் விடுக்கப்பட்டுள்ளது.

பாராளுமன்ற உறுப்பினர் தவராசா கலையரசன் தாக்கல் செய்திருந்த வழக்கின் இடையீட்டு மனுதாரர்களாக கல்முனையை சேர்ந்த பாராளுமன்ற உறுப்பினர் சட்டத்தரணி எச்.எம்.எம். ஹரீஸ், மற்றும் முன்னாள் மாநகர சபை உறுப்பினர் சிரேஷ்ட விரிவுரையாளர் ஏ.கலீலுர் ரஹ்மான் ஆகியோர் நீதிமன்றுக்கு தாக்கல் செய்திருந்த இடையீட்டு மனுவை ஏற்றுக்கொள்ளுமாறு நீதிமன்ற குழாமுக்கு அவர்கள் சார்பில் ஆஜரான சட்டத்தரணிகள் கோரிக்கை விடுத்திருந்தபோது வழக்காளியான பாராளுமன்ற உறுப்பினர் த. கலையரசன் சார்பில் ஆஜரான ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ. சுமந்திரன் அந்த கோரிக்கைக்கு எதிராக தனது கடுமையான ஆட்சேபனையை வெளியிட்டார்.

இன்றைய தினம் இடைக்கால தீர்வை நீதிமன்றம் வழங்கவிருந்த நிலையில், இவ்வாறான இடையீட்டு மனுவை நீதிமன்றம் ஏற்கக் கூடாது என்றும் இடைக்கால தீர்வை நீதிமன்றம் வழங்க வேண்டும் என்றும் ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ. சுமந்திரன் தனது வாதத்தில் நீதிமன்றுக்கு முன்வைத்தார்.

எதிர்தரப்பினரிடமும், சட்டமா அதிபர் திணைக்களத்திடமும் இந்த இடையீட்டு மனு தொடர்பில் வினவிய நீதிபதிகள் குழாம் இந்த இடையீட்டு மனுவை ஏற்பது தொடர்பில் ஜனாதிபதி சட்டத்தரணி சுமந்திரன் தரப்பினது ஆட்சபனையை வழங்க ஒரு வார கால அவகாசமும் இடையீட்டு மனுதாரர்களின் ஆட்சபனைக்கான பதிலை நீதிமன்றுக்கு வழங்க ஒருவாரம் அவகாசம் வழங்கியுள்ளது.

இதனடிப்படையில் எதிர்வரும் ஜூன் 07ம் திகதிவரை இந்த வழக்கு ஒத்தி வைக்கப்பட்டுள்ளது.

அன்றைய தினம் இந்த இடையீட்டு மனுவை ஏற்பதா இல்லையா என்பது தொடர்பிலான விவாதம் நடைபெற உள்ளது.

அந்த விவாதத்தின் பின்னரே இடைக்கால தீர்வுகள் வழங்குவது தொடர்பில் நீதிமன்றில் எடுத்துக்கொள்ளப்படும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

## சட்டவிரோதமாக வெளிநாடு...

வெளியேறி அந்த நாடுகளில் தஞ்சமடைவோருக்கு அரச நிதியை செலவு செய்ய தயாரில்லை என்பதுடன் அவ்வாறானவர்களை பொறுப்பேற்பதற்கு தாம் கடமைப்படவில்லை என்று தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சர் மனுஷ நாணயக்கார தெரிவித்தார்.

அமைச்சின் அலுவலகத்தில் நேற்று முன்தினம் (23) இடம்பெற்ற விசேட செய்தியாளர் சந்திப்பின்போதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

அவர் தொடர்ந்து கருத்து தெரிவிக்கையில்,

வெளிநாட்டு வேலை வாய்ப்பை பொறுத்தவரையில் மக்களை ஏமாற்றும் விடயங்கள் மிக சுலபமாக இடம்பெறுகின்றன. இதுதொடர்பில் பல்வேறு விழிப்புணர்வு நடவடிக்கைகளையும் முன்னெடுத்துள்ளோம். எவ்வளவு விழிப்புணர்வு ஏற்படுத்தினாலும் அதனை ஏற்றுக்கொள்ளாத நிலைமை சமூகத்தில் நிலவுகிறது. எவ்வளவு தெளிவுப்படுத்தினாலும் இறுதியில் வெளிநாட்டு வேலைவாய்ப்பு என்ற போர்வையில் சட்டவிரோதமாக மனிதர்களை கடத்தும் நபர்களிடம் சிக்கிக்கொள்கிறார்கள்.

ஒன்று, இலங்கையிலிருந்து வெளியேறும்போது சட்டவிரோதமாக நாட்டிலிருந்து புறப்பட்டு சிக்கல்களுக்குள்ளாகிறார்கள். எண்ணிக்கை அடிப்படையில் இந்த செயற்பாடுகள் ஓரளவு குறைவடைந்துள்ளன. இருந்தபோதும் சட்டவிரோத வெளியேற்றங்கள் இன்னும் இடம்பெற்றுக்கொண்டே இருக்கின்றன.

பல்வேறு முறைகளில் ஏமாற்றி அல்லது தெரிந்தும் ஏமாற்றமடைந்து வெளிநாட்டுக்குச் செல்லும் நபர்களை விமான நிலையத்திலிருந்து வெளியேற்ற நடவடிக்கை எடுத்துள்ளோம். இதற்கு மேதிகமாக திட்டமிட்ட செயற்பாடுகள் தொடர்பான விசாரணைகளை குற்றவியல் விசாரணை திணைக்களத்திடம் ஒப்படைக்கவும் நடவடிக்கை எடுத்துள்ளோம்.

இவ்வாறான செயற்பாடுகளை மட்டுப்படுத்த எவ்வளவு நடவடிக்கை எடுத்தாலும் சுற்றுலா விசாவினூடாக இந்தியா அல்லது வேறு நாடுகளுக்குச் செல்லும்போது சந்தேகம் இருந்தாலும் அவர்களை தடுத்து நிறுத்த முடியாது. உறவினர்களை பார்ப்பதற்காக அல்லது தனிப்பட்ட காரணங்களுக்காக செல்வதாக குறிப்பிட்டு வெளிநாடுகளுக்குச் சென்று தற்போதுவரையில் அநேகமானவர்கள் சிக்கலை சந்தித்திருக்கிறார்கள். அவ்வாறானவர்களே தூதுவர் அலுவலகங்களுக்கு முன்னால் அல்லது வேறு இடங்களில் அரசாங்கத்தை விமர்சித்துக் கொண்டிருக்கிறார்கள்.

எது எவ்வாறாயினும், சட்ட ரீதியாக வெளிநாடு செல்பவர்களுக்கு முழு பாதுகாப்பை வழங்கக் கூடிய கடமை அரசாங்கத்துக்கு இருக்கிறது. இருந்தபோதும் ஊழல்வாதிகளிடம் ஏமாற்றமடைந்து தெரிந்து கொண்டே அவர்களுடன் இணைந்து அவர்களின் ஊழலில் ஒரு பங்குதாரராக வெளிநாடுகளுக்கு சென்று அங்கு பணம் உழைத்துக்கொண்டு அரசாங்கத்தின் பணத்தில் மீண்டும் நாடு திரும்பும் வேலைத்திட்டமொன்று செயற்பாட்டில் உள்ளது என்பதை அறிந்துக்கொண்டுள்ளோம்.

அதனால், சட்ட ரீதியான பதிவில்லாமல் வெளிநாடுகளுக்கு செல்பவர்கள் யாராக இருந்தாலும் அவர்களை பாதுகாப்பு விடுதிகளில் இணைத்துக்கொள்ளப் போவதில்லை. அதற்கான சட்டங்களும் கடுமையாக்கப்பட்டுள்ளன. சட்டவிரோதமாக செல்பவர்களை மீண்டும் அங்கிருந்து அரசாங்கத்தின் செலவில் நாட்டுக்கு அழைத்துவர நடவடிக்கை எடுக்கப்படமாட்டாது.

அவ்வாறு சென்றவர்களுக்கு நிவாரணத்தை வழங்க இதற்கு முன்னர் நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தாலும், தற்போது அந்த ஏற்பாடுகள் அனைத்தும் தளர்த்தப்பட்டுள்ளன. ஆகவே, சட்டவிரோதமாக வெளிநாடுகளுக்கு செல்பவர்களுக்காக இனிமேல் அரச நிதியை செலவு செய்யப்போவதில்லை என்றார்.

## பதுளை பணிப்பெண்...

முற்போக்கு கூட்டணியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான மனோ கணேசன் நேற்று (24) சபையில் பகிரங்கமாக கோரிக்கை முன்வைத்தார்.

அவரின் உரைக்கு இடையூறு ஏற்பட்டதைத் தொடர்ந்து, மனோ எம்.பிக்கு ஆதரவாக எதிர்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச, தேசிய சுதந்திர முன்னணியின் தலைவர் விமல் வீரவங்ச ஆகியோர் வாதிட்டிருந்தனர்.

இதன்போது தொடர்ந்து உரையாற்றிய மனோ எம்.பி,

பதுளை மாவட்டம், தெமோதரை பகுதியைச் சேர்ந்த ராஜகுமாரி என்றழைக்கப்படும் பெண், கலைஞர் சுதர்மா ஜெயவர்தனவின் வீட்டில் தங்கி பணிபுரிந்து வந்த நிலையில் வெலிகடை பொலிஸ் நிலையத்தில் உயிரிழந்துள்ளார். அவரை கொலை செய்துவிட்டார்கள் என்றே நாங்கள் கருதுகிறோம்.

பொலிஸ் விசாரணைகள் இடம்பெற்று வந்தாலும், உயிரிழந்த பெண்ணின் சடலத்தை மீண்டும் தோண்டி எடுத்து மருத்துவ பரிசோதனைக்கு உட்படுத்த வேண்டும். தோண்டி எடுத்த சடலத்தை பேராதெனிய பல்கலைக்கழகத்தின் வைத்திய பீடத்திலுள்ள சட்ட வைத்திய அதிகாரிகளினூடாக பரிசோதனைக்கு உட்படுத்த வேண்டும். அதனைக் கட்டாயம் செய்ய வேண்டும் என்று வலியறுத்தினார்.

அவரது உரைக்கு இடையூறு ஏற்பட்டதைத் தொடர்ந்து மனோ எம்.பிக்கு ஆதரவாக கருத்து தெரிவித்த விமல் வீரவங்ச எம்.பி.,

மனோ எம்.பி. சபையில் முன்வைத்த பிரச்சினை மிகவும் சிக்கலுக்குரியதாகும். மனசாட்சியுள்ள நபர்களால் இந்தப் பிரச்சினையை கவனத்தில் கொள்ளாமல் இருக்க முடியாது.

பெருந்தோட்டத்தை சேர்ந்த அந்த அப்பாவி பெண்ணை, சுதர்மான என்றழைக்கப்படும் குறித்த பெண் தங்க ஆபரணம் காணாமல் போய்விட்டதாக தெரிவித்து இராஜகிரிய பொலிஸாரிடம் ஒப்படைத்துள்ளார்.

சுதர்மா என்பவரின் முன்னாலேயே உயிரிழந்த பெண் மீது தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. அதனை பாரத்துக்கொண்டே அவரின் நண்பர்களுக்கு தொலைபேசியினூடாக உரையாடியுள்ளார். இவ்வாறு பொலிஸாரினால் அடித்து ஒருவரை கொலை செய்வதற்கு அதிகாரம் இல்லை. அந்த அப்பாவி பெண் மற்றைவர்களால் கொலை செய்யப்படுவதற்காக கொழும்புக்கு வரவில்லை. தங்க ஆபரணம் காணாமல் போய்விட்டது என்பதற்காக அந்த பெண்மீது குற்றஞ்சாட்டில அவரின் உயிரை காவுக்கொடுத்திருக்கிறார்கள். அதற்கு இடமளிக்க முடியாது. அதனால், இதுதொடர்பில் கடுமையான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். என்ன நடவடிக்கை எடுக்க போகிறீர்கள் என்பதையும் குறிப்பிட வேண்டும்.

பெருந்தோட்ட பெண்கள் அவர்களின் பொருளாதார பிரிச்சினைக்காகவே கொழும்புக்கு வருகிறார்கள் என்றார்.

அதனை தொர்ந்து

கருத்து தெரிவித்த மனோ எம்.பி,

உயிரிழந்து பெண்ணின் இறுதி கிரியைகள் நிறைவடைந்துவிட்டன. ஆகவே, நீதிமன்றத்தின் அனுமதியுடன் சடலத்தை வெளியில் எடுத்து மீண்டும் பரிசோதனைகளை முன்னெடுக்குமாறு பொலிஸாருக்கு அறிவிக்க அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும். இந்த மரணத்தில் எங்களுக்கு சந்தேகம் ஏற்பட்டுள்ளது. அவதானித்து கொண்டே இருக்கிறோம். ஏதாவது இடம்பெற்றிருக்குமாக இருந்தால் பொறுமையாக இருக்க மாட்டோம். இவ்வாறு மக்களை கொலை செய்ய இடமளிக்க முடியாது என்றார்.

அதற்கு ஆதரவாக கருத்து தெரிவித்த எதிர்க் கட்சி தலைவர் சஜித் பிரேமதாச,

பெருந்தோட்ட மக்கள் என்பவர்கள் மிகவும் கஷ்டத்தின் மத்தியில் பல்வேறு பொருளாதார நெருக்கடிக்களின் மத்தியில் வாழ்ந்துவருபவர்கள். இந்தச் சம்பவத்தில் உயிரிழந்த பெண் தனது குடும்பத்துக்காகவே கொழும்புக்கு வந்துள்ளார். இந்த விடயத்தில் நீதி நிலைநாட்டப்படவில்லை என்று கடுமையாக சந்தேகிக்கிறோம். ஆகவே, இதில் பரந்துப்பட்ட விசாரணைகள் முன்னெடுக்கப்பட வேண்டும் என்றார்.

அதற்கு பதிலளித்து உரையாற்றி பிரதமர் இந்த விடயம் குறித்து கவனம் அசெலுத்துவதாகவும் இந்தி விடயங்கள் குறித்து சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு அறிவிக்க நடவடிக்கை எடுத்துள்ளதாகவும் அறிவித்தார்.

## உள்ளூராட்சி மன்ற...

இந்தக் கலந்துரையாடல்கள் தொடர்பான அறிக்கையை இம்மாத இறுதியில் அரசாங்கத்திடம் சமர்ப்பிக்கவுள்ளோம்" - இவ்வாறு அந்தக் குழுவின் தலைவர் மஹிந்த தேசப்பிரிய தெரிவித்தார்.

தேசிய எல்லை நிர்ணயக் குழுவின் அலுவலகத்தில் நேற்று முன்தினம் (23) இடம்பெற்ற கலந்துரையாடலின் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும்போதே இதனைக் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

தேசிய எல்லை நிர்ணய ஆணைக்குழுவின் இறுதி அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டதன் பின்னர் அதிலுள்ள பரிந்துரைகள் குறித்து அரசியல்கட்சிகளுடன் கலந்துரையாடும்படி விடயத்துக்குப் பொறுப்பான அமைச்சரான பிரதமர் தினேஷ் குணவர்தன எங்களுக்கு அறிவித்துள்ளார். அதற்காக ஆறு கலந்துரையாடல்களை முன்னெடுப்பதற்கு நாங்கள் ஏற்பாடு செய்துள்ளோம். இன்று (நேற்று முன்தினம்) காலை இடம்பெற்ற கலந்துரையாடலுக்கு 11 கட்சிகளுக்கு அழைப்பு விடுத்திருந்தோம். ஆனால், அந்தக் கலந்துரையாடலில் ஏழு கட்சிகளே பங்குப்பற்றியிருந்தன. ஒரு கட்சி தமக்கு வேறொரு தினத்தைக் கோரியிருந்தது. ஏனைய மூன்று கட்சிகளும் எந்த அறிவிப்பையும் விடுக்கவில்லை.

இந்தக் கலந்துரையாடலில் பங்குபற்றிய கட்சிகள் வேறுபட்ட யோசனைகளை முன்வைத்திருந்தன. குறிப்பிடப்படும் மாற்றங்கள் தொடர்பில் மீளாய்வுக் குழுவினூடாக மாற்றிக்கொள்ள முடியும். ஆனால், ஒருசில சபைகளுக்கு நாங்கள் பரிந்துரை செய்துள்ள உறுப்பினர்களை விட மேலும் உறுப்பினர்களின் எண்ணிக்கையை அதிகரிக்குமாறு கோருகிறார்கள். உதாரணமாக, கொழும்பு மாவட்டத்தில் தொகுதி அடிப்படையில் 37 உறுப்பினர்களைத் தெரிவுசெய்ய பரிந்துரை செய்திருந்தோம். இருந்தபோதும், 38,39, 40 அல்லது 41 உறுப்பினர்கள் வரையில் அதிகரிக்க வேண்டும் போன்ற யோசனைகளே முன்வைக்கப்பட்டன.

இந்நிலையில், உள்ளூராட்சி சபைகளுக்கான உறுப்பினர்களின் எண்ணிக்கையை மேலும் அதிகரிப்பதானால் அதனை புதிய எல்லை நிர்ணய குழுவினால் மாத்திரமே முன்னெடுக்கப்படும். எமது குழுவின் காலம் இம்மாதம் இறுதியுடன் நிறைவடைகின்றது.

26ஆம் திகதி வரை (நாளை) இந்தக் கலந்துரையாடல்கள் இடம்பெறவுள்ளன. 25 ஆம் திகதி (இன்று) காலை மற்றும் மாலை நேரத்திலும், 26 ஆம் திகதி (நாளை) காலை மற்றும் மாலை நேரத்திலும் இந்தக் கலந்துரையாடல்கள் இடம்பெறவுள்ளதுடன் பெரும்பான்மை அரசியல் கட்சிகளுடன் மூன்று பேச்சுவார்த்தைகளும் தமிழ்க் கட்சிகளுடன் மூன்று பேச்சுவார்த்தைகளும் முன்னெடுக்கப்படவுள்ளன.

பிரதான அறிக்கைக்கு மேலதிகமாக இந்தக் கலந்துரையாடல்களில் முன்வைக்கப்படும் விடயங்கள் மற்றும் முன்வைக்கப்படும் யோசனைகள் என்பவற்றை அடிப்படையாகக் கொண்ட அறிக்கையொன்றை இம்மாதம் 31 ஆம் திகதியாகும்போது ஜனாதிபதி மற்றும் பிரதமர் ஆகியோருக்கு சமர்ப்பிக்க எதிர்பார்த்துள்ளோம்.

எங்களால் செய்யப்பட்ட திருத்தங்களை மீண்டும் திருத்த முடியாது. எங்களால் செய்யப்பட்ட திருத்தங்கள் சரியானது என்ற நிலைப்பாட்டிலேயே நாங்கள் இருக்கிறோம். ஆனால், எங்களுக்கு கொடுக்கப்பட்ட எல்லை நிர்ணயத்தின் அடிப்படையிலேயே எங்களின் இந்த நிலைப்பாடு இருக்கின்றது. 5,092 ஆக இருந்த உறுப்பினர்களின் எண்ணிக்கையை 2,882 ஆக அதாவது, நூற்றுக்கு 45 சதவீதம் குறைக்குமாறே எங்களுக்கு அறிவித்திருந்தார்கள்.

அவ்வாறு குறைக்கும்போது இம்முறை உறுப்பினர்களின் எண்ணிக்கை பெரும் எண்ணிக்கையில் குறைவடையும். ஊதாரணமாக குறிப்பிடுவதென்றால் அம்பலாங்கொடை நகரசபையில் 12 தொகுதிகள் இருந்தன. தற்போது அந்தத் தொகுதிகள் 06 ஆக குறைக்கப்பட்டுள்ளன. இரு தொகுதிகளை ஒன்றாக இணைத்து ஒரு தொகுதியாக மாற்றியுள்ளோம். உறுப்பினர்களின் எண்ணிக்கை குறைவடையும்போது இந்நிலை உருவாகும். அதனைத் தவிர்க்கவும் முடியாது.

இலங்கையைப் பொறுத்த வரையில் தேர்தலை நடத்தும் அதிகாரம் தேர்தல் ஆணைக்குழுவுக்கு இல்லை. எமது நாட்டில் தேர்தலை நடத்துவதற்கு முறையான நாட்காட்டி இல்லை.

ஜனாதிபதி மற்றும் பொதுத் தேர்தல் என்பனவே சட்டப்படி முறையாக இடம்பெறுகின்றன. தற்போதுள்ள நிலைமையில் ஜனாதிபதித் தேர்தலையே உரிய நேரத்தில் நடத்த முடியும். அதனையும் பாராளுமன்றத்தால் மாற்ற முடியும். இருந்தபோதும், தேர்தல் திகதியை குறிப்பிட முடியாது. 2017 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் முதல் மாகாண சபைத் தேர்தலை திருடர்கள் எடுத்துச் சென்றுவிட்டார்கள். தேர்தல் ஆணைக்குழு, பாராளுமன்றம், ஜனாதிபதி மற்றும் நீதிமன்றம் என்பன தலையிட்டே இதற்கொரு தீர்வை வழங்கவேண்டும் என்றார்.

# முள்ளந்தண்டு பாதிப்படைவோரின் எண்ணிக்கை சடுதியாக உயர்வு

## வீதி விபத்துகளே பிரதான காரணமென்கிறது வைத்தியத்துறை

(நா.தினுஷா)

வீதி விபத்துகள் அல்லது தாக்குதல் சம்பவங்களினால் முள்ளந்தண்டு முறிவு உட்பட காயங்களுக்குள்ளாகி வைத்தியசாலையில் அனுமதிக்கப்படுபவர்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளதாகவும் மாதாந்தம் கொழும்பு தேசிய வைத்தியசாலையில் முள்ளந்தண்டு பாதிப்புக்குள்ளானவர்கள் சுமார் 100 பேர் வரை அனுமதிக்கப்படுவதாகவும் கொழும்பு தேசிய வைத்தியசாலையின் எலும்பு முறிவு அறுவை சிகிச்சை விசேட வைத்திய நிபுணர் கீர்த்தி அபயஜீவ தெரிவித்தார்.

இவ்வாறு அனுமதிக்கப்படுபவர்களுள் 15 – 20 வரையானவர்கள் வாழ்நாள் முழுவதும் அங்கவீனத்துக்குள்ளாவதாகவும் அவர் சுட்டிக்காட்டினார்.

சுகாதார மேம்பாட்டு பணியகத்தில் நேற்று (24) இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பின்போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

இதுதொடர்பில் அவர் மேலும் குறிப்பிடுகையில்,

வீதி விபத்துகளினால் ஏற்படும் முள்ளந்தண்டு முறிவு அல்லது காயம் என்பன மிகவும் ஆபத்தானதொன்றாகும். இவ்வாறு முள்ளந்தண்டு பாதிப்புக்குள்ளாகின்றவர்கள் ஒருவேளை குணமாகலாம். ஆனால், குணமாகாத தரப்பினரும் இருக்கிறார்கள். அவர்கள் வாழ்நாள் முழுவதும் விசேட தேவையுடையவர்களாக இருக்க நேரிடும் சந்தர்ப்பங்களும் ஏற்படுகின்றன.

விபத்தின்போது அல்லது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டதன் பின்னர் இவ்வாறு விசேட தேவையுடையவர்களாக மாறுவதற்கான வாய்ப்புகள் இருக்கின்றன. முள்ளந்தண்டு காயம் அல்லது முறிவு இருதயம் வரையில் பாதிப்பை ஏற்படுத்தி உடல் முழுவதையும் செயலிழக்கச் செய்வதற்கான சந்தர்ப்பங்கள் இருக்கின்றன.

வீதி விபத்துகள் அல்லது தாக்குதல் சம்பவங்களினால் முள்ளந்தண்டு முறிவு உட்பட காயங்களுக்குள்ளாகி வைத்தியசாலையில் அனுமதிக்கப்படுபவர்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது. கொழும்பு தேசிய வைத்தியசாலையில் மாத்திரம் முள்ளந்தண்டு பாதிப்புக்குள்ளானவர்கள் சுமார் 100 பேர் வரை மாதாந்தம் அனுமதிக்கப்படுகின்றனர்.


இவர்களுள் 15 – 20 வரையிலானவர்கள் வாழ்நாள் முழுவதும் அங்கவீனர்களாகும் நிலைமை ஏற்படுகிறது. அவர்கள் தொடர்ந்து குறைந்து 3 மாதங்கள் வரையில் வைத்தியசாலையில் தங்கியிருந்து சிகிச்சைப் பெற்றுக்கொள்கிறார்கள். இது நோயாளர்களுக்கு மாத்திரமின்றி, வைத்தியசாலையின் செலவுகளையும் அதிகரிக்கிறது.

கீழே விழுதல், வீதி விபத்துகள், தாக்குதல்கள் போன்றச் சம்பவங்களும் முள்ளந்தண்டு பாதிப்பை அதிகரிக்கின்றன.

அதேபோன்று விபத்துகளினாலும் முள்ளந்தண்டு பாதிப்புகள் ஏற்படுகின்றன என்றும் அவர் தெரிவித்தார்.

# 15,000 குடும்பங்கள் பயன்படுத்தும் குடிநீரில் மலக்கழிவுகள் கலந்துள்ளதாக குற்றச்சாட்டு

## பிரச்சினையை தீர்க்க கம்பளை, தொழுவ பகுதியில் இன்று விசேட கலந்துரையாடல்


(கலஹா செய்தியாளர்)

கம்பளை, தொழுவ பிரதேச செயலகத்துக்குட்பட்ட பகுதிகளுக்கு மனித பாவனைக்காக வழங்கப்படும் குடிநீரில் மலக்கழிவுகள் கலந்திருப்பதாக சுகாதாரப் பிரிவினர் தெரிவிக்கின்றனர்.

மேற்படி குடிநீர்ப் பிரச்சினைக்கு உடனடியாக தீர்வுகாணும் நோக்கில் இன்று (25) தொலுவ ஸ்ரீபிம்பாராமய விகாரையில் இராஜாங்க அமைச்சர் அனுராத ஜயரட்ண மற்றும் பிரதேச செயலாளர் யமுனா தயாரட்ண ஆகியோரின் இணைத் தலைமையில் கம்பளை உடபளாத்த பிரதேச செயலாளர் மற்றும் பொது சுகாதார வைத்திய அதிகாரிகள் உட்பட அரச அதிகாரிகள் குழுவினருடனான கலந்துரையாடல் ஒன்று இடம் பெற ஏற்பாடாகியுள்ளது.

மேலும், ஈ கோளைப் பக்டீரியா தொற்றுகிருமிகள் கலந்துள்ள நீரை அருந்தியமையினாலேயே தொலுவ குருகெலே பிரதேசத்தைச் சேர்ந்த 17 வயது மாணவி உயிரிழந்தமை சுகாதார தரப்பினரால் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

தொலுவ பிரதேசத்துக்குட்பட்ட பல்லேதெல் தொட்ட, வாரியகல, புபுரஸ்ஸ, லெகுந்தெனிய, கொங்கா ஓயா ஆகிய பிரதேசங்களிலிருந்து ஓடைகள், நீரூற்றுகள் உட்பட 31 நீர் நிலைகளிலிருந்து பெறப்படும் மேற்படி நீரினை தொலுவ பிரதேச செயலகத்துக்குட்பட்ட 15,000 குடும்பங்களும் உடபளாத்த பிரதேச செயலகத்துக்குட்பட்ட ஒரு பகுதியினரும் குடிநீராக பயன்படுத்தி வருகின்றனர்.

மேற்குறிப்பிட்ட நீர் நிலைகளை பரீட்சித்துப் பார்த்ததில் மனித குடியிருப்புகளிலிருந்து வெளியேறும் கழிவுநீர் மற்றும் மலசல கழிவுகளை வடிகான்களில் வெளியேற்றுதல், குரங்கு பன்றிகளின் எச்சங்கள் என்பன கலந்துள்ளமை தெரியவந்துள்ளது.

# 14 வயதான பாடசாலை சிறுவன் துஷ்பிரயோகம்

(கெலும் குணதிலக்க)

மொனராகலை வெதிகும்புர பிரதேச பாடசாலை ஒன்றில் கல்வி கற்கும் 14வயதான சிறுவனை துஷ்பிரயோகத்துக்குட்படுத்தியதாக அதே பாடசாலையைச் சேர்ந்த 18 வயது மாணவன் ஒருவரை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

குறித்த சம்பவம் மொனராகலை வெதிகும்புர பிரதேசத்தில் இடம்பெற்றுள்ளது. பாதிக்கப்பட்ட குறித்த சிறுவன் தனது சிறிய தந்தையின் வீட்டுக்கு வந்தபோது, சந்தேகநபர் தன்னுடைய அறையில் வைத்தும் தந்தையின் அறையில் வைத்தும் குறித்த சிறுவனை பாலியல் துஷ்பிரயோகத்துக்குட்படுத்தியுள்ளதாக விசாரணைகளின் ஊடாக கண்டறியப்பட்டுள்ளது.

சந்தேகநபரும் பாதிக்கப்பட்ட சிறுவனும் உறவினர்கள் என்பதுடன் கடந்த பெப்ரவரி மாதம் முதல் பல சந்தர்ப்பங்களில் இவ்வாறு பாலியல் துஷ்பிரயோகத்துக்கு உட்படுத்தியுள்ளார் எனவும் இதனை யாரிடமும் சொல்லவேண்டாம் எனவும் சந்தேகநபர் அச்சுறுத்தியுள்ளார்.

பாதிக்கப்பட்ட சிறுவனின் தந்தை ஒருநாள் சம்பவத்தை நேரில் கண்டு, சந்தேகநபரை தாக்கியதுடன் பொலிஸில் முறைப்பாடு செய்துள்ளார். அதனையடுத்தே சந்தேகநபரை கைது செய்த பொலிஸார் பாதிக்கப்பட்ட சிறுவனை வைத்திய பரிசோதனைக்காக மொனராகலை மாவட்ட வைத்தியசாலையில் அனுமதித்துள்ளனர்.

# உடற்கூற்றுப் பரிசோதனைக்காக தோண்டியெடுக்கப்படும் ஷாப்டரின் உடல்

பொரளை கனத்தையில் மர்மமான முறையில் உயிரிழந்த தொழிலதிபர் தினேஷ் ஷாப்டரின் உடல் நீதிமன்ற உத்தரவின் பேரில் இன்று தோண்டி எடுக்கப்படவுள்ளது. இந்நிலையில், அவரது பூதவுடல் அடக்கம் செய்யப்பட்ட இடத்துக்கு பொலிஸ் பாதுகாப்பு அளிக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

கொழும்பை சேர்ந்த வர்த்தகரான தினேஷ் ஷாப்டர் டிசம்பர் 15 ஆம் திகதி பொரளை பொது மயானத்தில் காரில் கழுத்து நெரிக்கப்பட்ட நிலையில் காணப்பட்டதுடன், பின்னர் தேசிய வைத்தியசாலையின் அதிதீவிர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டிருந்த நிலையில் இரவு சிகிச்சை பலனின்றி உயிரிழந்திருந்தார்.

இதன்படி தினேஷ் ஷாப்டர் படுகொலை விவகாரத்தில், சுமார் 100 இற்கும் மேற்பட்ட வாக்குமூலங்கள் வரை பதிவு செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# கலைஞர்களுக்கு நிதியுதவி



(சீனக்குடா செய்தியாளர்)

மத்திய கலாசாரத் திணைக்களத்தினால் உதவி அவசியமான கலைஞர்களுக்கு உதவி வழங்கும் திட்டத்தின் கீழ் நான்கு கலைஞர்களுக்கு காசோலை வழங்கி வைக்கும் நிகழ்வு கிண்ணியா பிரதேச செயலகத்தில் செவ்வாய்க்கிழமை(23) இடம்பெற்றது.

கலாசார அதிகார சபையினால் தகுதி மூலம் தெரிவான ஐ.அப்துல் ஹசன், எம்.எச்.முஹமட் இஸ்மாயில், ஏ.பிள்யூ.முஹமட், ஏ.கௌரிதாசன் ஆகிய கலைஞர்களுக்கு தலா பத்தாயிரம் ரூபா காசோலையை கிண்ணியா பிரதேச செயலாளரும் கலாசார அதிகார சபையின் தலைவருமான எம்.எச்.முஹம்மது கனி வழங்கி வைத்தார்.

இந் நிகழ்வில் கலாசார அதிகார சபையின் ஒருங்கிணைப்பாளரும் கலாசார அபிவிருத்தி உத்தியோகத்தருமான ஜே.எம்.ஹில்மி மற்றும் உதவிச் செயலாளர் எம்.ஏ.முஹமட் ஆகியோர் கலந்து கொண்டனர்.

# காலாவதி திகதியை மாற்றிய விநியோகஸ்தருக்கு அபராதம்

சோடா போத்தல்களின் காலாவதி திகதியை மாற்றம் செய்த விநியோகஸ்தருக்கு ஒரு இலட்சத்து 10ஆயிரம் ரூபா தண்டம் விதித்த நீதிமன்றம் வியாபார அனுமதியை இரத்துச் செய்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளுமாறும் மாநகர ஆணையாளருக்கு கட்டளை பிறப்பித்தது.

சோடா போத்தல்களின் காலாவதித் திகதி மாற்றம் செய்யப்பட்டு யாழ். நகர் கடைகளுக்கு விநியோகிக்கப்படுவதாக யாழ். நகர பொதுச் சுகாதார பரிசோதகருக்கு கிடைத்த இரகசியத் தகவலையடுத்து யாழ். நகர் கடைகளில் கடந்த ஏப்ரல் 26ஆம் திகதி சோதனை நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

இதன்போது காலாவதி திகதியில் மாற்றம் செய்திருந்த மற்றும் திகதி காலாவதியான சோடாப்போத்தல்கள் விநியோகஸ்தரால் விநியோகிக்கப்பட்டமை தெரியவந்தது.

இதனையடுத்து, இரு கடைகளுக்கு விநியோகிக்கப்பட்ட சோடாப்போத்தல்களை கைப்பற்றிய பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் குறித்த விநியோகஸ்தரின் களஞ்சியசாலையையும் முற்றுகையிட்டு சோதனை மேற்கொண்டனர்.

இதன்போது காலாவதி திகதியில் மாற்றம் செய்த 1100 சோடாப்போத்தல்கள் உட்பட காலாவதியான சோடாப்போத்தல்களும் என 1710 சோடாப்போத்தல்கள் கைப்பற்றப்பட்டன.

இதனையடுத்து குறித்த விநியோகஸ்தருக்கு எதிராக யாழ். நகர் பொது சுகாதாரப் பரிசோதகர் நீதவான் நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்தார்.

இதனையடுத்து குறித்த விநியோகஸ்தரை குற்றவாளியாக இனங்கண்ட நீதிமன்றம் ஒரு இலட்சத்து 10ஆயிரம் ரூபா தண்டம் விதிக்கப்பட்டது. அத்துடன் யாழ். மாநகர சபையால் குறித்த விநியோகஸ்தருக்கு வழங்கப்பட்ட வியாபார அனுமதியை இரத்துச் செய்வதற்கு நடவடிக்கை எடுக்குமாறும் கட்டளை பிறப்பிக்கப்பட்டது.

# கதிர்காமம் புனித தலத்துக்கு ஊவா மாகாண ஆளுநர் விஜயம்



ஊவா மாகாண ஆளுநர் ஏ.ஜே.எம்.முஸம்மில் கடந்த 22ஆம் திகதி கதிர்காமம் புனித பிரதேசத்துக்கு கண்காணிப்பு விஜயமொன்றை மேற்கொண்டிருந்தார்.

எசல பெரஹெரா தொடர்பில் பஸ்நாயக்க நிலமேயுடன் கலந்துரையாடிய ஆளுநர் அதற்குத் தேவையான உதவியை வழங்குவதாகவும் உறுதியளித்துள்ளார்.

இதேவேளை கதிர்காமம் புனிதப் பிரதேசத்துக்கும் இலக்கம் 02 பாலத்துக்கும் அருகில் உள்ள நகர நுழைவாயிலுக்கும் சென்று பார்வையிட்ட ஆளுநர் புனிதப் பிரதேசத்தை மேலும் மேம்படுத்துவதற்கு தேவையான உதவிகளை வழங்கவுள்ளதாகவும் தெரிவித்துள்ளார்.

இவ்விஜயத்தில் மொனராகலை மாவட்ட செயலாளர் பசன் ரத்நாயக்க, கதிர்காமம் பதில் பிரதேச செயலாளர் பிரகீத் குலதிலக ஆகியோர் கலந்துகொண்டனர்.

# யாழ். பல்கலைக்கழகத்தில் தொல்லியல் அருங்காட்சியகம்





யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்தில் கலாநிதி கா.இந்திரபாலா தொல்லியல் அருங்காட்சியகம் நேற்று புதன்கிழமை திறந்துவைக்கப்பட்டது.

இதுதொடர்பான ஆரம்ப நிகழ்வு கைலாசபதி கலையரங்கில் இடம்பெற்றது. அதனைத் தொடர்ந்து கலாநிதி இந்திரபாலா தொல்லியல் அருங்காட்சியகமும் இணையத்தளமும் பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் சிறிசற்குணராஜாவினால் அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டது.

இந்நிகழ்வில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக கலைப் பீடப் பீடாதிபதி பேராசிரியர் சி.ரகுராம், வரலாற்றுத்துறை ஓய்வுநிலை சிரேஷ்ட பேராசிரியர் பாமு புஷ்பரட்ணம், வரலாற்றுத்துறை தலைவர் சாந்தினி அருளானந்தம், பேராசிரியர் மௌனகுரு, ஏனைய பீட பீடாதிபதிகள், விரிவுரையாளர்கள், பல்கலைக்கழக உத்தியோகத்தர்கள், மத்திய கலாசார நிதியத்தினர், தொல்லியல் திணைக்கள அதிகாரிகள், பல்கலைக்கழக மாணவர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் தொல்லியல் அருங்காட்சியகம் வரலாற்றுத்துறை முதல் பேராசான் கலாநிதி கா.இந்திரபாலாவால் அடித்தளமிடப்பட்டது.

இந்நிலையில் அமெரிக்கத் தூதரகத்தினதும் மத்திய கலாசார நிதியத்தினதும் அனுசரணையில் தூர நோக்குடன் நவீன அருங்காட்சியகமாக பேராசிரியர் பாமு புஷ்பரட்ணம் உருப்பெறச் செய்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

## தினசரி பலாபலன்கள்

சோபகிருது வருடம் வைகாசி மாதம் 11ஆம் நாள் வியாழக்கிழமை

**மேஷம்:** உண்மையான உறவு என்ன என்பதை கற்றுக் கொள்ளப் போகின்றீர்கள். முயற்சிகள் எடுத்தாலும் தடைகள் உண்டு.

**ரிஷபம்:** மற்றவர்கள் முடியாது என்று கைவிட்ட செயலை இலகுவில் முடித்துக் காட்டுவீர்கள். நண்பர்கள் உதவுவார்கள்.

**மிதுனம்:** குடும்பத்துக்கான செலவுகளை இன்று நீங்கள் பொறுப்பேற்பீர்கள். குதர்க்க வாத விவாதங்களை தவிருங்கள்.

**கடகம்:** உங்கள் உடல் இன்று ஆரோக்கியமாகவும் மகிழ்ச்சியாகவும் இருக்கும். புகழ், செல்வாக்கு அதிகரிக்கும்.

**சிம்மம்:** கணவன்-மனைவி இடையே கருத்து வேறுபாடு ஏற்படலாம். உணவு, உறக்கம் தடைபடும் நாள்.

**கன்னி:** அரசாங்க வகையில் பல சலுகைகள் நீங்கள் கேட்காமலேயே கிடைக்கும். மூத்தவர்களின் ஆலோசனைகளை ஏற்பீர்கள்.

**துலாம்:** தொழில்-வியாபாரத்தில் அதிக இலாபங்களை அடைவீர்கள். நீங்கள் விரும்பிய தொழிலில் மாற்றம் அமையும்.

**விருச்சிகம்:** ஆலய தரிசனத்தால் மன நிறைவு அடைவீர்கள். தான தர்மங்களால் புண்ணியம் சேர்ப்பீர்கள்.

**தனுசு:** கடவுள் உங்கள் பொறுமையை சோதிக்கும் நாள். மனதைக் கெடுத்துக் கொள்ளாது அமைதியாக இருங்கள்.

**மகரம்:** எதிர்ப்பாராத வகையில் உங்கள் புகழ், அந்தஸ்து உயரப் போகின்றது. அரச வகையில் இலாபம் உண்டு.

**கும்பம்:** கலங்கிப்போயிருந்த மனம் ஆறுதல் அடையப் போகின்றது. இன்றைய நாள் உங்களுடையது. நல்லதையே நினையுங்கள்.

**மீனம்:** அரச உயர் அதிகாரிகளை வீணே பகைத்துக்கொள்ளாதீர்கள். ஆழம் அறியாது காலை விடாதீர்கள்.

**திதி :** ஷஷ்டி மு.ப.5.19 வரை பின் சப்தமி
**நட்சத்திரம்:** பூசம் பி.ப. 5.53 வரை பின் ஆயிலியம்
**யோகம் :** சித்த யோகம் பி.ப.5.53 வரை பின் அமிர்த சித்தம்.
**வார சூலை:** தெற்கு திசை நோக்கி சுபகாரியம் கூடாது
**நல்லநேரம்:** மு.ப.10.50 - 11.50 மணி வரை
**ராகுகாலம்:** 1.20 - 2.50 மணிவரை
**எமகண்டம் :** 5.50- 7.20 மணிவரை
**குளிகை :** 8.50- 10.20 மணிவரை
**சந்திராஷ்டமம்:** தனுசு ராசியினர் எச்சரிக்கையாக செயல்படவும்
**தனஅதிர்ஷ்டம்:** புனர்பூசம், விசாகம், பூரட்டாதி (பிறந்தவர்களுக்கு)
**விசேட தினம் :** ஷஷ்டி விரதம்

**கணிப்பு : சிவா பாஸ்கரராவ்**
(ஜோதிடம் மற்றும் வாஸ்து ஆய்வாளர்)
ஸ்தாபகர் - ஓம்சிவ ஜோதிட வித்தியா & வாஸ்து நிலையம்.
தொலைபேசி : 077-0525325
078-6759739


# வெற்றி நிச்சயம்



"உங்கள் பிரச்சினை எதுவானாலும் ஒருமுறை என்னைத் தொடர்புகொண்டால், 100% வெற்றி நிச்சயம்" நடக்காத காரியங்களையும் நடத்திவைக்கும் சக்தி என்னிடம் மட்டுமே உண்டு. என்னை நம்புங்கள். பணப்பிரச்சினை, தொழில் முடக்கம், வியாபார மந்தம், கடன் தொல்லை, முன்னேற்றத்தடை, நினைப்பது ஒன்று நடப்பது ஒன்றாக இருத்தல், எதிலும் தோல்வி, படிப்பில் மந்தம், எதிரித்தொல்லை, தீராதநோய், செய்வினை கோளாறு, போதைவஸ்துப்பாவனை, வழக்கில் வெற்றிபெற, போட்டி பந்தயங்களில் ஜெயிக்க, விற்கப்படாத வீடு/காணி/வாகனம் விற்க, வெளிநாடு செல்ல/விசா கிடைக்க, கொடுத்த பணம் திரும்பி வர, விவாகரத்தை தடுக்க, கணவன்-மனைவி பிரச்சினை, காதல் பிரச்சினை, பிரிந்தவர் ஒன்றுசேர, மனங்கவர்ந்தவரை வசமாக்கிக் கொள்ள, தகாத உறவை பிரிக்க, திருமணத்தடை, குழந்தையின்மை மற்றும் உங்கள் சகல பிரச்சினைகளுக்கும் 72 மணித்தியாலத்திற்குள் 100% நிரந்தரத் தீர்வு. இது நான் வணங்கும் அந்த ஆதிசிவன் மீது தேவ சத்தியம்.

உலகப்புகழ் பெற்றவரும் இலங்கையில் நம்பர் 1 மலையாள மாந்திரீக ஜாம்பவான், தத்துவஞானி, மகரிஷி, தேசபந்து, கௌரவ கலாநிதி. ஸ்ரீமத் சுவாமிஜி +94 710192687 (Whatsapp)www.facebook.com/Srimath Suwamiji/

தமிழன்
THAMILAN
தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்
இல. 91, விஜேராம மாவத்தை, கொழும்பு 07.
தொலைநகல் : 0112 67 34 42,
தொலைபேசி : 0115 200 900/ 0115 88 61 87
விளம்பரம் : 077 172 1880
மின்னஞ்சல் : thamilaneditorial@gmail.com/ thamilaneditor@gmail.com

**2023, மே 25ஆம் திகதி, வியாழக்கிழமை**

# ஜனகவை நீக்கி ரணில் சொன்ன செய்தி என்ன?

ஜனக ரத்நாயக்கவை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவின் தலைவர் பதவியில் இருந்து நீக்குவது தொடர்பிலான பிரேரணை நேற்று பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டுள்ளது.

முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவினால் 2021 மார்ச் 14ஆம் திகதி ஜனக ரத்நாயக்க பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவின் தலைவராக நியமிக்கப்பட்டார்.

எனினும், 2022ஆம் ஆண்டு நாட்டில் ஏற்பட்ட பாரிய பொருளாதார நெருக்கடிக்கு மத்தியில் உருவான மின்சார நெருக்கடிக்கான தீர்வுகளை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு முன்வைத்திருந்தாலும், அவை செயற்படுத்தப்படவில்லை.

காமினி லொக்குகே மின்சக்தி அமைச்சராக இருந்தபோது, 2022ஆம் ஆண்டு மார்ச் மாதம் பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவின் தலைவர் அவ்வேளையில் ஜனாதிபதியை சந்தித்து நிலைமையை கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வருவதற்கான மாற்றுத் திட்டத்தை முன்வைத்தார். எனினும், அவை எதுவும் நடைமுறைப்படுத்தப்படாமல் இறுதியில் நாளாந்தம் 13 மணித்தியாலங்கள் மின்சாரத்தை துண்டிக்க வேண்டிய நிலைமை ஏற்பட்டது.

ரணில் விக்கிரமசிங்க பிரதமராக நியமிக்கப்பட்டதன் பின்னர் பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவின் தலைவர் ஜனக ரத்நாயக்கவுடன் முரண்பாடு ஏற்பட்டது. 2018ஆம் ஆண்டு மே மாதம் 18ஆம் திகதி பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவின் தலைவர் ஜனக ரத்நாயக்க அவ்வேளையில் பிரதமரின் செயலாளராக செயற்பட்ட சமன் ரத்நாயக்கவிற்கு அப்போது அனுப்பிய கடிதத்தின் மூலம் இந்த தகவல்கள் தெரியவந்துள்ளன.

மின்சார நெருக்கடி மேலும் அதிகரிக்கலாம் என 2022ஆம் ஆண்டு மே 16ஆம் திகதி அவ்வேளையில் பிரதமராக இருந்த ரணில் விக்கிரமசிங்க நாட்டு மக்களுக்கு உரையாற்றியபோது கூறிய விடயம் திசைதிருப்பும் மற்றும் தவறான அறிக்கை என ஜனக ரத்நாயக்க, பிரதமரின் செயலாளருக்கு குறித்த கடிதத்தில் அறிவித்துள்ளார்.

அந்தக் கடிதத்தில் குறிப்பிடப்படுவதைப் போன்று, ஜனக ரத்நாயக்கவின் பிரத்தியேக உதவியாளருக்கு தொலைபேசியில் தொடர்பு கொண்டு, பிரதமரின் கூற்றுக்கு மாறான எவ்வித கருத்தையோ அல்லது அறிக்கையையோ வெளியிட வேண்டாம் என பிரதமரின் செயலாளர் அந்த சந்தர்ப்பத்தில் தெரிவித்துள்ளதாக அறியமுடிகின்றது.

பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு முழுமையாக சுயாதீன நிறுவனம் என்பதால் எவ்வகையிலும் வாய் மூலமாக அச்சுறுத்தல் அல்லது ஆலோசனைகளை மூன்றாம் தரப்பிலிருந்து பெற்றுக்கொள்ள வேண்டாம் என ஜனக ரத்நாயக்க அதன் பின்னர் பிரதமரின் செயலாளருக்கு தொலைபேசியில் தொடர்பு கொண்டு அறிவித்தார்.

இந்த விவாத நிலைமை படிப்படியாக வலுப்பெற்று, இறுதியில் கடந்த வருடம் ஜனவரி, ஒகஸ்ட் மாதங்களில் மின்சாரக் கட்டணத்தை அதிகரிப்பதற்கு முன்வைக்கப்பட்ட பிரேரணைக்கு ஆணைக்குழுவின் தலைவர் முன்வைத்த எதிர்ப்பை அடுத்து நெருக்கடி மேலும் வலுப்பெற்றது.

கட்டணம் மதிப்பிடப்படும் விஞ்ஞானபூர்வ முறைக்கு ஏற்ப அரசாங்கம் முன்வைக்கும் முன்மொழிவு வீதத்தை விடக் குறைந்த வீதத்தில் மக்களுக்கு நிவாரணம் வழங்க முடியுமான முறையில் கட்டணத்தை அதிகரிக்க முடியும் என ஜனக ரத்நாயக்க அந்த இரண்டு சந்தர்ப்பங்களிலும் கூறினார். அந்த இரண்டு சந்தர்ப்பங்களிலும் மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சர், பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவின் தலைவரை கடுமையாக விமர்சித்ததுடன், அதன் இறுதிப் பெறுபேறாகவே அவரை நீக்குவதற்குப் பாராளுமன்றத்தில் பிரேரணை முன்வைக்கப்பட்டது.

பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு நிதி, பொருளாதார ஸ்திரத்தன்மை மற்றும் தேசிய கொள்கை அமைச்சின் கீழே உள்ளது. இதற்குப் பொறுப்பான அமைச்சர் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க. இப்போது ஜனக ரத்நாயக்கவை நீக்கியமைக்கு முழு காரணகர்த்தாவும் ரணில்தான்.

ஜனக ரத்னாயக்கவை பொறுத்தவரை பல வருடங்களுக்கு முன்னர் அவருக்குள் ராஜபக்ஷவாதம் தீவிரமாக இருந்தது. முன்னாள் பிரதம நீதியரசர் ஷிராணி பண்டாரநாயக்க மீதான குற்றப்பிரேரணையை விசாரணை செய்வதற்காக நியமிக்கப்பட்ட பாராளுமன்ற தெரிவுக்குழுவில் பிரதான சாட்சியமளித்தவர் ஜனக ரத்நாயக்க. பலரும் கூறுவது போல அதற்கான கர்மவினை இப்போது அவருக்கு வெகுமதியளித்துள்ளதா என்பது தெரியவில்லை. இருந்த போதிலும், அவரின் அண்மைக்கால செயற்பாடுகள் மக்கள் நலன் சார்ந்ததாகவே இருந்தது. அவருக்குள் இருக்கும் அரசியல் அவ்வப்போது வெளிப்படுத்தப்பட்டாலும் அவரின் வாதங்கள் மக்கள் நலன் சார்ந்ததாக இருந்தன. ஆனால், ஜனக ரத்நாயக்க போன்றோர் மக்களை வசீகரம் செய்து ஒன்று திரட்டினால் அல்லது அவர்களின் கருத்துகள் மக்களால் ஏற்றுக்கொள்ளப்பட்டால் ஆட்சிக்கு அது தாக்கத்தை ஏற்படுத்தும் என்பது ரணிலின் அச்சம்.

ஜனாதிபதி ரணில் கடந்தகாலங்களில் இருந்த அரசியல்வாதியல்ல. ஜனாதிபதியாக அவர் பதவியேற்ற பின்னர் அவரின் செயற்பாடுகளில் கணிசமான மாற்றங்கள் நடந்துள்ளன. முன்னாள் ஜனாதிபதி கோட்டாபயவுக்கு எதிரான கோல்பேஸ் ஆர்ப்பாட்டத்தை ஆதரித்த அதே ரணில், ஜனாதிபதியாக பதவியேற்ற பின்னர் ஒரே இரவில் முப்படைகள், பொலிஸ் துணை கொண்டு அந்தப் போராட்டக்களத்தை அகற்றினார். அரசுக்கு எதிரான விமர்சனங்கள், கருத்துகள் வருவதற்கு துளியும் இடமளிக்காமல் அவற்றை முளையில் கிள்ளிவிட முயல்கிறார் ரணில். ஜனக ரத்நாயக்கவின் நீக்கமும் அப்படியானதே.

ஜனக ரத்நாயக்க எனும் தனிநபரை நீக்க இந்தனை கோடி ரூபாவை செலவளித்து பாராளுமன்றத்தில் விவாதம் நடத்தி, அதுவும் பொதுஜன பெரமுனவின் பெரும்பான்மை எம்.பிக்களை வைத்தே இந்த செயற்பாட்டை மேற்கொண்டிருப்பதன் மூலம் மாற்றுக் கருத்துகளுக்கு, நேர்மையான விமர்சனங்களுக்கு வாய்ப்பூட்டை இட்டுள்ளார் ரணில். இது ஜனநாயகப் பண்பல்ல. தார்மீகமும் கிடையாது.

சுயாதீனமாக இயங்கும் ஆணைக்குழுவின் தலைவர்களுக்கும், அதன் உறுப்பினர்களுக்கும் இதனூடாக மறைமுக செய்தியை அனுப்பியுள்ளார் ரணில். அதிகம் பேசாமல் அமைதியாக இருங்கள். இல்லையேல் விரட்டப்படுவீர்கள் என்ற கனதியான செய்தியே அது. இது நாட்டுக்கு நல்லதல்ல.

# நல்லிணக்கத்துக்கு இருதரப்பு கருத்தொருமிப்பு அவசரமானது, அவசியமானது, சாத்தியமானது

இலங்கையில் போரினால் பாதிக்கப்பட்டவர்களினதும் தொடர்ந்தும் இடர்பாடுகளுக்கு முகங்கொடுத்துக்கொண்டிருப்பவர்களினதும் உரிமைகளுக்காக குரல்கொடுப்பதை கனடா நிறுத்தப்போவதில்லை என்று மே 18 தமிழர் இனப்படுகொலை நினைவு தினத்தை முன்னிட்டு கனேடிய பிரதமர் ஜஸ்ரின் ரூடோ கூறியதை இலங்கை அரசாங்கம் மிகவும் கடுமையாக கண்டனம் செய்திருக்கிறது.

போர் முடிவுக்கு வந்து 14 வருடங்கள் கடந்துவிட்ட நிலையில், அதுவும் சர்வதேச மட்டத்தில் மதிப்பைக்கொண்ட, தாராளவாதப் போக்குடைய ரணில் விக்கிரமசிங்க ஜனாதிபதியாக இருக்கும் காலகட்டத்தில் உள்நாட்டில் தேசிய நல்லிணக்க விவகாரத்தில் அரசியல் முன்னேற்றம் இல்லாத காரணத்தினால் இலங்கை சர்வதேச மட்டத்தில் ஆதரவை இழந்துவருவதும் அந்தப் போக்கை தடுத்துநிறுத்த எமது தூதரகங்களினால் இயலாமல் இருப்பதும் வேதனைக்குரியதாகும். பொருளாதார வீழ்ச்சிக்கு பிறகு முன்னெப்போதையும் விட இலங்கைக்கு சர்வதேச ஆதரவு தேவைப்படுகின்ற ஒரு நேரத்தில் இத்தகைய நிலை ஏற்பட்டிருப்பது துரதிர்ஷ்டவசமானது.

இலங்கை தொடர்ந்தும் பிளவுபட்ட சமுதாயமாக இருக்கிறது என்பதே உண்மை நிலையாகும். வடக்கு - கிழக்கில் மக்கள் போரில் உயிரிழந்த தங்கள் உறவுகளை மே 18ஆம் திகதி கவலையுடன் நினைவுகூர்ந்த அதேவேளை, மறுநாள் அரசாங்கம் போர் வெற்றியையும் நாட்டை ஐக்கியப்படுத்துவதற்காக தங்கள் உயிர்களைத் தியாகம் செய்த படைவீரர்களையும் நினைவுகூர்ந்ததை காணக்கூடியதாக இருந்தது.

இவ்வாறாக நாட்டில் காணப்படுகின்ற பிளவுபட்ட உணர்வுகளை கருத்திற்கொண்டுதான் 2010ஆம் ஆண்டில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவினால் நியமிக்கப்பட்ட கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு, போரில் பலியான சகலரையும் ஒரே தினத்தில் நினைவுகூரவேண்டும் என்று விதப்புரை செய்திருந்தது. "துயரமிகு மோதலில் பலியானவர்கள் மற்றும் பாதிக்கப்பட்ட சகலருக்கும் ஒருமைப்பாட்டையும் அனுதாபத்தையும் வெளிப்படுத்தவும் நாட்டில் மீண்டும் அத்தகைய இரத்தக்களரி ஒருபோதும் இடம்பெறாதிருப்பதை உறுதிப்படுத்துவதற்கான கூட்டுக் கடப்பாடு தொடர்பில் திடசங்கற்பம் பூணவும் தேசிய தினத்தில் (பெப்ரவரி 4) தனியான நிகழ்வொன்று ஏற்பாடு செய்யப்படவேண்டும்" என்று அந்த ஆணைக்குழு கூறியது.

இதுவரையில் பெப்ரவரி 4 நினைவுகூரலுக்கானதாக அன்றி இராணுவ வல்லமையை வெளிக்காட்டும் ஒரு வண்ணச்சிறப்புமிகு நிகழ்வாகவே தொடர்கிறது. இவ்வருடமும் அந்த தினம் அவ்வாறே அமைந்தது. இனத்துவ மற்றும் அரசியல் பிளவின் இரு பக்ககங்களிலும் கருத்துகள் கடுமையடைவது போலத் தோன்றும் இந்த நேரத்தில் கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கையை மேலும் மேற்கோள் காட்டுவது பெறுமதியானதாக இருக்கும்.

"சிங்கள சமுதாயத்தினதும் தமிழ்ச் சமுதாயத்தினதும் அரசியல் தலைவர்களும் சிவில் சமூகமும் மோதலின் அவலத்தை முழுமையாக ஏற்றுக்கொண்டு நடந்து முடிந்தவற்றுக்காக கூட்டாக வருந்தவேண்டியது நல்லிணக்கச் செயன்முறைக்கு அவசியமாகும். இரு பிரதான அரசியல் கட்சிகளினதும் தென்னிலங்கை அரசியல் தலைவர்கள் தேசிய நலன்களை மனதிற்கொண்டு செயற்பட்டு தமிழ் மக்களுக்கு ஏற்புடைய தீர்வொன்றை வழங்குவதற்கு கருத்தொருமிப்பைக் கண்டிருந்தால் மோதலை தவிர்த்திருக்கமுடியும்" என்பதே அந்த மேற்கோள் வரிகள்.

## 'அரகலய' ஐக்கியம்

உண்மையில் தற்போதைய தருணம் இனநெருக்கடிக்கு தீர்வைக் காண்பதற்கு இருதரப்பு அணுகுமுறையொன்றைக் கடைப்பிடிப்பதற்கு பொருத்தமானதாகும். சிவில் சமூக உறுப்பினர்கள் குழுவொன்றுடன் பேசிய எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச 'அரகலய'வுக்குப் பின்னரான சூழ்நிலையில் நாட்டின் இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாண்பது சுலபமாகிவிட்டது என்று கூறியிருந்தார். இன மற்றும் சமூகப் பிளவுகளை கடந்து நின்றமை போராட்ட இயக்கத்தின் மிகவும் குறிப்பிடத்தக்க அம்சங்களில் ஒன்றாகும். இலங்கையின் பன்முக - பல்லின - பல மத - சமூக அமைப்புக்கு பொருத்தமான முறையில் வேற்றுமையில் ஐக்கியத்தைக் கொண்டாடிய ஒரு போக்கை போராட்ட இயக்கத்தில் காணக்கூடியதாக இருந்தது.

சகல குடிமக்களுக்கும் சமத்துவத்தை வேண்டிநின்ற இளம் ஆர்ப்பாட்டக்காரர்கள், குறுகிய நோக்குடைய தேசியவாத பிரசாரங்களை முன்னெடுத்து மக்கள் மத்தியில் சந்தேகத்தையும் அச்சத்தையும் தோற்றுவித்து அணிதிரட்டல்களைச் செய்து அதிகாரத்துக்கு வந்த அரசியல்வாதிகளை கடுமையாக கண்டனம் செய்யும் சுலோகங்களை எழுப்பியதை 'அரகலய' காலத்தில் நாடும் உலகமும் கேட்டன.

சமூகங்களுக்கு இடையில் நிலவிய சந்தேகமும் பாதுகாப்பில்லாத உணர்வுமே இனப்பிரச்சினைக்கான மூலவேராகவும் பிரச்சினையை தீர்ப்பதற்கு குந்தகமாகவும் இருந்து வந்தன என்று கூறிய எதிர்க்கட்சி தலைவர் பிரேமதாச, 'அரகலய'வை மூளவைத்த பொருளாதார நெருக்கடி மக்களை ஐக்கியப்படுத்தியதன் மூலம் அந்த பாதகமான சூழ்நிலையை பெருமளவுக்கு மாற்றிவிட்டது என்றார்.

பொருளாதாரம் வீழ்ச்சியடைந்து அத்தியாவசியப் பொருட்களுக்கு தட்டுப்பாடும் அவற்றைப் பெறுவதற்கு நீண்ட வரிசைகளில் காத்துநிற்கவேண்டிய நிலைமை ஏற்பட்டபோது தாங்கள் முகங்கொடுத்த பொதுவான பிரச்சினைக்காக மக்கள் ஒன்றுபட்டு போராட்டத்தில் இறங்கினார்கள். ஆனால், பதவியில் இருந்த அரசியல் தலைவர்களை அகற்ற முடிந்த அதேவேளை, அவர்களைப் பதிலீடு செய்யக்கூடியதாக போராட்ட இயக்கத்தினால் அதற்கென்று ஒரு தலைமைத்துவத்தை உருவாக்க முடியாமல்போய்விட்டது. போராட்ட இயக்கம் ஒடுக்கப்பட்டது. அதேபோன்றே மக்கள் மத்தியில் காணப்பட்ட ஐக்கியத்தினால் இனப்பிரச்சினைக்கு ஒரு தீர்வைக்காணக்கூடிய வாய்ப்பும் தவறிப்போனது. மக்கள் மத்தியில் பாதுகாப்பு உணர்வை தோற்றுவிக்கக்கூடிய அரசியல் தலைமைத்துவத்திடமிருந்தே இதற்கு பதில் வரவேண்டும்.

கடந்த காலத்தில் பல தடவைகள் முயற்சிகள் முன்னெடுக்கப்பட்டு வெற்றிபெறத் தவறிய நிலையில், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பிரச்சினைக்கு தீர்வைக் காண்பதற்கு தமிழ் அரசியல் கட்சிகளுடன் தற்போது பேச்சுவார்த்தைகளை முன்னெடுத்திருக்கிறார். கடந்த பெப்ரவரி 4 இலங்கையின் சுதந்திரதினத்துக்கு முன்னதாக இனப்பிரச்சினைக்கு தீர்வைக் காணப்போவதாகக் கூட அவர் அறிவித்ததையும் சில மாதங்களுக்கு முன்னர் கண்டோம். அடுத்த தலைமுறைக்கு இந்தப் பிரச்சினையை விட்டுச்செல்ல விரும்பவில்லை என்று கூறியதன் மூலம் தனது அபிலாஷையை வெளிக்காட்டுவதில் அவர் ஒரு முதிர்ந்த அரசியல் தலைவராக போன்று நடந்துகொண்டார்.

நல்லிணக்கச் செயன்முறை தொடர்பில் அவர்களின் கருத்துகளை அறிந்துகொள்வதற்காக சிவில் சமூக உறுப்பினர்களை எதிர்க்கட்சித் தலைவர் அழைத்துப் பேசியமையும் இனப்பிரச்சினையை தீர்ப்பதற்கான முயற்சிகளை 'அரகலய' சுலபமாக்கியிருக்கிறது என்ற அவரின் கருத்தும் அந்தப் பிரச்சினைக்கு தீர்வு காண்பதில் ஆக்கபூர்வமான முறையில் ஈடுபாட்டைக் காட்டுவதற்கு அவருக்கு இருக்கும் விருப்பத்தின் அறிகுறிகளாகும். பேச்சுவார்த்தைகளை நடத்துவதற்கும் அரசியல் தீர்வொன்றை நடைமுறைப்படுத்துவதற்கும் அவசியமான இருதரப்பு கருத்தொருமிப்பு சூழலை தோற்றுவிப்பதற்கு இதனால் முடியும்.

## இருதரப்பு கருத்தொருமிப்பு

மாகாண சபைகள் முறைக்கு புத்துயிரூட்டி அதிகாரமளிக்கவேண்டிய அவசியம் இனப்பிரச்சினைக்கு நீண்டகால அடிப்படையிலான தீர்வொன்றைக் காண்பதற்கு முக்கியமானதாகும். வேறுபட்ட இன, சமய சமூகங்கள் அவை பெரும்பான்மையினராக வாழ்கின்ற பகுதிகளில் தங்கள் அலுவல்களை கையாளுவதற்கு வகைசெய்யக்கூடிய பிராந்திய சுயாட்சி என்ற விவகாரம் நீண்டகால வரலாற்றைக் கொணடதாகும். 1957 பண்டாரநாயக்க - செல்வநாயகம் ஒப்பந்தமே அரசாங்க தலைமைத்துவத்துக்கும் தமிழ் அரசியல் சமூகத்துக்கும் இடையில் பேச்சுவார்த்தை மூலமான இணக்கப்பாடு ஒன்று காணப்பட்ட முதலாவது சந்தர்ப்பமாகும்.

அதையடுத்து 1965 டட்லி சேனநாயக்க - செல்வநாயகம் ஒப்பந்தம், 1987 இந்திய - இலங்கை சமாதான உடன்படிக்கை , 2000 சந்திரிகா குமாரதுங்க அரசியலமைப்பு வரைவு, மஹிந்த ராஜபக்ஷ ஆட்சிக்காலத்தில் 2010 சர்வகட்சி பிரதிநிதித்துவக் குழுவின் யோசனைகள் மற்றும் சிறிசேன - விக்கிரமசிங்க அரசாங்க காலத்தில் 2015 அரசியலமைப்பு சபை என்று பல்வேறு யோசனைகள் வந்தன.

இனப்பிரச்சினைக்கான அரசியல் தீர்வுக்கு பல தடவைகள் முயற்சிகள் முன்னெடுக்கப்பட்டு யோசனைகளும் வகுக்கப்பட்டன. அவை பதவியில் இருந்த அரசாங்கங்களினால் அல்லது அந்த அரசாங்கங்களுக்குள் இருந்த பிரிவினரால் ஏற்றுக்கொள்ளப்பட்டன. ஆனால், எதிர்க்கட்சியினால் அவை நிராகரிக்கப்பட்டன. இத்தடவை இது வித்தியாசமானதாக இருக்கமுடியும்.

சிவில் சமூக உறுப்பினர்களுடனான சந்திப்பின்போது எதிர்க்கட்சித் தலைவர் பிரேமதாசவிடம் அதிகாரப்பரவலாக்கம் தொடர்பில் அவரது நிலைப்பாடு என்ன என்று கேட்கப்பட்டது. அதற்கு பதிலளித்த அவர் ஒற்றையாட்சி அரசுக்குள் உச்சபட்ச அதிகாரப்பரவலாக்கமே தனது நிலைப்பாடு என்று இதை 2019 ஜனாதிபதி தேர்தலின்போதும் தான் கூறியதாகவும் குறிப்பிட்டார். இத்தகைய நிலைப்பாடு 13ஆவது திருத்தத்தை முழுமையாக நடைமுறைப்படுத்துவதன் மூலமாக அரசியலமைப்பு ஏற்பாடுகள் பின்பற்றப்படவேண்டும் என்ற ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் நிலைப்பாட்டை ஒத்திருக்கிறது.

இனத்துவ தேசியவாத அரசியலை நிராகரிப்பது என்பது ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அவரது வாழ்நாள் பூராவும் கடைப்பிடித்துவரும் மிகவும் ஆரோக்கியமான பண்புகளில் ஒன்றாகும். தேர்தல்களில் வாக்குகளைப் பெறவேண்டும் என்பதற்காக இனவாத பீதிகளையோ அல்லது தப்பெண்ணங்களையோ அவர் கிளறியதில்லை. அதே காரணத்துக்காக அவர் பழிபாவத்துக்கு அஞ்சாத அரசியல் எதிரிகளிடம் தேர்தல்களில் தோல்விகண்டார். அதேபோன்றே எதிர்க்கட்சித் தலைவர் பிரேமதாசவும் இனத்துவ தேசியவாத அரசியலில் ஒருபோதும் ஈடுபடவில்லை.

அதனால் அரசியல் தீர்வொன்றைக் காண்பதையும் அரசாங்கம் அமைக்க உத்தேசித்திருக்கும் உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் ஊடாக கடந்த கால மனித உரிமைகள் பிரச்சிகைளைக் கையாள்வதையும் உறுதிசெய்யக்கூடியதாக இனவெறி இல்லாத இவ்விரு தலைவர்களும் சேர்ந்து செயற்படுவது முக்கியமானதாகும். தானும் கூட போர்காலக் கொடுமைகளினால் பாதிக்கப்பட்ட அனுபவத்தைக் கொண்டவர் என்ற முறையில் எதிர்க்கட்சித் தலைவர் கடந்தகால காயங்களைக் குணப்படுத்தி சர்வதேச சமூகத்தில் இலங்கை அதற்குரிய இடத்தை மீண்டும் பெறுவதற்கான பாதையைக் காட்டக்கூடிய பெருந்தன்மையையும் வெறுப்புணர்வு இல்லாத பண்பையும் வெளிக்காட்டியிருக்கிறார்.



**கலாநிதி ஜெகான் பெரேரா**

# டி.எம்.எஸ்.நினைவு தினம் இன்று



டி.எம்.சௌந்தரராஜன் (மார்ச் 24, 1922 - மே 25, 2013) தமிழ்த் திரைப்படப் புகழ்பெற்ற பின்னணிப் பாடகர். 2003இல் பத்மஸ்ரீவிருதைப் பெற்ற சௌந்தரராஜன் நாற்பது ஆண்டுகள் தமிழ்த் திரைப்படங்களில் பாடினார். இவர் திரைப்பட பாடல்கள் மட்டுமின்றி பல பக்தி பாடல்களையும் பாடினார்.

சௌராஷ்டிரக் குடும்பத்தில் மதுரையில் தொ.அ.மீனாட்சி ஐயங்கார் என்பவரின் இரண்டாவது மகனாகப் பிறந்தவர் சௌந்தரராஜன். அவர் 1946இல் சுமுத்திரா என்பவரைத் திருமணம் புரிந்தார். பிரபல வித்துவான் பூச்சி ஸ்ரீனிவாச ஐயங்காரின் மருமகன் காரைக்குடி ராஜாமணி ஐயங்காரிடம் முறையாக இசைப் பயிற்சி பெற்று திரையுலகில் நுழைந்தார். பல ஆண்டுகளாகக் கச்சேரி செய்து வந்த இவரை சுந்தரராவ் நட்கர்னி என்பவர் தனது 'கிருஷ்ண விஜயம்' (1950) திரைப்படத்தில் "ராதே நீ என்னை விட்டுப் போகாதேடி" என்ற பாடலைப் பாடுவதற்கு ஒப்பந்தம் செய்தார். அதைத் தொடர்ந்து மந்திரி குமாரி, தேவகி, சர்வாதிகாரி போன்ற திரைப்படங்களில் பாடுவதற்கு வாய்ப்புக் கிடைத்தது. 'தேவகி' படத்தில் அவர் பாடி நடித்திருந்தார்.

இவர் சிவாஜி, எம்.ஜி.ஆர், ஜெமினி, ஜெய்சங்கர், ரவிச்சந்திரன், முத்துராமன், எஸ்.எஸ்.ராஜேந்திரன் மற்றும் நாகேஷ் உட்பட பல முன்னணி திரைப்பட நடிகர்கள் ஒவ்வொருவருக்கும் பொருத்தமான, தனித்தனி குரலில் பாடி, அந்த நடிகர்களின் முகத்தை தனது குரலின் மூலம் ரசிகர்களின் மனக்கண்ணில் நிலை நிறுத்தும் ஆற்றல் இவருக்கு மட்டுமே இருந்தது. வீரம், காதல், சோகம், துள்ளல், தத்துவம், நையாண்டி மற்றும் கிராமிய மணம் கமழும் 10 ஆயிரத்துக்கும் மேற்பட்ட திரைப்படப் பாடல்களையும், 2500க்கு மேற்பட்ட பக்திப் பாடல்களையும் பாடியுள்ளார். முன்னணி திரைப்பட நட்சத்திரங்களான ரஜினிகாந்த் மற்றும் கமல்ஹாசன் ஆகியோருக்கும் பாடியுள்ளார். 2010இல் தமிழ்நாட்டின் கோவையில் நடந்த உலகத் தமிழ்ச் செம்மொழி மாநாட்டிற்காக உருவான "செம்மொழியான தமிழ்மொழியாம்" என்ற பாடலே டி.எம்.சௌந்தரராஜன் இறுதியாக பாடிய பாடலாகும் .

1962ஆம் ஆண்டு வெளியான 'பட்டினத்தார்' எனும் திரைப்படத்தில் முக்கிய கதாபாத்திரமான பட்டினத்தாராக இவர் நடித்துள்ளார். 'அருணகிரிநாதர்' எனும் திரைப்படத்திலும் கதாநாயகனாக நடித்து, முருகக் கடவுள் மீது இவர் பாடிய "முத்தைத் திருபத்தித் திருநகை" எனும் பாடல் குறிப்பிடத்தக்க புகழடைந்தது.

**எஸ்.தயா**

## நக்கல் நமசிவாயம்

**அலி சப்ரி எம்.பி. தங்கம் கொண்டுவந்து சிக்கியது ஒரு பக்கம் இருக்கட்டும்... ஆனா, அவருக்கு சரியான தண்டனை கொடுக்கோணுமெண்டு மைத்ரி ஐயா சொல்லுறார்..!**



## இன்றைய நாளில்...

- **1953 – அணுகுண்டு சோதனை: நெவாடாவில் ஐக்கிய அமெரிக்கா தனது முதலாவதும் கடைசியுமான அணு ஆற்றலினாலான பீரங்கியை பரிசோதித்தது.**
- **1977 – வில்லியம் ஷேக்ஸ்பியரின் இலக்கியங்கள் மீதான தடையை சீனா நீக்கியது. 1966இல் ஆரம்பமான சீனப் பண்பாட்டுப் புரட்சி முடிவுக்கு வந்தது.**
- **1985 – பங்களாதேஷில் இடம்பெற்ற சூறாவளியில் 10,000 பேர் வரையில் உயிரிழந்தனர்.**
- **2008 – நாசாவின் பீனிக்ஸ் விண்ணூர்தி செவ்வாயில் தரையிறங்கியது.**
- **2012 – டிராகன் விண்கலம் அனைத்துலக விண்வெளி நிலையத்துடன் இணைந்தது.**

# சாவகச்சேரி நகரின் தேவைப்பாடுகள் தொடர்பாக ஆராய்ந்தார் விஜயகலா



(சாவகச்சேரி நிருபர்)

சாவகச்சேரி நகரின் தேவைப்பாடுகள் தொடர்பாக கடந்த திங்கட்கிழமை(22) முன்னாள் கல்வி இராஜாங்க அமைச்சர் விஜயகலா மகேஸ்வரன் ஆராய்ந்திருந்தார்.

சாவகச்சேரி நகரில் நிலவுகின்ற குறைபாடுகளை நிவர்த்திசெய்யுமாறு சாவகச்சேரி நகரசபை முன்னாள் உறுப்பினர் சர்வானந்தன் இராஜாங்க அமைச்சர் அரவிந்தகுமார் ஊடாக ஜனாதிபதி செயலகத்திடம் கோரிக்கை விடுத்திருந்த நிலையில், ஜனாதிபதி செயலகம் முன்னாள் கல்வி இராஜாங்க அமைச்சர் விஜயகலா ஊடாக நிலைமைகளை ஆராய்ந்திருப்பதாக தெரிவிக்கப்படுகிறது.

இதன்போது சாவகச்சேரி பேருந்து தரிப்பிடத்தில் குடிநீர் வசதியை ஏற்படுத்தல், சாவகச்சேரி நகருக்கு பாதுகாப்புக் கமரா பொருத்தல் மற்றும் சாவகச்சேரி நகர் பகுதியில் சோலர் தெரு விளக்குகள் பொருத்தல் போன்ற கோரிக்கைகளை விஜயகலா மகேஸ்வரனிடம் தெரியப்படுத்தியிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

மேற்படி விஜயத்தின்போது நகரசபை முன்னாள் உறுப்பினர் சர்வானந்தன், சாவகச்சேரி வர்த்தக சங்கப் பிரதிநிதிகள் மற்றும் வர்த்தகர்கள் கலந்துகொண்டமை குறிப்பிடத்தக்கது.

# சர்வதேச நியமங்களுக்கமைய கடற்றொழிலை ஒழுங்குபடுத்தல்

## ஐரோப்பிய ஒன்றியத் தூதுவருடன் அமைச்சர் டக்ளஸ் கலந்துரையாடல்



சர்வதேச கடற் பகுதியில் மீன்பிடியில் ஈடுபடும் இலங்கை கடற்றொழிலாளர்கள் மற்றும் ஆழ்கடல் படகுகளின் செயற்பாடுகள், மீன்பிடி தொடர்பான சர்வதேச நடைமுறைகள் மற்றும் ஐரோப்பிய ஒன்றியத்தின் ஒழுங்கு விதிகள் தொடர்பாக ஐரோப்பிய ஒன்றியத்தின் இலங்கைக்கான தூதுவர் டெனிஸ் சைபிஷுக்கும் கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவுக்குமிடையே நேற்று (24) கடற்றொழில் அமைச்சின் கேட்போர் கூடத்தில் சந்திப்பு ஒன்று இடம்பெற்றது.

இச்சந்திப்பின்போது சர்வதேச கடற்பரப்பில் மீன்பிடியில் ஈடுபடும் மீன்பிடிப் படகுகளில் VMSஎனப்படும் படகுகளைக் கண்காணிக்கும் கருவி பொருத்தப்பட்டிருப்பதன் அவசியத்தையும் அதன் பராமரிப்பு மற்றும் சேவைகளின் முன்னேற்றம் தொடர்பாகவும் இருவரும் கலந்துரையாடினர்.

அத்துடன், மீன்பிடிப் படகுகளைப் பயன்படுத்தி கடலில் இடம்பெறும் அத்துமீறல்கள் மற்றும் சட்டவிரோத செயற்பாடுகள் என்பவற்றைக் கண்காணிப்பது மற்றும் அவற்றைக் கட்டுப்படுத்துவதற்கான நடவடிக்கைகள் தொடர்பாகவும் ஆராயப்பட்டுள்ளது.

இக்கலந்துரையாடலின்போது கடற்றொழில் அமைச்சின் செயலாளர்கள் மற்றும் கடற்றொழில் திணைக்களப் பணிப்பாளர் நாயகம் உள்ளிட்ட அமைச்சின் அதிகாரிகள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.

## புத்தூர் பகுதியில் தேடுதல்; கசிப்பு வைத்திருந்தவர் கைது

அச்சுவேலி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட புத்தூர் பகுதியில் வைத்து 23 வயதுடைய நபரொருவர் நேற்று 20 லீட்டர்கள் கசிப்புடன் கைது செய்யப்பட்டுள்ளார்.

காங்கேசன்துறை மாவட்ட விசேட குற்றத்தடுப்புப் பிரிவுப் பொலிஸார் புத்தூர் பகுதியில் மேற்கொண்ட சுற்றிவளைப்பு நடவடிக்கையின்போதே அவர் இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளார்.

அவருக்கு ஏற்கனவே ஒரு வழக்கு உள்ளதாகவும் அந்த வழக்குக்கு மல்லாகம் நீதிமன்றம் பிடியாணை பிறப்பித்துள்ளதாகவும் கூறப்படுகிறது.

இவ்வாறு கைதுசெய்யப்பட்ட சந்தேகநபர் அச்சுவேலி பொலிஸ் நிலையத்தில் பாரப்படுத்தப்பட்டார். அவரை மல்லாகம் நீதிமன்றத்தில் முற்படுத்துவதற்கான நடவடிக்கைகளை பொலிஸார் மேற்கொண்டுள்ளனர்.





நுவரெலியா ஒலிபண்ட் மேல் பிரிவுத் தோட்ட அருள்மிகு ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலய மஹா கும்பாபிஷேக பெருவிழா நேற்று(24) காலை 10 மணியளவில் இடம்பெற்றது. (படம்:ஆ.ரமேஸ்)

# தெல்லிப்பழையில் விழிப்புணர்வு செயற்றிட்டம்







பொலிஸ் தலைமையகத்தின் மோட்டார் போக்குவரத்துப் பிரிவின் பங்கேற்புடன் யாழ்ப்பாணத்தில் வீதியோர விழிப்புணர்வு செயற்றிட்டம் இடம்பெற்றது.

யாழ்ப்பாணம், தெல்லிப்பழை யூனியன் கல்லூரியில் நேற்றுக் காலை குறித்த நிகழ்வு இடம்பெற்றது.

வீதியோர விழிப்புணர்வு செயற்றிட்டம் சார்பாகத் தெரிவுசெய்யப்பட்ட மாணவர்களுக்கு அங்கிகள் வழங்கி வைக்கப்பட்டதுடன் வினாடி- வினாப் போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்கு சான்றிதழ்களும் வழங்கப்பட்டன. மேலும் வீதி விபத்து தொடர்பாக விழிப்புணர்வை ஏற்படுத்தும் வீதி நாடகங்களும் அரங்கேற்றப்பட்டன.

பொலிஸ் தலைமையகத்தின் மோட்டார் போக்குவரத்துப் பிரிவின் பொலிஸ் பரிசோதகர் வசந்த, உதவிப் பொலிஸ் பரிசோதகர் ஜயந்த மற்றும் யேசுராஜ் உள்ளிட்ட குழுவினரும் காங்கேசன்துறை பிராந்திய பொலிஸ் அத்தியட்சகர் சந்தன கமகே, உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் ஹேமந்த விஜயவர்தன, காங்கேசன்துறை பிராந்திய போக்குவரத்துப் பிரிவுப் பொலிஸ் பொறுப்பதிகாரி காரியவசம், தெல்லிப்பழை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி உதயபால உள்ளிட்ட போக்குவரத்துப் பொலிஸ் உத்தியோகத்தர்கள், மாணவர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.

# சிறுத்தை தாக்கி தொழிலாளர் காயம்



(மனுர சுதத் செல்லஹேவா)

பொகவந்தலாவ பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பொகவந்தலாவ செல்வகந்த தோட்டத்தில் கொழுந்து பறித்துக்கொண்டிருந்த தொழிலாளியொருவரை சிறுத்தை தாக்கியதில் கடும் காயங்களுக்குள்ளாகி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். இச்சம்பவம் நேற்று முற்பகல் இடம்பெற்றுள்ளது.

இதன்போது சிறுத்தையின் தாக்குதலில் முகத்திலும் காலிலும் காயங்கள் ஏற்பட்டுள்ள நிலையில் டிக்கோய ஆதார வைத்தியசாலையில் அவர் அனுமதிக்கப்பட்டுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

தோட்டத்தின் ஐந்தாம் இலக்க தேயிலை மலையில் கொழுந்து பறித்துக்கொண்டிருந்தபோது திடீரென அங்கு வந்த சிறுத்தை தன்னைத் தாக்கியதாக பாதிக்கப்பட்டவர் தெரிவித்துள்ளார். அந்தச் சிறுத்தை சுமார் ஆறு அடி நீளம் கொண்டதெனவும் அவர் குறிப்பிட்டார்.

# வைகாசி பொங்கல் விழா

(கிண்ணியா செய்தியாளர்)

திருகோணமலை ஸ்ரீபத்திரகாளி அம்பாளின் வருடாந்தப் பொங்கல் விழா எதிர்வரும் 29ஆம் திகதி திங்கட்கிழமை வேதாகம மாமணி பிரம்மஸ்ரீ சோ. இரவிச்சந்திர குருக்கள் தலைமையில் நடைபெறவுள்ளது.

அன்றைய தினம் மாலை 3.00 மணியளவில் வளந்து வைக்கும் வைபவமும் மாலை 6.00 மணிக்கு பொங்கல் பூஜையும் நடைபெறும். அடியார்கள் அனைவரும் முன்னதாகவே ஆலயத்துக்கு வந்து தத்தமது நேர்த்திகளை முடித்து பொங்கல் விழாவில் கலந்துகொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளனர்.



# குளத்தில் நீராடச்சென்ற பெண் நீரில் மூழ்கிப் பலி

(அப்துல்சலாம் யாசீம்)

திருகோணமலை, எத்தாபெந்திவெவ குளத்துக்கு நீராடச் சென்ற பெண்ணொருவர் நீரில் மூழ்கி உயிரிழந்துள்ளார்.

இச்சம்பவம் நேற்று புதன்கிழமை(24) பிற்பகல் 3.00 மணியளவில் இடம்பெற்றுள்ளது. இவ்வாறு நீரில் மூழ்கி உயிரிழந்தவர் ஆர்.சியந்தாசந்ரகாந்தி (47 வயது) என்பவராவார். சம்பவம் தொடர்பிலான மேலதிக விசாரணைகளை மொரவெவ பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

## நிதிமோசடியில் ஈடுபட்டவருக்கு விளக்கமறியல்

வவுனியா, நெடுங்கேணிப்பகுதியில் வெளிநாடு அனுப்புவதாக கூறி நிதிமோசடி செய்த ஒருவர் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளதாக நெடுங்கேணி பொலிஸார் தெரிவித்தனர்.

குறித்த சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருவதாவது,

கைதுசெய்யப்பட்ட நபர் வெளிநாடுகளுக்கு ஆட்களை அனுப்புவதாக கூறி நெடுங்கேணி பகுதியைச் சேர்ந்த சிலரிடம் பணத்தைப் பெற்றுள்ளார்.

எனினும் நீண்டநாட்களாகியும் வெளிநாட்டுக்கு அனுப்பாமையினால் பணத்தை வழங்கிய நபர்கள் அதனை மீளத்தருமாறு கோரியுள்ளனர்.

எனினும், குறித்த நபர் பணத்தை மீள வழங்காதநிலையில் பாதிக்கப்பட்டவர்கள் நெடுங்கேணி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்திருந்தனர்.

இதனையடுத்து குறித்த நபரை நேற்று கைதுசெய்த பொலிஸார் அவரை வவுனியா நீதிமன்றில் முன்னிலைப்படுத்தினர்.

அதன்போது கைதுசெய்யப்பட்ட நபரை 14 நாட்கள் விளக்கமறியலில் வைக்குமாறு நீதவான் உத்தரவிட்டுள்ளார்.

# மருதானை புகாரி தைக்காவில் ஞாபகார்த்த நிகழ்வு

(மினுவாங்கொடை நிருபர்)

கொழும்பு - மருதானை அல் -மஸ்ஜிதுல் புகாரி தைக்காவில் குத்புஸ்ஸமான், அல்- அல்லாமா, அப்ழலுல் உலமா, அஷ்ஷெய்குல் காமில் கலாநிதி தைக்கா சுஐப் ஆலிம் அல் கிர்கரி (பீ.ஏ. - ஜலாலி) அவர்கள் இறையடி சேர்ந்து இரண்டு வருடங்கள் பூர்த்தியாவதை முன்னிட்டு நடைபெறும் 2 ஆவது உரூஸ் முபாரக் மஜ்லிஸ் நிகழ்வு எதிர்வரும் 28 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணி முதல், அஷ்ஷெய்க், அல் -அல்லாமா, அப்ழலுல் உலமா (சென்னை - பல்கலைக்கழகம்) தைக்கா நாஸிர் சுஐப் ஆலிம் (பீ.ஏ. - அல் அரூஸி, பாஸில் ஜமாலி, ஜலாலி) தலைமையில் ஆரம்பமாகும்.

அன்றைய தினம், காலை 9.30 மணி முதல் தைக்கா சுஐப் ஆலிம் அவர்களின் நினைவாக கத்முல் குர்ஆன் தமாம் செய்யப்பட்டும், சூரா யாஸீன் ஓதப்பட்டும் அன்னாரின் பெயரில் தமாம் செய்யப்படும்.

அத்துடன், ஜலாலிய்யா ராத்திப் நடத்தப் படவுள்ளதுடன், அன்னாரின் ஞாபகார்த்த சிறப்புச் சொற்பொழிவும் இடம்பெறவுள்ளது. ழுஹர் தொழுகையைத் தொடர்ந்து பகற்போஷணம் வழங்கப்படவுள்ளதாக புகாரி தைக்கா நிர்வாக சபையினர் தெரிவித்துள்ளனர்.





கொழும்பு, தெவட்டகஹ பள்ளிவாசலில் இடம்பெற்ற ஷாதுலியா மனாகிப்,ஹழரா மஜ்லிஸில் பங்கேற்ற கலீபதுல் குலபா மௌலவி ஸுஹுர் பாரி,பலஸ்தீன் நாட்டின் முன்னாள் தூதுவர் பௌஸான் அன்வர் ஆகியோர் பள்ளிவாசல் பிரதம தர்மகர்த்தா ரியாஸ் ஸாலியினால் பொன்னாடை போர்த்தி கௌரவிக்கப்பட்டனர். (பேருவளை செய்தியாளர்)

ජාතික ලොතරැයි මණ්ඩලය
தேசிய லொத்தர் சபை
National Lotteries Board
செவ்வாய்க்கிழமை 2023.05.23
உத்தியோகபூர்வ முடிவுகள்
www.nlb.lk
NLB

மஹஜன சம்பத
சீட்டிழுப்பு இலக்கம் 5123
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 16,204,311.00
ஆங்கில எழுத்து C
வெற்றி இலக்கங்கள் 5 1 1 8 5 3

கொவிசெத
சீட்டிழுப்பு இலக்கம் 3365
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 106,079,049.04
ஆங்கில எழுத்து D
வெற்றி இலக்கங்கள் 31 46 56 64

ஜாதிக சம்பத
சீட்டிழுப்பு இலக்கம் 1578
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ.11,397,579.60
வெற்றி இலக்கினம்
வெற்றி இலக்கங்கள் 3 1 3 4 2 6

தன நிதானய
சீட்டிழுப்பு இலக்கம் 1153
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 91,022,947.60
ஆங்கில எழுத்து A
வெற்றி இலக்கங்கள் 19 21 33 71

ராசி சுப பலன்
Handahana
சீட்டிழுப்பு இலக்கம் 432
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ.2,500,000.00
வெற்றி இலக்கினம் சிம்மம்
வெற்றி இலக்கங்கள் 02 38 39 62
விசேட இலக்கினம் சிம்மம்

Mega Power
சீட்டிழுப்பு இலக்கம் 1471
அடுத்த மெகா சுப்பர் பரிசு Rs.324,051,642.00
7 2 4 7 8
அடுத்த பவர் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00
அடுத்த கிராண்ட் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00
ஆங்கில எழுத்து X
சுப்பர் இலக்கம் 11
வெற்றி இலக்கங்கள் 02 25 43 52

| | | |
|---|---|---|
| | 1 1319391 | 2 1351517 |
| 3 1003041 | 4 1208358 | 5 0319495 |
| 6 0092449 | 7 0848793 | 8 1331332 |
| 9 0982158 | 10 1574477 | |

# யாழ். பொது நூலகத்தைப் பார்வையிட்ட இலங்கைக்கான பிரித்தானிய தூதுவர்







(வட்டுக்கோட்டை நிருபர்)

இலங்கைக்கான பிரித்தானிய தூதுவர் யாழ்ப்பாணம் பொது நூலகத்திற்கு வருகைதந்து நூலகத்தைப் பார்வையிட்டார்.

இலங்கைக்கான பிரித்தானிய தூதுவர் சரா ஹூல்ரன்(Sarah Hulton), இந்திய மற்றும் இந்து சமுத்திரப் பிராந்தியத்துக்கான இயக்குநர் பென் மெலோர் ஆகியோர் நேற்று முன்தினம் (23) யாழ்ப்பாணத்திற்கு உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொண்டு பல்வேறு தரப்பினரையும் சந்தித்து கலந்துரையாடினர்.

அத்தோடு யாழ்ப்பாணம் பொது நூலகத்திற்கு வருகைதந்து நூலகத்தையும் பார்வையிட்டனர்.

# திருக்கேதீஸ்வர ஆலய வருடாந்த மஹோற்சவத்துக்கு யாழிலிருந்து கொடிச்சீலை எடுத்துவரல்











(மன்னார் நகர் நிருபர்)

வரலாற்றுச் சிறப்புமிக்க மன்னார் திருக்கேதீஸ்வர ஆலய வருடாந்த மஹோற்சவ பெருவிழாவுக்காக 40 வருடங்களுக்குப் பின்னர் யாழ்ப்பாணத்திலிருந்து கொடிச்சீலை நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை (23) எடுத்துவரப்பட்டுள்ளது.

இக்கொடிச்சீலை அன்றைய தினம் காலை மன்னார் வேட்டையார்முறிப்பு அம்மன் ஆலயத்திற்கு எடுத்துவரப்பட்டு அதற்கான பூசை வழிபாடுகள் இடம்பெற்ற பின்னர் பாரம்பரிய முறைப்படி மாட்டுவண்டியில் மன்னார் திருக்கேதீஸ்வர ஆலயத்திற்கு எடுத்து வரப்பட்டு திருக்கேதீஸ்வர ஆலய பிரதம குரு கருணாநந்த குருக்கள் மற்றும் ஆலய நிர்வாக சபையினரிடம் உபயகாரர்களால் கையளிக்கப்பட்டது.

இதனையடுத்து திருக்கேதீஸ்வர ஆலயத்தின் வருடாந்த பெருந்திருவிழா நேற்று புதன்கிழமை (24) கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியுள்ளது.

1982ஆம் ஆண்டுக்கு முன்னர் யாழ்ப்பாணத்திலிருந்து திருக்கேதீஸ்வரத்திற்கு கொடிச்சீலை வழங்கப்பட்ட நிலையில், யுத்த காலத்தில் இந்த முறை கைவிடப்பட்டிருந்தது.

இந்நிலையில், கடந்த வருடம் திருக்கேதீஸ்வரத்தில் கும்பாபிஷேகம் நடைபெற்ற நிலையில் 40 வருடங்களுக்குப் பின்னர் மீண்டும் திருக்கேதீஸ்வர ஆலயத்திற்கு யாழ்ப்பாணத்திலிருந்து பாரம்பரிய முறைப்படி கொடிச்சீலை எடுத்துவரப்பட்டு வழங்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# வடமாகாண மக்களின் பிரச்சினைகளுக்கு தீர்வு பெற்றுத்தர முயல்வேன்

## ஆளுநர் சார்ள்ஸ் தெரிவிப்பு

(வவுனியா நிருபர்)



வடமாகாண பொதுமக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளை யதார்த்தமாக அணுகி அதற்குத் தீர்வு பெற்றுத்தர முயல்வேன் - என வடக்கு மாகாண ஆளுநர் திருமதி பி.எச்.எம்.சார்ள்ஸ் தெரிவித்துள்ளார்.

தனது கடமைகளைப் பொறுப்பேற்ற பின்னர் அவர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும்போதே இந்த விடயத்தைத் தெரிவித்தார்.

அவர் மேலும் இதுகுறித்து தெரிவிக்கையில்,

வடமாகாண மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளை நான் யதார்த்தமாக அணுகி சரியான முறையில் தீர்வுகளைப் பெற்றுத் தருவதற்கு முயற்சிப்பேன்.

இந்த மாகாணத்தில் இருக்கின்ற மூவின மக்களும் தங்களுடைய தேவைகளையும் தங்களுக்குத் தேவையானவற்றையும் எந்த நேரத்திலும் எனது அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம். அதனை நான் நிறைவேற்றிக் கொடுப்பேன். அத்துடன், இந்த மாவட்டத்தைப் பிரதிநிதித்துவப் படுத்துகின்ற மக்கள் பிரதிநிதிகளுடன் கலந்துரையாடி மக்களின் தேவைகளை நிறைவேற்றுவேன்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க யதார்த்தமாக அணுகுகின்ற ஒருவர். இந்த வடமாகாண மக்கள் அதிகாரப்பகிர்வு உட்பட பல்வேறு வகையான பிரச்சினைகளை எதிர்நோக்குவதைத் தான் அடையாளம் கண்டுள்ளதாக அவர் ஏற்கனவே சொல்லியிருக்கின்றார்- தெரிவித்துள்ளார். இவை அனைத்தையும் தீர்க்குமுகமாக நிச்சயமாக கவனமெடுப்பேன் – என்றார்.

# முகமாலை விபத்தில் ஒருவர் பலி; இருவர் படுகாயம்!



(வட்டுக்கோட்டை நிருபர்)

கிளிநொச்சி - முகமாலை பகுதியில் நேற்றுக்காலை இடம்பெற்ற விபத்தில் ஒருவர் பலியாகியுள்ளார். குறித்த விபத்து நேற்றுக் காலை 6.30 மணியளவில் இடம்பெற்றுள்ளது. விபத்தில் யாழ்ப்பாணம், துன்னாலை பகுதியைச் சேர்ந்த ஒருவர் உயிரிழந்துள்ளதுடன் மேலும் இருவர் படுகாயமடைந்துள்ளனர்.

யாழ்ப்பாணத்திலிருந்து திருகோணமலை நோக்கிப் பயணித்த அரச பஸ்ஸுடன் கிளிநொச்சியிலிருந்து யாழ்ப்பாணம் நோக்கிப் பயணித்த மோட்டார்சைக்கிள் மோதி விபத்துக்குள்ளானது.

விபத்தில் மோட்டார்சைக்கிளைச் செலுத்தியவர் உயிரிழந்ததுடன் அதில் பயணித்த சிறுவர்கள் இருவர் படுகாயமடைந்த நிலையில் பளை வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக கிளிநொச்சி வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளனர். விபத்து தொடர்பான விசாரணைகளை பளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# யாழிலுள்ள உணவகமொன்றிலிருந்து 20 கிலோ பழுந்தடைந்த உணவுப்பொருட்கள் மீட்பு



(யாழ். நிருபர்)

யாழ்ப்பாணம், வைத்தியசாலை வீதியில் அமைந்துள்ள உணவகமொன்றிலிருந்து பழுதடைந்த கோழி இறைச்சி, ரொட்டி, சோறு என சுமார் 20 கிலோ உணவுகளும் பழுதடைந்த பழங்களும் பொதுச் சுகாதாரப் பரிசோதகரால் மீட்கப்பட்டுள்ளன.

குறித்த உணவகத்தில் உணவு வாங்கிய நபரொருவர் அங்கு தனக்கு பழுதடைந்த உணவையே விற்றனர் என யாழ். மாநகர பொதுச் சுகாதாரப் பரிசோதகருக்கு முறையிட்டுள்ளார்.

அதனையடுத்து நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை குறித்த உணவகத்தை பொதுச் சுகாதாரப் பரிசோதகர் சோதனையிட்டபோது, உணவகத்திலிருந்து பழுதடைந்த உணவுப் பொருட்கள் மீட்கப்பட்டதுடன் உணவகத்தில் உணவைக் கையாளும் தொழிலாளர்கள் இருவர் மருத்துவ சான்றிதழ் பெற்றுக்கொள்ளாதிருப்பதும் கண்டுபிடிக்கப்பட்டது. கடையில் சில சுகாதாரச் சீர்கேடுகள் காணப்படுவதும் பொதுச் சுகாதாரப் பரிசோதகரால் அடையாளம் காணப்பட்டன.

இதேவேளை, உணவகத்தில் மீட்கப்பட்ட சான்றுப்பொருட்களை யாழ்ப்பாணம் மேலதிக நீதவான் நீதிமன்றில் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை சமர்ப்பித்து, உணவக உரிமையாளருக்கு எதிராக வழக்கு தாக்கல் செய்யப்பட்டது.

அதனைத் தொடர்ந்து நடைபெற்ற வழக்கு விசாரணைகளையடுத்து உரிமையாளரை ஒரு இலட்சம் ரூபா சீரப்பிணையில் செல்ல அனுமதித்த மன்று, மீட்கப்பட்ட உணவுப்பொருட்களை அழிக்குமாறு கட்டளையிட்டதுடன் வழக்கை எதிர்வரும் 15ஆம் திகதிக்கு ஒத்திவைத்தது.

வடக்கு செய்திகள்
thamilannorth@gmail.com

# மலையகத்தில் லயன் யுகத்தை முடிவுக்கு கொண்டுவரும் திட்டம்

## இ.தொ.காவினால் முன்னெடுக்கப்படுவதாக பாரத் தெரிவிப்பு

(எஸ்.கணேசன்)



மலையகப் பெருந்தோட்ட மக்களுக்கு தனி வீடுகளை அமைத்துக்கொடுத்து லயன் யுகத்துக்கு முடிவுகட்டும் வேலைத்திட்டத்தை இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் முன்னெடுத்து வருகின்றது. இது தொடர்பில் உலக நாடுகளுடனும் அரச சார்பற்ற நிறுவனங்களுடனும் பேச்சு நடத்தப்பட்டு வருகின்றது - என்று பெருந்தோட்ட மனிதவள அபிவிருத்தி நிதியத்தின் தலைவர் பாரத் அருள்சாமி தெரிவித்தார்.

அத்துடன், காங்கிரஸை விமர்சித்தால் தான் சிலரால் தமது அரசியல் இருப்பைத் தக்க வைத்துக்கொள்ள முடியும். கண்டியில் உள்ள ஒருவரும் இதே அரசியலைத்தான் செய்து வருகின்றார். அப்படியானவர்களுக்கு பதிலளித்து காலத்தை வீணடிக்க விரும்பவில்லை எனவும் கூறினார்.

பெருந்தோட்ட மனிதவள அபிவிருத்தி நிதியத்தின் காரியாலயத்தில் 23.05.2023 அன்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறியவை வருமாறு:-"மலையகத்தில் தனிவீட்டுத் திட்டம் முன்னெடுக்கப்பட்டுவந்த நிலையில், கொரோனா பெருந்தொற்று, பொருளாதார நெருக்கடி உள்ளிட்ட காரணங்களால் பணிகள் நிறுத்தப்பட்டன. தற்போது நடவடிக்கைகள் மீள ஆரம்பமாகியுள்ளன. இதன்படி 600 வீடுகளைக் கட்டுவதற்கான பணி இடம்பெற்று வருகின்றது. அத்துடன், எமது அமைச்சினூடாக நிர்மாணிக்கப்படவுள்ள வீடுகளுக்கு நிலங்களை விடுவித்துக்கொள்வதற்கான நடவடிக்கையும் இடம்பெறுகின்றது.

அதேபோல இந்திய அரசின் நிதிப் பங்களிப்புடன் முன்னெடுக்கப்படவுள்ள 10 ஆயிரம் வீட்டுத் திட்டமும் ஆரம்பிக்கப்படும். இதற்கான காணிகளைப் பெற்றுக்கொள்வது தொடர்பில் தோட்ட நிர்வாகத்துடன் பேச்சு நடத்தப்படுகின்றது. முதற்கட்டமாக 3 ஆயிரத்து 250 வீடுகள் நிர்மாணிக்கப்பட்ட பின்னர் அடுத்தகட்ட நடவடிக்கை ஆரம்பமாகும்.

மலையகத்துக்கு ஏற்கனவே வழங்கப்பட்ட 4000 வீடுகளில் 141 வீடுகள் நிறைவு செய்யப்படாமல் உள்ளன. தற்போது ஒரு வீட்டுக்கு 28 லட்சம் ரூபா என்ற அடிப்படையில் அந்த வீடுகள் முழுமைப்படுத்தப்படும். ஏற்கனவே நிர்மாணிக்கப்பட்ட வீடுகளுக்கு உட்கட்டமைப்பு வசதிகள் இருக்கவில்லை. இதனால் ஜீவன் தொண்டமான் அமைச்சராக பொறுப்பேற்ற கையோடு 600 மில்லியன் ஒதுக்கினார்.

மலையகத்தில் லயன் யுகத்துக்கு முடிவு கட்ட வேண்டுமெனில் 2 லட்சத்து 50 ஆயிரம் வீடுகள்வரை தேவை. இலங்கை மற்றும் இந்திய அரசுகள் உதவுவதுபோல சர்வதேச நாடுகள் மற்றும் அமைப்புகளுடன் உதவிகளை பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்" என்றார்.

# இந்து கலாசார பேரவையின் பொதுக் கூட்டம்

(செ.திவாகரன்)

நுவரெலியா இந்து கலாசாரப் பேரவையின் 25 ஆவது பொதுச்சபைக் கூட்டம் எதிர்வரும் 29 ஆம் திகதி திங்கட்கிழமை பிற்பகல் 3 மணிக்கு நுவரெலியா ஆவேலியா ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலய மண்டபத்தில் இந்து கலாசாரப் பேரவையின் தலைவரும் முன்னாள் நுவரெலியா மாநகரசபை உறுப்பினருமான எஸ். பாலகிருஷ்ணன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இக்கூட்டத்தில் கடந்த வருடக் கூட்டறிக்கை, கணக்கறிக்கை, முன்னேற்ற செயலறிக்கை, புதிய தீர்மானங்கள் சமர்ப்பித்தல் உட்பட புதிய நிர்வாக சபைத் தெரிவும் நடைபெறும். இக் கூட்டத்திற்கான ஏற்பாடுகளை நுவரெலியா இந்து கலாசாரப் பேரவையின் காப்பாளர் பி. மகேஸ்வரன் தலைமையில் மூன்று உறுப்பினர் கொண்ட குழுவினர் மேற்கொண்டுள்ளனர்.

# இரண்டு கடைகளை உடைத்துக் கொள்ளை

## வாரியபொலவில் நிர்வாணத் திருடனை தேடும் பொலிஸ்

(கண்டி செய்தியாளர்)

வாரியபொலவில் நிர்வாணக் கோலத்தில் வந்து இரண்டு கடைகளை உடைத்து பொருட்களைக் களவாடிய நபரைத் தேடி பொலிஸார் தீவிர விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

குருநாகல், வாரியபொல நகரில் நேற்றுமுன்தினம் இரண்டு கடைகள் உடைக்கப்பட்டு களவாடப்பட்டுள்ளன. கண்காணிப்புக் கெமராக்களை சோதனை செய்தபோது களவாடிய நபர் ஆடை எதுவுமின்றி நிர்வாணமாக உள்நுழைந்துள்ளமை தெரியவந்துள்ளது.

கடையின் கூரையை உடைத்து உள்நுழைந்த காட்சிகளும் பதிவாகியுள்ளதாகப் பொலிஸர் தெரிவித்தனர். ஒரு இலட்சம் ரூபாவிற்கும் மேற்பட்ட பொருட்கள் களவாடப்பட்டுள்ளதாக பொலிஸ் விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

இதுதொடர்பில் வாரியபொல பொலிஸார் பல்வேறு கோணங்களில் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

# சிறுவர் கடத்தல் தொடர்பில் மாத்தளையில் மக்கள் அச்சம்

(உக்குவளை செய்தியாளர்)

அண்மைக்காலமாக சில இடங்களில் சிறுவர்களைக் கடத்த முற்படும் சம்பவங்களும் சிறுவர் துஷ்பிரயோகங்களும் அதிகரித்துள்ள நிலையில், மாத்தளையிலும் இந்நிலை ஏற்படலாம் என்ற அச்சத்தில் மக்கள் உள்ளனர்.


இதனால் பெற்றோர் மத்தியில் சஞ்சலம் ஏற்பட்டிருப்பதை அவதானிக்க முடிகிறது. முன்பு "கிரீஸ் மனிதன்" விவகாரம் மக்கள் மத்தியில் சஞ்சலத்தையேற்படுத்தியிருந்தது. தற்போது சிறுவர்கள் கடத்தல் விவகாரமும் இதிலொரு அங்கமாக இருந்துவருகிறது.

இச்சம்பவங்கள் எதற்காக நடத்தப்படுகின்றன, எவரது வழிகாட்டலில் நடத்தப்படுகின்றன என்று இதுவரை அறியமுடியவில்லை. இவை எதுவாக இருந்தாலும் பெற்றோர் தம் பிள்ளைகள் விடயத்தில் அவதானமாக செயற்படுமாறும் சிறுவர்களை பொருட்களைக் கொள்வனவு செய்ய வர்த்தக நிலையங்களுக்கு அனுப்புவதையும் தூர இடங்களுக்கு அனுப்புவதையும் முற்றாகத் தவிர்த்துக்கொள்ளுமாறும் பொலிஸார் கேட்டுக்கொண்டுள்ளனர்.

பாடசாலைகள் மற்றும் அறநெறிப் பாடசாலைகளுக்கு சிறார்களை அனுப்புவதிலும் அழைத்துவருவதிலும் அவதானம் செலுத்துவது அவசியமெனவும் வலியுறுத்தப்பட்டுள்ளது.

மலையக செய்திகள்
thamilanmalayagam@gmail.com

# சுடுகாடு அபகரிக்கப்படுவதற்கு எதிராக மக்கள் போராட்டம்



அக்கரப்பத்தனை நியூ போர்ட்மோர் தோட்டத்திற்குச் சொந்தமான சுடுகாடு ஒன்று தனிநபர் ஒருவரினால் ஆக்கிரமிப்பு செய்யப்பட்டு விவசாயம் மேற்கொள்ளப்பட்டதால் தோட்டத் தொழிலாளர்கள் பணிப் பகிஷ்கரிப்புப் போராட்டத்தை நேற்று முன்னெடுத்தனர்.

இப்பிரச்சினை நீண்ட நாட்களாகவே காணப்படுவதாக தோட்ட மக்கள் விசனம் தெரிவித்தனர்.

இந்தப் பிரச்சினையை சுமுகமாக தீர்க்கும் வகையில் சம்பந்தப்பட்ட ஆக்கிரமிப்பு நபருக்கு இடுகாடு காணப்படுகின்ற நிலத்துக்குப் பதிலாக மாற்றுக் காணி ஒன்று தோட்ட நிர்வாகத்தோடு பேச்சுவார்த்தை நடத்தி வழங்கப்பட்டுள்ளது.

எனினும், மீண்டும் குறித்த நபர் சுடுகாட்டுப் பகுதியை ஆக்கிரமிப்பு செய்தமையால் தோட்டத் தொழிலாளர்களும் பொதுமக்களும் பணிப் பகிஷ்கரிப்புப் போராட்டத்தை முன்னெடுத்துள்ளனர். இவ்விடயம் தொடர்பில் தோட்ட முகாமையாளர் ஊடாக அக்கரைப்பத்தனை பொலிஸ் நிலையத்தில் தோட்டமக்கள் முறைப்பாடு செய்துள்ளதோடு சம்பந்தப்பட்ட முரண்பாடை நீதிமன்றம் ஊடாக தீர்த்துக்கொள்ளுமாறு பொலிஸாரால் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

# ஹப்புத்தளை விபத்தில் எண்மருக்கு காயம்



(என். மலர்வேந்தன்)

ஹப்புத்தளை, ஓரதரவ பகுதியில் பயணித்த வேன் மற்றும் பேருந்து நேருக்கு நேர் மோதுண்டு விபத்துக்குள்ளானதில் வேனில் பயணித்த எண்மர் காயமடைந்த நிலையில், தியத்தலாவை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இச்சம்பவம் நேற்று முன்தினம் (23) மாலை 5.30 மணியளவில் இடம்பெற்றுள்ளதாக ஹப்புத்தளை பொலிஸார் தெரிவித்தனர்.

நுவரெலியாலிருந்து கொஸ்லாந்தை பகுதிக்கு வேனில் திருமண நிகழ்வுக்கு சென்று மீண்டும் நுவரெலியா நோக்கிப் பயணித்த வேளையிலேயே இவ்விபத்து ஏற்பட்டுள்ளது.

இச்சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை ஹப்புத்தளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# கனடாவுக்கு விசா பெற்றுத்தருவதாகக் கூறி நிதி மோசடியில் ஈடுபட்ட தம்பதி கைது !

கனடாவில் உள்ள முன்னணி பல்கலைக்கழகம் ஒன்றினால் வழங்கப்படும் கல்வி விசா பெற்றுத்தருவதாகக் கூறி நிதி மோசடியில் ஈடுபட்ட தம்பதி கைதுசெய்யப்பட்டுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த மோசடியில் மருத்துவர்கள், பொறியியலாளர்கள், பொலிஸ் அதிகாரிகள், பல்கலைக்கழகப் பேராசிரியர்கள் என ஏராளமானோர் சிக்கியுள்ளதாகவும் 600 மில்லியன் ரூபாவுக்கும் அதிகமான தொகை மோசடி செய்யப்பட்டுள்ளதாகவும் பொலிஸார் மேலும் தெரிவித்தனர். இச்சம்பவம் பற்றி மேலும் தெரியவருவதாவது,

பத்தரமுல்லை குடிவரவு - குடியகல்வுத் திணைக்களத்துக்கு அருகில் அண்மையில் தாக்குதல் சம்பவமொன்று இடம்பெற்றுள்ளது. இந்நிலையில், இவ்விடயம் தொடர்பாக தாக்குதலுக்கு இலக்கான மேற்குறித்த தம்பதியர் தலங்கம பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளனர். இதனையடுத்து அவர்களைத் தாக்கியதாகக் கூறப்படும் நபர் பொலிஸ் நிலையத்துக்கு வரவழைக்கப்பட்டு விசாரணை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இதன்போது கனடாவில் உள்ள முன்னணி பல்கலைக்கழகம் ஒன்றினால் வழங்கப்படும் கல்வி விசா பெற்றுத்தருவதாகக் கூறி நிதி மோசடியில் ஈடுபட்ட சம்பவம் அம்பலத்துக்கு வந்துள்ளது.

அதாவது, தம்பதியரைத் தாக்கியதாகக் குற்றஞ்சாட்டப்பட்ட நபர் அவரது மகன் கனடாவில் உள்ள முன்னணி பல்கலைக்கழகத்தில் கற்பதற்கான விசாவைப் பெறுவதற்காக தம்பதியருக்கு 1.5 மில்லியன் ரூபாவை வழங்கியதாகவும் குறித்த தம்பதியினர் வாக்குறுதியைக் காப்பாற்றவில்லை என்றும் தன்னைத் தவிர்த்து வருவதாகவும் பின்னர் கொழும்பு மோசடி விசாரணைப் பிரிவுக்கு இதேபோன்ற குற்றங்கள் தொடர்பாக பல முறைப்பாடுகள் செய்துள்ளதாகவும் அவர் கூறியிருந்தார்.

இந்நிலையில், மோசடி விசாரணைப் பணியகத்தின் விசேட குழுவொன்று தலங்கம பொலிஸ் நிலையத்துக்குச் சென்று தம்பதியினருக்கு எதிராக கிடைத்த ஆறு முறைப்பாடுகள் தொடர்பில் அவர்களை கைது செய்தது.

கனடாவுக்கு விசா பெற்றுத்தருவதாகக் கூறி நாட்டின் பல்வேறு பகுதிகளிலுமிருந்து 400க்கும் மேற்பட்டோரிடம் தலா 1.5 மில்லியன் ரூபா மோசடி செய்யப்பட்டுள்ளமை தெரியவந்துள்ளது. சந்தேகநபர்கள் கொழும்பு உலக வர்த்தக நிலையத்தின் ஆறாவது மாடியில் கனடாவில் உள்ள முன்னணி பல்கலைக்கழகம் ஒன்றுக்கு கற்கைநெறிக்கான கல்வி விசா வழங்கும் அலுவலகத்தைக் கூட்டாக நடத்தி வந்ததாக பொலிஸார் தெரிவித்தனர். நுகேகொடை பிரதேசத்தைச் சேர்ந்த 63 வயதுடைய ஆணும் கடுவெல பிரதேசத்தைச் சேர்ந்த 47 வயதுடைய பெண்ணொருவருமே இதன்போது கைது செய்யப்பட்டுள்ளனர். இதுகுறித்து பொலிஸார் மேலும் விசாரணை நடத்தி வருகின்றனர்.

# பலஸ்தீனர்களின் எதிர்பார்ப்பை நாம் ஆதரித்து வருகிறோம்

## எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச





இலங்கையர்களாகிய நாம் எப்போதும் பலஸ்தீனர்களின் எதிர்பார்ப்பை ஆதரித்து வருகிறோம். எதிர்காலத்திலும் அதனைத் தொடருவோம். பலஸ்தீனத்தை சட்டபூர்வமான தேசிய நாடாகவும் ஏற்றுக்கொள்கிறோம் என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்தார்.

NAKBA பேரிடர் தினத்தின் 75 ஆவது ஞாபகார்த்த நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றியபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

எதிர்க்கட்சித் தலைவர் மேலும் தெரிவிக்கையில், 75 ஆண்டுகால தீராத துன்பங்களாக பலஸ்தீன அரசாங்கத்தையும் அதன் மக்களையும் ஒரு பாரிய மனிதாபிமானப் பேரழிவு முறையாக அழித்ததை நினைவு கூர்வதற்காக இன்று நாம் இங்கு கூடுகிறோம்.

மனித குலத்துக்கு எதிரான குற்றங்கள், பயங்கரவாதம், வெறுப்பைப் பரப்புதல், குடும்பப் பிரிவினை போன்றவற்றால் ஏற்பட்ட 75 ஆண்டுகால துன்பங்களை இங்கு நினைவு கூருகிறோம். ஆயிரக்கணக்கான பலஸ்தீன மக்கள் இந்தக் கொடூரமான சூழ்நிலையால் பாதிக்கப்பட்டுள்ளனர். இதற்கு சர்வதேச சமூகத்தைப் பிரதிநிதித்துவப்படுத்துவது எமது அனைவரினதும் பொறுப்பாகும். இந்த ஓயாத பயங்கரவாதத்தை முடிவுக்குக் கொண்டுவரும் துணிவோ வலிமையோ எங்களிடம் இல்லாததால் இதற்கு நாமும் பொறுப்பாக இருக்கின்றோம். மனித உரிமைகள், சிவில் உரிமைகள், ஜனநாயக உரிமைகள், பேச்சு சுதந்திரம் போன்றவற்றின் அடிப்படையிலான உலக நிர்வாக அமைப்பை வடிவமைக்க இயலாமைக்கு நாம் வெட்கப்பட வேண்டும். இந்தத் தருணத்தில் கூட, இந்த இருண்ட பாதையில் குறிப்பிடத்தக்க வெளிச்சத்தைக் காண முடியவில்லை.

இதன் வரலாற்றின் பல்வேறு நிகழ்வுகளை ஆராய்ந்தால் இந்தத் தீராத மனிதப் பேரிடருக்கு நீண்டகாலத் தீர்வை வழங்குவதற்கு ஐக்கிய நாடுகள் சபையும் அதன் செயலிலுள்ள உறுப்பு நாடுகளும் பல முயற்சிகளை மேற்கொண்டதாகத் தெரிகிறது.

நிலையான சமாதானத்தை அடைவதற்கு பல்வேறு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்ட போதிலும் அந்த முயற்சிகள் அனைத்தும் பேரழிவுகரமான தோல்வியையே நிரூபித்தன. அமைதிக்கான அறிவிப்புகள், வெளியீடுகள், உரைகள், பிரகடனங்கள் மற்றும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. இருப்பினும், மத்திய கிழக்கில் இதுவரை அமைதி இல்லை. பலஸ்தீனர்களுக்கும் சமாதானம் வரவில்லை. அவர்களின் உரிமைகள் பாதுகாக்கப்படவில்லை, பலஸ்தீனர்களின் உரிமைகள் நாளுக்கு நாள் மீறப்படுகின்றன.

சர்வதேச சமூகத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் நாம், இந்த மாபெரும் பேரிடரால் பாதிக்கப்பட்ட அனைவரின் கண்ணியத்தையும் பாதுகாப்பதற்காக நிலையான சமாதானத்தை ஏற்படுத்துவதற்கு மிகவும் அவசியமான, சமரசங்களாக வரும் கடினமான முடிவுகளை எடுக்கத் தவறியதன் மூலம் வெறும் பார்வையாளர்களாகி விட்டோம். இங்கு 75 வருடங்களாக மனித உயிர்கள் பலியாகியுள்ளன. இந்தத் தொடர்ச்சியான மோதல்களினால் ஏற்படும் சமூக விளைவுகள் குறித்து ஆராயப்பட வேண்டும்.

இந்த 75 ஆண்டு காலம் முழுவதும் தீர்க்கமான, முடிவுகளை எடுக்காமல் உலகம் நின்றுகொண்டிருந்தபோது, பலஸ்தீனியர்களின் அரசியல் உரிமைகள், சமூக உரிமைகள், பொருளாதாரம், சமூகம், கலாசாரம், மத உரிமைகள் என வரும் உரிமைகள் அவர்களிடமிருந்து பறிக்கப்பட்டுள்ளன.

பலஸ்தீன மக்கள் மிகுந்த வறுமையையும் ஆதரவற்ற நிலையையும் சந்திக்க வேண்டியுள்ளது. இந்த மோதலால் ஏராளமானோர் வீடுகளை இழந்துள்ளனர். மனிதப் பேரழிவு கணக்கிட முடியாதது.

இந்த அவல நிலையை முடிவுக்கு கொண்டு வர நாம் என்ன செய்ய வேண்டும்? ஐக்கிய நாடுகள் சபையின் பல்வேறு தீர்மானங்கள் மற்றும் சர்வதேச அறிவிப்புகள் மூலம் பல சந்தர்ப்பங்களில் முன்வைக்கப்பட்ட சமாதானத் தீர்வு நிரந்தரத் தீர்வுக்கான அடிப்படையாகும் என்பது எங்களின் உண்மையான நம்பிக்கை.

இலங்கையர்களாகிய நாம் எப்போதும் பலஸ்தீனர்களின் எதிர்பார்ப்பை ஆதரித்து வருகிறோம், எதிர்காலத்திலும் அதனைத் தொடருவோம் என்றார்.

# நுவரெலியாவில் மரக்கறிகளின் விலை உயர்வு: வியாபாரிகள்,நுகர்வோர் பாதிப்பு





(செ.திவாகரன்)

நுவரெலியா மத்திய பொருளாதார நிலையத்திலும் மத்திய சந்தையிலும் மரக்கறிகளின் விலைகள் மீண்டும் அதிகரித்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

நுவரெலியா பொருளாதார மத்திய நிலையத்தின் விலைப்பட்டியலின் பிரகாரம், கோவா ஒரு கிலோ 250 - 280 ரூபாவுக்கும் கரட் ஒரு கிலோ 240 - 250 ரூபாவுக்கும் லீக்ஸ் ஒரு கிலோ 250 - 260 ரூபாவுக்கும் உருளைக்கிழங்கு ஒரு கிலோ 270 ரூபாவுக்கும் ராபு ஒரு கிலோ 100 ரூபாவுக்கும் பீட்ரூட் ஒரு கிலோ 320 ரூபாவுக்கும் தக்காளி ஒரு கிலோ 450 ரூபாவுக்கும் புரோக்கோலி 1200 - 1300 ரூபாவுக்கும் ஒரு கிலோ கோலிபிளவர் 600 - 650 ரூபாவுக்கும் விற்பனை செய்யப்படுவதாகவும் தெரியவருகிறது. அத்தோடு நாட்டு மரக்கறிகளின் விலையும் அதிகரித்துள்ளதாக மரக்கறி வியாபாரிகள் தெரிவிக்கின்றனர்.

இவ்விடயம் தொடர்பாக நுவரெலியா பொருளாதார மத்திய நிலையத்தின் தலைவர் அருண சாந்த ஹெட்டியாரச்சியிடம் வினவிய போது, மலையக மரக்கறி வகைகள் கட்டுப்பாடில்லாமல் நாடுமுழுவதும் விநியோகிக்கப்படுவதால் விலை உயர்ந்துள்ளது

அதே வேளை விவசாயிகளினால் பயிரிடப்பட்டுள்ள மரக்கறிகளின் அறுவடைக் காலம் நெருங்கியுள்ள நிலையில், நாட்டில் தொடரும் மழை காரணமாக குறித்த மரக்கறிகள் அழுகும் நிலை ஏற்பட்டுள்ளதுடன்

உள்ளூர் மரக்கறி உற்பத்தி செய்யப்படும் இடங்களில் வெள்ளம் தேங்கியுள்ளது இதன் காரணமாகவே விலை உயர்வு ஏற்பட்டுள்ளது மழையுடன் கூடிய கால நிலை மேலும் தொடர்ந்தால் விலை அதிகரிக்கும் அபாயம் ஏற்படும். அனைத்து காய்கறிகளினதும் விலை உயர்ந்துள்ள போதிலும் மலையகத்தில் உருளைக்கிழங்கின் விலை வீழ்ச்சியடைந்துள்ளது. பாகிஸ்தான் மற்றும் இந்தியாவின் மேட்டுப்பாளையம் பகுதியிலிருந்து உருளைக்கிழங்கு இறக்குமதி செய்யப்படுவதே இதற்குக் காரணம் எனத் தெரிவித்தார் .

மரக்கறிகளின் விலைகள் அதிகரித்துள்ள நிலையில், நாளாந்த கூலித் தொழிலாளர்கள் ஐம்பது, நூறு ரூபாவுக்கு மரக்கறிகளைக் கேட்கும்போது குறித்த பணத்துக்கு சிறிய அளவிலான பொருட்களை வழங்கக்கூடிய நிலைமை ஏற்படுகிறது. இதனால் தமக்கு பாரிய நஷ்டம் ஏற்படுவதாகவும் மரக்கறி வியாபாரிகள் தெரிவிக்கின்றனர்.

மரக்கறிகளின் விலைகள் தொடர்ச்சியாக அதிகரித்தால் அதனை நுகரமுடியாத நிலை ஏற்படுமென பொதுமக்கள் அச்சம் தெரிவிக்கின்றனர்.

## கொழும்பில் கந்தூரி

( மினுவாங்கொடை நிருபர் )

கொழும்பு தெவட்டகஹ ஜும்ஆப் பள்ளிவாசலில் அமைந்துள்ள ஷெய்கு உஸ்மான் வலியுல்லாஹ் தர்ஹாவின வருடாந்த பெரிய கந்தூரி தமாம் வைபவம் எதிர்வரும் 31 ஆம் திகதி புதன்கிழமை மாலை 5.00 மணி முதல் ஆரம்பமாகும்.

அன்றைய தினம் மாலை 5.00 மணி முதல் குர்ஆன் தமாம் இடம்பெறவுள்ளதோடு மஃரிப் தொழுகைக்குப் பின்பு சங்கைக்குரிய குதுபுஸ் ஸெய்லான் அஷ் - ஷெய்கு ஸெய்யிதினா உஸ்மான் இப்னு அப்துர் ரஹ்மான் அஸ் - ஸித்தீக்கி வலியுல்லாஹ் அன்னவர்கள் பெயரில் "ஷெய்கு உஸ்மான் வலி மௌலித்" ஓதப்பட்டு, அதனைத் தொடர்ந்து இரவு இஷா தொழுகைக்குப் பின்பு ரசூலுல்லாஹ் மீது புகழ் பாடுதல் மஜ்லிஸ் இடம்பெறும். இதனையடுத்து இரவு 9.00 மணியளவில் இராப்போஷணம் வழங்கப்படுமென பள்ளிவாசல் நிர்வாக சபைத் தலைவர் ரியாஸ் ஸாலிஹ் தெரிவித்துள்ளார்.

# சம்மாந்துறை தப்லீகுல் இஸ்லாம் அறபுக் கல்லூரியின் 18 ஆவது பட்டமளிப்பு விழா

## குவைத் பதில் தூதுவர் பிரதம அதிதியாக பங்கேற்பு







சம்மாந்துறை தப்லீகுல் இஸ்லாம் அறபுக் கல்லூரியின் 50ஆவது ஆண்டு நிறைவு விழாவும் 18 ஆவது பட்டமளிப்பு நிகழ்வும் 20ஆம் திகதி சம்மாந்துறை பெரிய பள்ளிவாசலில் தப்லீகுல் இஸ்லாம் அறபுக் கல்லூரியின் தலைவர் அஷ்ஷெய்க் ஐ.எம். இஸ்மாயில் (தப்லீகி) தலைமையில் இடம்பெற்றன.

அஷ்ஷெய்க் எஸ்.இஸ்மா லெப்பை (தப்லீகி) முன்னிலையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் இலங்கைக்கான குவைத் நாட்டு பதில் தூதுவர் பத்ர் அல்-நுகைன் பிரதம அதிதியாகவும் மட்டக்களப்பு மாவட்ட மேல்நீதிமன்ற நீதிபதி அல் -ஹாபிழ் என்.எம். அப்துல்லா, மஜ்லிஸ் அஷ்ஷுறாவின் தலைவர் அஷ்ஷெய்க் எம்.ஐ. அமீர் ஆகியோர் சிறப்பு அதிதிகளாகவும் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

ஸம் ஸம் பவுண்டேஷனின் தவிசாளர் அஷ்ஷெய்க் எம்.எச். முஹம்மட் யூசுப் முப்தி சிறப்புப் சொற்பொழிவாளராகக் கலந்து கொண்டார்.

இக்கல்லூரியின் 50 ஆவது ஆண்டு நிறைவை நினைவுகூருமுகமாக நினைவு மலரும் வெளியிடப்பட்டது. அதன் முதற்பிரதி பிரதம அதிதிக்கு வழங்கி வைக்கப்பட்டது. இவ்விழாவில் நாட்டின் பல பாகங்களையும் சேர்ந்த ஷரீஆ பிரிவைச் சேர்ந்த 35 உலமாக்களும் ஹிப்ழுப்பிரிவைச் சேர்ந்த 10 ஹாபிழ்களும் அதிதிகளினால் பட்டம் வழங்கி கௌரவிக்கப்பட்டனர்.

இந்நிகழ்வில் முதலீட்டு ஊக்குவிப்பு அமைச்சின் செயலாளர் அஷ்ஷெய்க் எம்.எம். நயிமுடீன், வெளிவிவகார அமைச்சின் மேலதிக செயலாளர் யு. எல்.எம். ஜௌஹர், முன்னாள் அரசாங்க அதிபரும் இறப்பர் அபிவிருத்தித் திணைக்களத்தின் மேலதிக பணிப்பாளருமான ஐ.எம்.ஹனீபா, கிழக்கு மாகாணப் பிரதிப் பிரதம செயலாளர் ஏ.மன்சூர், கிழக்கு மாகாண பிரதிப் பிரதம செயலாளர் றிபா உம்மா ஜலீல், கிழக்கு மாகாணப் பேரவைச் செயலாளர் எம்.எம்.நஸீர், சம்மாந்துறை பிரதேச செயலாளர் எஸ்.எம்.எம்.ஹனீபா, கிழக்கு மாகாணப் பிரதிப் பிரதம செயலாளர் (நிதி) ஐ.எம்.ஹுசைன் , கல்லூரியின் இயக்குநர் சபை உறுப்பினர்கள், ஆசிரியர்கள், பழைய மாணவர்கள், உலமாக்கள், கல்விமான்கள், புத்திஜீவிகள், அரசியல் பிரமுகர்கள், பொதுமக்கள் உள்ளிட்ட நூற்றுக்கணக்கானோர் கலந்து கொண்டனர்.

ஸ்ரீ ලංකා මහ බැංකුව
இலங்கை மத்திய வங்கி
CENTRAL BANK OF SRI LANKA

## நாணய மாற்று வீதம் (24.05.2023)

| நாணயம் | கொள்வனவு வீதம் | விற்பனை வீதம் |
|---|---|---|
| அவுஸ்திரேலியன் டொலர் | 195.4761 | 206.9698 |
| கனேடியன் டொலர் | 219.0638 | 231.7831 |
| சீன யுவான் (ரென்மின்பி) | 41.4679 | 44.6311 |
| யூரோ | 319.8722 | 336.8965 |
| ஜப்பான் யென் | 2.1464 | 2.2572 |
| சிங்கப்பூர் டொலர் | 219.9375 | 232.3463 |
| ஸ்ரேலிங் பவுன் | 369.2272 | 387.8731 |
| சுவிஸ் பிராங்க் | 327.9674 | 347.8618 |
| ஐ.அ. டொலர் | 297.9878 | 311.2316 |

| நாடு | நாணயம் | விற்பனை வீதம் |
|---|---|---|
| பஹ்ரைன் | பஹ்ரைன் தினார் | 808.1878 |
| குவைட் | குவைட் தினார் | 991.6911 |
| ஓமான் | ஓமான் றியால் | 791.4056 |
| கட்டார் | கட்டார் றியால் | 83.3672 |
| சவூதி அரேபியா | சவூதி அரேபிய றியால் | 81.2552 |
| ஐக்கிய அரபு இராச்சியம் | ஐக்கிய அரப இராச்சிய திர்ஹம் | 82.9744 |








மாணவர் பாதுகாப்பு தொடர்பான விசேட வழிகாட்டல் செயற்றிட்டம் மத்துகம அன்னாசிகல தமிழ் வித்தியாலயத்தில் அதிபர் ஏ.ஸீ.எம். றிப்கான் தலைமையில் கடந்த வாரம் இடம்பெற்றது. இந்நிகழ்வில் தர்கா நகர் தேசிய கல்வியியல் கல்லூரி பீடாதிபதி எஸ். பவானந்தன் தலைமையிலான ஆங்கில பாட சிரேஷ்ட விரிவுரையாளர் என். சிவச்செல்வன், கல்விச் சமூகவியல் பாட விரிவுரையாளர் எச்.ஐ.எவ். சிஹ்னாஸ்,வழிகாட்டலும், ஆலோசனைக்குமான விரிவுரையாளர் எம்.எச்.ஏ.எவ்.ஸப்ரா, மத்துகம பிரதேச செயலக தோட்டப்புற மக்கள் தொடர்பாளர் எம்.பீ.எவ்.நுலாரா மற்றும் உதவி அதிபர் டீ. திலிப்குமார் மற்றும் ஆசிரியர்கள் எனப்பலர் கலந்துகொண்டனர்.

# கல்முனை உவெஸ்லி உயர்தரப் பாடசாலையில் மாணவர் தினம்

(பாண்டிருப்பு செய்தியாளர்)

கல்முனை உவெஸ்லி உயர்தரப் பாடசாலையில் கல்வி கற்று இம்முறை க.பொ.த.சாதாரண தரப் பரீட்சைக்கு தோற்றவுள்ள மாணவர்களை வழியனுப்பி வைக்கும் மாணவர் தின விழா அதிபர் எஸ்.கலையரசன் தலைமையில் செவ்வாய்க்கிழமை(23) நடைபெற்றது.

இந்நிகழ்வில் பிரதம அதிதியாக அட்டாளைச்சேனை தேசிய கல்வியியல் கல்லூரி பீடாதிபதி எம். புண்ணிய மூர்த்தி கலந்து கொண்டார். சிறப்பு அதிதியாக கல்முனை கல்வி வலய மாவட்ட பொறியியலாளர் ஏ.எம்.சாஹீர், கோட்டக்கல்விப் பணிப்பாளர் எஸ்.சரவணமுத்து, எழுத்தாளர் உமா வரதராஜன், உவெஸ்லி பாடசாலை பழைய மாணவனும் சமூக ஆர்வலருமான பொன்.சுகுமார் உட்பட ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர்கள், நலன் விரும்பிகள் கலந்து கொண்டனர்.

இதன்போது, சிறப்பு மலரான 'உரைகல்' நூல் வெளியிட்டு வைக்கப்பட்டதுடன் தரம் ஐந்து புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தி பெற்ற மாணவர்களும் பாராட்டி கௌரவிக்கப்பட்டனர். இதன்போது மாணவர்களின் கலை நிகழ்வுகளும் இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது.



கல்முனை பிரதேச செயலகத்தின் நிர்வாக உத்தியோகத்தராக சாய்ந்தமருதைச் சேர்ந்த முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர் ஏ.சி.எம்.பழில் புதன்கிழமை(24) தனது பதவியினை பொறுப்பேற்றார். இந்நிகழ்வில் கல்முனை பிரதேச செயலாளர் ஜே.லியாக்கத் அலி, சாய்ந்தமருது பிரதேச செயலாளர் ஏ.எம்.ஆஸீக், உதவி பிரதேச செயலாளர் எம்.ஐ.முவஃபிகா, கணக்காளர் ஏ.ஜே.நுஸ்ரத் பானு, சமுர்த்தி தலைமைப்பீட முகாமையாளர்களான ஏ.ஆர்.எம் சாலீஹ், ஏ.சி.எம்.நஜீம் உட்பட பிரதேச செயலக உத்தியோகத்தர்கள் கலந்து கொண்டனர். (நாவிதன்வெளி செய்தியாளர்)

வாழைச்சேனை ஆதார வைத்தியசாலைக்கு வைத்திய அத்தியட்சகராக எப்.பி.மதன் நியமிக்கப் பட்டுள்ளார். வாழைச்சேனை ஆதார வைத்தியசாலையில் இதற்கு முன்னரும் வைத்திய அத்தியட்சகராக சேவையாற்றி வந்த இவர், தனது கடமையினை திங்கட்கிழமை (22) பொறுப் பேற்றுக் கொண்டார். (மீராவோடை செய்தியாளர்)





ஒன்றுகூடும் மற்றும் எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்களில் ஈடுபடும் பொது மக்களின் உரிமைகளை பாதுகாக்கும் வகையில் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவினால் வெளியிடப்பட்ட "பொதுமக்களின் எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்களை கையாளுதல் தொடர்பில் அரசாங்கத்துக்கு மற்றும் சட்டத்தை அமுலாக்கும் அதிகாரிகளுக்கு சிபாரிசு செய்யப்படும் வழிகாட்டல்கள்" வழிகாட்டல் நூலில் சிபாரிசு செய்யப்பட்ட விடயங்கள் தொடர்பாக கருத்துகளை பெறும் கலந்துரையாடல் புதன்கிழமை(24) திருகோணமலை பிராந்திய மனித உரிமைகள் ஆணைக்குழு அலுவலகத்தில் பிராந்திய இணைப்பாளர் ஏ.எல்.இசைதீன் தலைமையில் இடம்பெற்றது. இதன்போது பொலிஸ் உயர் அதிகாரிகள், சட்டத்தரணிகள் மற்றும் தொண்டர் நிறுவனங்களின் பிரதிநிதிகள் ஆகியோர் கலந்து கொண்டிருந்தனர். (கந்தளாய் செய்தியாளர்)

# ஹிழுறிய்யா வித்தியாலயத்தில் முப்பெரும் விழா





(காத்தான்குடி செய்தியாளர்)

காத்தான்குடி மட்/மம/ஹிழுறிய்யா வித்தியாலயத்தின் முப்பெரும் நிகழ்வுகள் பாடசாலை அதிபர் எஸ்.ஐ.யசீர் அரபாத் தலைமையில் செவ்வாய்க்கிழமை (23) பாடசாலை முன்றலில் நடைபெற்றது.

2022(2023) க.பொ.த(சா/த) மாணவர்களுக்கான அனுமதி அட்டை வழங்கும் நிகழ்வு மற்றும் சேவை நலன் பாராட்டு, smart School Energy System அங்குரார்ப்பண நிகழ்வு ஆகிய முப்பெரும் நிகழ்வுகள் இடம்பெற்றன.

இந்நிகழ்வில் மட்டக்களப்பு மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் எம்.ஆர்.எஸ்.சுதர்ஷினி சிறிகாந் பிரதம அதிதியாக கலந்துகொண்டதுடன் மட்டக்களப்பு மத்தி வலயக்கல்விப் பணிப்பாளர் எஸ்.எம்.எம்.அமீர், கௌரவ அதிதியாகவும் காத்தான்குடி பிரதேச செயலாளர் யூ.உதயசிறிதர், மாணவர் சிப்பாய் படையணி கிழக்கு மாகாண பிரதிப் பணிப்பாளர் லெப்டினன் கேர்ணல் ஜீ.டபிள்யூ. ஜீ.எச்.நிலந்த ஆகியோர் விசேட அதிதியாகவும் கலந்து கொண்டதுடன் கல்வியாளர்கள், பிரமுகர்கள், மாணவர்கள், பெற்றோர்கள் எனப் பலரும் கலந்துகொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# அகில இலங்கை சமுர்த்தி முகாமையாளர் சங்க உப தலைவராக அன்வர் தெரிவு

(மாளிகைக்காடு, மாவடிப்பள்ளி செய்தியாளர்கள்)



அகில இலங்கை சமுர்த்தி முகாமையாளர்கள் சங்கத்தின் உப தலைவராக நிந்தவூர் பிரதேச செயலக தலைமைப் பீட சிரேஷ்ட சமுர்த்தி முகாமையாளர் ஏ.சீ.அன்வர் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

இவர் மே மாதம் 02ஆம் திகதி நடைபெற்ற அகில இலங்கை சமுர்த்தி முகாமையாளர்கள் சங்கத்தின் 26ஆவது தேசிய மாநாட்டின்போதே உப தலைவராக தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

இவர், அம்பாறை மாவட்ட தமிழ்ப் பேசும் சமுர்த்தி முகாமையாளர்கள் சங்கத்தின் தலைவராக செயற்பட்டு வருவதுடன் தனது சிறந்த தலைமையினூடாக சமுர்த்தி முகாமையாளர்களுக்கு பல்வேறு நலத்திட்டங்களை செய்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

மேலும், தனது 29 வருட கால சேவையினுள் அட்டாளைச்சேனை, சாய்ந்தமருது மற்றும் நிந்தவூர் பிரதேச செயலக தலைமைப் பீட சமுர்த்தி முகாமையாளராக கடமையாற்றியுள்ளார். கடந்த காலங்களில் அகில இலங்கை சமுர்த்தி முகாமையாளர்கள் சங்கத்தின் அம்பாறை மாவட்ட இணைப்பாளராக செயற்பட்டு வந்த நிலையிலேயே தற்போது உப தலைவராக தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

# கிராம உத்தியோகத்தர்களை கௌரவிக்கும் நிகழ்வு




(மாவடிப்பள்ளி செய்தியாளர்)

சமூகப் பாதுகாப்பு ஓய்வூதியத் திட்டத்தில் கிராம மட்டத்தில் பயனாளிகளை இணைத்துக்கொண்ட உத்தியோகத்தர்களை பாராட்டி கௌரவிக்கும் நிகழ்வு புதன்கிழமை(24) சாய்ந்தமருது பிரதேச செயலகத்தில் இடம்பெற்றது.

பிரதேச செயலாளர் எம்.எம்.ஆஷிக் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் அம்பாறை மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் வீ.ஜெகதீஸன் விசேட அதிதியாகக் கலந்து கொண்டார்.

சமூகப் பாதுகாப்பு ஓய்வூதியத் திட்டத்தில் கிராம மட்டத்தில் அதிகளவில் பயனாளிகளை இணைத்துக்கொண்ட சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்களான ஏ.ஏ.கபூர், எம்.நபார், ஏ.எம்.நளீம், ஜே.எம்.றம்ஸா, ஏ.எம்.காலிதீன், ஏ.எம்.அபுல் ஹுதா, எம்.ஐ.அன்ஸார் ஆகியோரும் கிராம உத்தியோகத்தர்களான எம்.எஸ்.ஐதாக், எஸ்.எம்.இல்பான் ஆகியோரும் சமூகப் பாதுகாப்பு அபிவிருத்தி உத்தியோகத்தர்களான எம்.எம்.எம்.முஸ்பிக் மற்றும் ஏ.எஸ்.எப்.சுமையா பானு ஆகியோரும் நினைவுச்சின்னம் மற்றும் பதக்கங்கள், சான்றிதழ்கள் வழங்கி கௌரவிக்கப்பட்டதோடு ஊக்குவிப்புத் தொகைகளும் வழங்கி கௌரவிக்கப்பட்டனர்.

இந்நிகழ்வில், சமூகப் பாதுகாப்பு திணைக்களத்தின் அம்பாறை மாவட்ட இணைப்பாளர் சுதாகரன், பிரதேச செயலக உதவிப் பிரதேச செயலாளர் எம்.ஐ.முவஃபிகா, உதவி திட்டமிடல் பணிப்பாளர் கே.எல்.ஏ.ஹமீட், கணக்காளர் ஏ.ஜே.நுஸ்ரத் பானு, சமுர்த்தி தலைமைப்பீட முகாமையாளர் ஏ.சி.நஜீம், திட்டமிடல் பிரிவு பிரதம முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர் எம்.எஸ்.எம்.றியாஸ் உட்பட கிராம உத்தியோகத்தர்கள், சமுர்த்தி மற்றும் பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், பிரதேச செயலக உத்தியோகத்தர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

கிழக்கு செய்திகள்
eastthamlian@gmail.com





கிரான் குளத்துவெட்டை ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலய வருடாந்த திருச்சடங்கு உற்சவப் பெருவிழா புதன்கிழமை(24) சிலம்பொலியுடன் நிறைவு பெற்றது. அம்மனுக்கு பாலாமிர்தம் ஒப்புக் கொடுக்கப்பட்டு கன்னிமார் பூஜை, பள்ளைய பூஜைகள், தீ மிதித்தல் மற்றும் அம்பாளின் திருக்குளிர்த்தியுடன் பூஜைகள் யாவும் நிறைவு பெற்றன. உற்சவ நிகழ்வுகளை ஆலய பிரதம குருவும் ஆதின தர்மகர்த்தாவுமான கிரியா வித்தகர் சிவாச்சாரியார் திலகம் சிவஸ்ரீ செ.மகேந்திரக் குருக்களுடன் கிரியா அலங்கார திலகம் சிவஸ்ரீ வெ.கமலநாத சர்மா மற்றும் உற்சவ கால பிரதம குரு மாந்திரிக பூசகர் செ.கி.கிருபைரெத்தினம் ஆகியோர் கலந்து கொண்டு திருச்சடங்குகளை நடத்தினர். (வாழைச்சேனை மேலதிக செய்தியாளர்)



கோறளைப்பற்று மத்தி வாழைச்சேனை பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட பகுதிகளில் டெங்கு நுளம்பு பெருகும் இடங்கள் இனங்காணப்பட்டு திங்கட்கிழமை(22) துப்புரவு செய்யப்பட்டது. அந்தவகையில், புனாணை கிழக்கு ரிதிதென்னை ஜும்ஆப் பள்ளி வீதி, ஹாஜியார் வீதி, ஜெயந்தியாய மீள் எழுச்சி கட்டட வளாகம் ஆகியவை அப் பகுதி சமுர்த்தி உத்தியோகத்தர் என்.எம்.எச். முகம்மட் வழிகாட்டலின் கீழ் துப்புரவு செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (மீராவோடை செய்தியாளர்)



சாய்ந்தமருது பிரதேச செயலகத்துக்கான புதிய நிர்வாக உத்தியோகத்தராக மருதமுனையைச் சேர்ந்த எம்.என்.எம்.றம்சான் நியமிக்கப்பட்டுள்ளார். இவர் இதற்கு முன்னர் கல்முனைப் பிரதேச செயலகத்தில் பதில் நிர்வாக உத்தியோகத்தராகக் கடமையாற்றி வந்த நிலையில் அண்மையில் இடம்பெற்ற நேர்முகப்பரீட்சையில் சித்திபெற்று பயிற்சிகளை முடித்துக்கொண்டதன் பின்னர் பொதுநிர்வாக உள்நாட்டலுவல்கள் அமைச்சு இவருக்கான நிரந்தர நியமனத்தை வழங்கியுள்ளது. (மாவடிப்பள்ளி செய்தியாளர்)

# ரமழான் கால போட்டி நிகழ்ச்சியில் வெற்றியீட்டியோருக்கு பரிசளிப்பு

(மருதமுனை, மருதமுனை மேலதிக, பெரியநீலாவணை செய்தியாளர்கள்)



பெரியநீலாவணை மஸ்ஜிதுல் பலாஹ் பள்ளிவாசல் நிர்வாகம் பாடசாலை மாணவர்களுக்கிடையில் நடத்திய ரமழான் கால போட்டி நிகழ்ச்சியில் வெற்றி பெற்றவர்களுக்கான பரிசளிப்பு நிகழ்வு அண்மையில் பள்ளிவாசல் தலைவர் ஐ.எல்.எம்.பாறூக் தலைமையில் நடைபெற்றது.

இந்நிகழ்வில், பிரதம அதிதியாக மருதமுனை தாறுள் ஹுதா பெண்கள் அரபுக் கல்லூரியின் பணிப்பாளர் கலாநிதி அஷ்-ஷெய்க் எம்.எல்.முபாறக்(மதனி) கலந்து கொண்டிருந்தார். சிறப்பு அதிதியாக பெரியநீலாவணை பொலிஸ் நிலைய போக்குவரத்துப் பிரிவின் பொறுப்பதிகாரி எம்.ரீ.எம்.நஜீம் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

மேலும் பெரியநீலாவணை புலவர்மணி ஷரிபுத்தீன் மகா வித்தியாலய அதிபர் எம்.எம்.எம்.நியாஸ், அஷ்-ஷெய்க் ஆர்.நூவீஸ்(மக்கி), எம்.ஐ.எம்.ஜிபான்(மதனி), எஸ்.எச்.மூஜீப்(சலபி), அக்பர் ஜும்ஆப் பள்ளிவாசல் தலைவர் வை.எல்.எம். அன்ஸார், ஊடகவியலாளர்களான பி.எம்.எம்.ஏ.காதர், ஏ.எல்.எம்.ஷினாஸ், ஏ.ஆர். நபாயிஸ் உள்ளிட்ட பள்ளிவாசல் நிர்வாகிகளும் கலந்து கொண்டனர்.

இந்தப் போட்டி நிகழ்ச்சியில் 74 மாணவர்கள் கலந்து கொண்டு வெற்றி பெற்றிருந்தனர். இவர்களில் ஆண்கள் பிரிவில் மூன்று பேருக்கும் பெண்கள் பிரிவில் மூன்று பேருக்கும் 1ஆம், 2ஆம், 3ஆம் பரிசாக 15,000, 10,000, 5000 ரூபா வழங்கப்பட்டது. ஏனையவர்களுக்கு பரிசுப்பொதிகளும் வழங்கப்பட்டன. நிகழ்வுகளை ஆசிரியர் ஏ.எம்.சகாப்தீன் தொகுத்து வழங்கினார்.



அம்பாறை மாவட்ட விவசாயக்கண்டங்களில் இடைநிலைப்பயிர் உற்பத்தியாக்கம் இடம்பெற்று வருகிறது. மாவடிப்பள்ளி தாம்போதிக்கருகாமையிலுள்ள சிறுபோக நெற்செய்கை மேற்கொள்ளப்பட்ட பிரதேச வயலொன்றில் இடைநிலைப்பயிராக தென்னை பயிரிடப்பட்டுள்ளதைப் படத்தில் காணலாம். (நற்பிட்டிமுனை செய்தியாளர்)

# கறுவாக்கேணி விக்னேஸ்வரா கல்லூரியில் இரத்ததான முகாம்




(வாழைச்சேனை மேலதிக செய்தியாளர்)

'உதிரம் கொடுத்து உயிரைக் காப்போம்' எனும் தொனிப்பொருளில் மாபெரும் இரத்ததான முகாம் கல்குடா கறுவாக்கேணி விக்னேஸ்வரா கல்லூரியில் செவ்வாய்க்கிழமை(23) நடைபெற்றது. 63ஆவது கல்லூரி தினத்தினை முன்னிட்டு பழைய மாணவர்களால் ஏற்பாடு செய்யப்பட்ட முதல் நிகழ்வு இதுவாகும்.

ஆசிரியர்கள், பாடசாலை மாணவர்கள், பழைய மாணவர்கள் மற்றும் பொதுமக்கள் எனப் பலரும் கலந்து கொண்ட இந்நிகழ்வில் மட்டக்களப்பு போதனா வைத்தியசாலை, வாழைச்சேனை தள வைத்தியசாலை மருத்துவ சேவை உத்தியோகத்தர்களின் பங்குபற்றுதலுடன் பழைய மாணவர்களால் இவ் இரத்ததான முகாம் ஒழுங்கமைக்கப்பட்டிருந்தது.

இதன்போது வைத்தியர் எஸ்.விருஷ் கலந்து கொண்டிருந்தார்.




மட்டக்களப்பு கோரளைப்பற்று மத்தி வாழைச்சேனை பிரதேச செயலகத்தின் சமூக பராமரிப்பு நிலையத்தினால் ஹியூமன் எயிட் விசேட தேவையுடைய பாடசாலை மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் கையளிக்கும் நிகழ்வு அண்மையில் உதவி பிரதேச செயலாளர் ஏ.சி.எம்.றமீஸா தலைமையில் இடம்பெற்றது. இதன்போது சமூக சேவை உத்தியோகத்தர் ஏ.நஜீம் மற்றும் ஏனைய அபிவிருத்தி உத்தியோகத்தர்களான எம்.கனலோஜினி, ஜே.நிலோஜா (முதியோர் உரிமை மேம்பாடு), எம்.ஏ.எம்.இல்யாஸ், ஈ.எல்.எம்.அஷ்ரப், ஏ.எல்.எம்.இர்ஷாத் (அபிவிருத்தி) ஆகியோர் பங்குபற்றினர். (மட்டக்களப்பு)

# மட்டக்களப்பில் பால்நிலை வன்முறைகளை குறைப்பதற்கான வலையமைப்புக் கூட்டம்

(மட்டக்களப்பு)



மட்டக்களப்பில் பால் மற்றும் பால்நிலை அடிப்படையிலான வன்முறைகளைக் குறைப்பதற்கான வலையமைப்புக் கூட்டம் மாவட்ட அரச அதிபர் திருமதி கலாமதி பத்மராஜாவின் ஆலோசனை மற்றும் வழிகாட்டுதலின் கீழ் மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் திருமதி சுதர்சினி ஸ்ரீகாந்த் தலைமையில் செயலக மாநாட்டு மண்டபத்தில் செவ்வாய்க்கிழமை(23) இடம்பெற்றது.

மாவட்டத்தில் பால்நிலை சமத்துவத்துக்கு எதிரான வன்முறைகளைத் தடுத்தல் மற்றும் சிறுவர், பெண்கள் தொடர்பாக அரச சார்பற்ற நிறுவனங்களால் செயற்படுத்தப்படுகின்ற திட்டங்கள் தொடர்பாக ஆராயும் விசேட கலந்துரையாடல் இடம்பெற்றதுடன் அவர்கள் எதிர்கொள்ளும் சவால்கள் மற்றும் பிரச்சினைகள் தொடர்பாகவும் கலந்தாலோசிக்கப்பட்டது.

மாவட்டத்தில் காணப்படுகின்ற தற்காலிக பெண்கள் காப்பகத்தில் உள்ளவர்களைப் பராமரித்து அவர்களுக்குத் தேவையான சட்ட நடவடிக்கையை மேற்கொள்வதுடன் அவர்களை குடும்பத்துடன் இணைப்பாக்கம் செய்வதற்கான நடவடிக்கைகளையும் மேற்கொள்ளவேண்டிய அவசியம் தொடர்பாக ஆலோசிக்கப்பட்டது.

அத்துடன், அரச சார்பற்ற நிறுவனங்களின் செயற்றிட்ட அறிக்கை மாவட்ட செயலகத்துக்கு மாதாந்தம் வழங்கப்பட வேண்டும் மற்றும் பாடசாலை மட்டத்தில் விழிப்புணர்வு செயற்றிட்டங்கள் முன்னெடுக்கப்பட வேண்டும் என மேலதிக அரசாங்க அதிபர் பணிப்புரை விடுத்தார்.

இந்நிகழ்வில் உதவி மாவட்ட செயலாளர் ஆ.நவேஸ்வரன், பிரதேச செயலாளர்கள், உதவிப் பிரதேச செயலாளர்கள், வைத்திய அதிகாரிகள், பொலிஸ் உத்தியோகத்தர்கள், மாவட்ட பெண்கள் அபிவிருத்தி இணைப்பாளர் எஸ்.அருணாளினி, மகளிர் அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், அரச சார்பற்ற நிறுவனப் பிரதிநிதிகள், மாவட்ட செயலக உத்தியோகத்தர்கள் எனப் பலர் கலந்துகொண்டதுடன் நிகழ்வுக்கான நிதி அனுசரணையை தேவை நாடும் மகளிர் அமைப்பு வழங்கியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## போடியார் புலம்பல்!



ஜனாதிபதி தேர்தலுக்கு பணம் உண்டு உள்ளூராட்சி தேர்தலுக்கு பணம் இல்ல இது என்ன நகைச்சுவை எண்டு சஜீத்பிரமதாசாட ரெலிபோன் கட்சிக்காறர்கள் கேட்கிறாங்க எலுவா. அடே நீங்கள்தானே சொன்னயல் எலுவா உள்ளூராட்சி சப தேர்தல நடத்தாட்டி வழக்குபோடுவம், சனத்த திரட்டி போராடுவம், காட்டிக்காட்டிறம் பாருங்க எண்டு வாயால வட சுட்ட நீங்களே இப்ப சுருட்டித்து படுக்ககுள அந்த நரிக்கு எந்த தேர்தல் சாதகமோ அதத்தான் நடத்தும் இது கூட தெரியாதா..!

# சண்முகா இந்துக் கல்லூரி ஹபாயா விவகார தீர்ப்பு நல்லிணக்கத்தின் சமிக்ஞையாகும்

## இம்ரான் எம்.பி. தெரிவிப்பு

(கந்தளாய் செய்தியாளர்)



திருகோணமலை சண்முகா இந்து மகளிர் கல்லூரியில் எதிர்காலத்தில் ஹபாயா ஆடை அணிவது தொடர்பில் எவ்வித பிரச்சினைகளும் ஏற்படுத்தப்படமாட்டாது என்றும் நல்லெண்ண அடிப்படையில் வழக்குகளை இணக்கமாக முடித்துக்கொள்ள விரும்புவதாகவும் சண்முகா வித்தியாலய அதிபர் தரப்பினர் நீதிமன்றில் முன்மொழிந்தமை மகிழ்ச்சியளிப்பதாக திருகோணமலை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் இம்ரான் மகரூப் தெரிவித்துள்ளார்.

அத்தோடு இவ்விடயமானது தமிழ் பேசும் மக்களிடையே நல்லதோர் நல்லிணக்கத்துக்கான சமிக்ஞையாகத் தென்படுவதாகவும் இரு தரப்பாரும் விட்டுக்கொடுப்போடும் இணங்கியும் செல்வதன் மூலம் பலன்பெறமுடியும் என்றும் இம்ரான் எம்.பி. தெரிவித்துள்ளார்.

திருகோணமலை சண்முகா இந்து மகளிர் கல்லூரிக்கு தனது கலாசார ஆடையான ஹபாயாவை அணிந்துகொண்டு கடமையேற்கச் சென்ற ஆசிரியை பஹ்மிதா றமீஸை கடமையேற்கவிடாமல் தடுத்தமை தொடர்பில் பாடசாலை அதிபர் திருமதி லிங்கேஸ்வரி ரவிராஜனுக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்ட வழக்கு திருகோணமலை நீதவான் நீதிமன்றில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது. இதன்போதே மேற்படி இணக்கம் காணப்பட்டுள்ளது.

கிழக்கு மாகாணத்தைப் பொறுத்தமட்டில் தமிழ், முஸ்லிம் மற்றும் சிங்களவர்கள் வாழ்கின்றனர். இங்கு, பல்சமய கலாசாரம் பின்பற்றப்படுகின்றது. எனவே, வெவ்வேறு இன அடையாளத்தைக் கொண்டவர்களாக இருந்தாலும் சரி, வெவ்வேறு சமயத்தைப் பின்பற்றினாலும் சரி, நமக்கிடையே புரிந்துணர்வும் சகிப்புத் தன்மையும் காணப்பட வேண்டும்.

திருகோணமலை சண்முகா கல்லூரி ஹபாயா விவகாரமானது ஆரம்பத்திலேயே பேசித் தீர்மானமொன்றுக்கு வந்திருக்கலாம். துரதிர்ஷ்டமான சில நடவடிக்கைகள் பல கசப்பான அனுபவங்களைத் தந்துவிட்டன. மீண்டும் மீண்டும் இவற்றைப் பேசிக்கொண்டிருப்பதை விடுத்து நாம் இணக்கமாக அடுத்த கட்டத்துக்குச் செல்வது பற்றிச் சிந்திக்க வேண்டும்.

அத்தோடு ஆசிரியை பஹ்மிதா தமது உரிமைக்காக நீண்ட நாட்களாகப் போராடினார். எனவே, இவர் சார்பில் ஆஜராகிய சட்டத்தரணிகள் மற்றும் சட்ட ஆலோசகர்களைப் பாராட்டுவதில் மகிழ்ச்சியடைகிறேன் என்றார்.

# இளைஞர் தினத்தை முன்னிட்டு நடைபவனி





(கிண்ணியா செய்தியாளர்)

இளைஞர் தினத்தை முன்னிட்டு தம்பலகாமம் பிரதேச செயலாளர் ஜெ.ஸ்ரீபதியின் வழிகாட்டுதலுக்கமைய போதை ஒழிப்பு தடுப்பு நடைபவனி தம்பலகாமம் பகுதியில் செவ்வாய்க்கிழமை(23) இடம்பெற்றது.

குறித்த விழிப்புணர்வு நடைபவனியானது தம்பலகாமம் கிராம சேவகர் பிரிவு மீராநகர் முஸ்லிம் மகா வித்தியாலயத்திலிருந்து திருகோணமலை, கண்டி பிரதான வீதி வரை சென்றது. போதைப்பொருளை ஒழிக்கும் வகையில் பல விழிப்புணர்வு பதாகைகளை ஏந்தியவாறு இளைஞர்கள் உட்பட மக்கள் நடைபவனியாகச் சென்றனர். இதற்கான நிதி அனுசரணையை இளைஞர் அபிவிருத்தி அகம் வழங்கியது. இந்நிகழ்வில் தம்பலகாமம் பிரதேச செயலக உதவிப் பிரதேச செயலாளர் இரா.பிரசாந்தன், இளைஞர் சேவை அதிகாரி ஜாபீர், சமுதாய சீர்திருத்த உத்தியோகத்தர் பாலா ஹம்சன், சுற்றாடல் பாதுகாப்பு உத்தியோகத்தர்கள், இளைஞர் கழகங்கள், மாணவர்கள், ஆசிரியர்கள் எனப் பலர் கலந்துகொண்டனர்.



கல்முனை பிரதான வீதிகளில் திண்மக் கழிவகற்றல் வேலைகள் துரிதமாக இடம்பெற்று வருகின்றன. அம்பாறை மாவட்டத்தில் இடைவிடாமல் மழை பெய்துவருவதால் டெங்கு பரவுவதைக் கட்டுப்படுத்தவே இவ்வாறான ஏற்பாடுகள் கல்முனை மாநகர சபையால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன. பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் டாக்டர் முகம்மட் றிபாஸ் தலைமையில் டெங்கை கட்டுப்படுத்த பல்வேறு செயற்பாடுகள் இடம்பெற்றுவருகின்றமை குறிப்பிடத்தக்கது. (நற்பிட்டிமுனை செய்தியாளர்)

கிழக்கு
செய்திகள்
eastthamilan@gmail.com

# அறுகம்பை கடற்கரை பிரதேசத்தை சுத்தப்படுத்தும் வேலைத்திட்டம்

(அட்டாளைச்சேனை செய்தியாளர்)



கிழக்கு மாகாணத்தின் உல்லாசப் பயணிகளின் கேந்திர நிலையமாக உள்ள பொத்துவில் அறுகம்பை பிரதேசத்துக்கு பெருந்தொகையான உல்லாசப் பயணிகள் தற்போது வருகை தர ஆரம்பித்துள்ளனர். இவ்வாறு வருகை தரும் உல்லாசப் பயணிகளின் நன்மை கருதியும் கடற்கரைச் சூழலை அழகுபடுத்தும் நோக்கிலும் அறுகம்பை கடற்கரைப் பிரதேசத்தில் சுத்தப்படுத்தும் வேலைத்திட்டமொன்று முன்னெடுக்கப்பட்டது.

அம்பாறை மாவட்ட உள்ளூராட்சி உதவி ஆணையாளரின் வழிகாட்டலின் கீழ் பொத்துவில் பிரதேச சபை மூலம் முன்னெடுக்கப்பட்ட இவ்வேலைத் திட்டம் பிரதேச சபைத் தவிசாளர் ஏ.எம்.ஹபீபுர் ரஹ்மான் தலைமையில் இடம்பெற்றது. இதன்போது பொத்துவில் பிரதேசத்தில் உள்ள பல்வேறு அரச மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்கள் உதவிகளை நல்கியிருந்த அதேவேளை, அம்பாறை மாவட்ட உள்ளூராட்சி உதவி ஆணையாளர் எஸ்.எல்.ஏ.கமல் நெத்மினி மற்றும் அறுகம்பை விசேட அதிரடிப் படை முகாம் பொறுப்பதிகாரி எஸ்.பி.குணசிறி ஆகியோர் அதிதிகளாகக் கலந்துகொண்டு நிகழ்வை ஆரம்பித்து வைத்தனர்.

இதன்போது கடற்கரைப் பிரதேசத்தில் உள்ள பல்வேறு கழிவுப் பொருட்கள் ஒன்று சேர்க்கப்பட்டு, பிளாஸ்ரிக் பொருட்கள், உக்காத கழிவுப் பொருட்கள், உக்கக்கூடிய கழிவுப் பொருட்கள், நீண்ட காலம் சுற்றாடலை மாசுபடுத்தும் கழிவுப் பொருட்கள் போன்றன தரம் பிரிக்கப்பட்டு அவை திண்மக் கழிவு முகாமைத்துவம் செய்யப்படும் வகையில் அப்புறப்படுத்தப்பட்டன.

மேலும், டெங்கு நுளம்புகள் பரவும் வகையில் காணப்பட்ட பல்வேறு இடங்கள் துப்புரவு செய்யப்பட்டன.

இதன்போது விசேட அதிரடிப் படையினர், கரையோரப் பாதுகாப்புத் திணைக்கள உத்தியோகத்தர்கள், உள்ளூராட்சி மன்ற உத்தியோகத்தர்கள், பொலிஸார், பிரதேச செயலக உத்தியோகத்தர்கள், சுகாதாரத் துறையினர், முச்சக்கரவண்டி உரிமையாளர் சங்கத்தினர், கிறீன் ஸ்ரீலங்கா அமைப்பினர், தன்னார்வலர்கள் போன்றோர் கலந்து கொண்டு கடற்கரையை சுத்தப்படுத்தினர்.

# சமூகங்களுக்கிடையே குழப்பத்தை ஏற்படுத்துகிறார் சுமந்திரன் எம்.பி.

## மு.காவின் தேசிய இணைப்பாளர் அப்துல் ரஹ்மத் மன்சூர்

(மாளிகைக்காடு செய்தியாளர்)



தமிழ், முஸ்லிம் மக்களுக்கிடையிலான ஒற்றுமையில் பிளவுகள் ஏற்பட்டுவிடக்கூடாது எனும் அடிப்படையில் இலங்கை முஸ்லிம் கட்சிகளின் தலைவர்கள் அமைதிகாத்து பொறுமையாக நடந்துகொள்கிறார்கள். அவர்களுக்கான பிரச்சினையை சுமுகமாகக் கையாண்டு வரும் சந்தர்ப்பத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ. சுமந்திரன் போன்றவர்கள் சமூகங்களுக்கிடையிலான பின்விளைவுகளை அறியாமல் சமூக குழப்பங்களை முன்னெடுப்பது ஏற்றுக்கொள்ள முடியாதது என கல்முனை மாநகர சபையின் முன்னாள் பிரதி முதல்வரும் ரஹ்மத் பவுண்டேஷன் தலைவருமான ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தேசிய இணைப்பாளர் அப்துல் ரஹ்மத் மன்சூர் தெரிவித்துள்ளார்.

கல்முனை உப பிரதேச செயலகத்தை பிரதேச செயலகமாகத் தரமுயர்த்தும் விவகாரம் தொடர்பில் வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

கல்முனை விவகாரம் என்பது பாராளுமன்ற உறுப்பினர் சட்டத்தரணி எச்.எம்.எம்.ஹரிஸின் வீட்டுப் பிரச்சினையல்ல. இது கல்முனை வாழ் மற்றும் இலங்கை வாழ் முஸ்லிம் மக்களுடைய பிரச்சினை. இதனைத் தீர்க்கவேண்டியது எம் ஒவ்வொருவரதும் கடமையாகும்.

அதுமட்டுமின்றி, ஹரிஸ் எம்.பி. மீது இருக்கின்ற தனிப்பட்ட கோபத்தைத் தீர்த்துக் கொள்ளவேண்டும் என்பதற்காகவும் தமது இயலாமையை மறைக்கவும் முஸ்லிம் சமூக மாற்றுக் கட்சிக்காரர்கள் அபாண்டமானதும் முரண்பாடானதுமான கருத்துகளை சமூக வலைத்தளங்களில் பதிவிட்டு வருகிறார்கள். சட்டவிரோதமாக ஆயுதமுனையில் உருவாக்கப்பட்ட அந்தக் காரியாலயத்தை சட்டரீதியான காரியாலயமாக மாற்றுவதற்காக தமிழ்க் கட்சிகள் எடுக்கின்ற இந்த நடவடிக்கைகளுக்கு முஸ்லிம் தரப்பில் இருக்கின்ற சிலரும் ஆதரவு வழங்குவது ஏற்றுக்கொள்ள முடியாத விடயமாகும்.

கல்முனை என்பது முஸ்லிம்களின் முக வெற்றிலை என்ற அடிப்படையில் பாராளுமன்றத்தில் அங்கம் வகிக்கும் சகல அரசியல் கட்சிகளும் அரசியல் பிரதிநிதிகளும் அரசியல்வாதிகளும் இந்த விடயத்தில் ஒருமித்த கருத்துடன் கல்முனைக்காக ஒன்றிணைய வேண்டியது காலத்தின் தேவையாக உள்ளது.

கல்முனை பிரச்சினைக்கு தீர்வைக் காண வேண்டும் என்பதற்காக நீதிமன்ற வாசல் ஏறி நியாயம் கோரும் ஹரிஸ் எம்.பியின் துணிவையும் சமூகப்பற்றையும் பாராட்டுகிறேன். இந்த வழக்கு தாக்கல் செய்வது என்பது ஹரிஸ் எம்.பி. மாத்திரமல்ல, கல்முனையை நேசிக்கின்ற யாராக இருந்தாலும் செய்திருக்க முடியும். ஆனால், அவ்வாறு யாரும், வேறு எந்தக் கட்சியும் செய்யாமல் இருப்பதை நினைத்துப் பார்க்கின்றபோது கவலையாக இருக்கின்றது.

ஜனநாயக நாடு ஒன்றில் கருத்து முரண்பாடுகள் இருப்பது வழமையே. தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்காக கருத்து வேறுபாடுகளைத் துறந்து எவ்வாறு தமிழ் மக்கள் பிரதிநிதிகள் ஒன்றிணைகின்றார்களோ அதுபோன்று எமது முஸ்லிம் தலைமைகளும் ஒன்றிணைய வேண்டும் எனத் தெரிவித்துள்ளார்.

# சம்மாந்துறை பிரதேசத்துக்கென தனியான பஸ்நிலையம் அமைத்துத்தரக் கோரிக்கை

சம்மாந்துறை பிரதேசத்துக்கென தனியான பஸ் நிலையமொன்று உருவாக்கப்பட வேண்டும் என பொதுமக்கள் கோரிக்கை விடுக்கின்றனர். தனிப்பெரும் தேர்தல் தொகுதியான சம்மாந்துறை அதிகளவான மக்கள் வாழும் பிரதேசமாக இருப்பதுடன் அநேகமானோர் குறுகிய மற்றும் நெடுந்தூரப் பயணங்களை மேற்கொள்பவர்களாகவும் இருக்கின்றனர்.

இந்நிலையில், அம்பாறை, கல்முனை, அக்கரைப்பற்று, இறக்காமம் உள்ளிட்ட தூர பிரதேசங்களுக்கும் மல்வத்தை, மஜீட்புரம், வளத்தாப்பிட்டி, மத்தியமுகாம், நெய்நாகாடு போன்ற குறுந்தூரப் பிரதேசங்களுக்கும் செல்லும் பயணிகள் உரிய நேரத்தில் பஸ் போக்குவரத்து சேவைகள் இல்லாத காரணத்தினால் பல்வேறு அசௌகரியங்களை எதிர்கொண்டு வருவதாகக் கவலை தெரிவிக்கின்றனர்.

கல்முனை மற்றும் அம்பாறை ஆகிய நகரங்களிலிருந்து சம்மாந்துறையூடாக போக்குவரத்து சேவையில் ஈடுபடுகின்ற பஸ்களில் பெருமளவு பயணிகள் நிரம்பி வழிவதால் இடையிலுள்ள சம்மாந்துறை பிரதேச மக்களுக்கு அந்த பஸ்களில் பயணிக்க முடியாதிருப்பதாகவும் இதனால் பாடசாலை செல்லும் மாணவர்கள், நோயாளிகள் உள்ளிட்டோர் உரிய வேளையில் தமது பயணங்களை மேற்கொள்ள முடியாதிருப்பதாகவும் தெரிவிக்கின்றனர்.

இதேவேளை, தனிப்பெரும் தேர்தல் தொகுதியான சம்மாந்துறை பிரதேசத்துக்கென தனியான பஸ்நிலையமொன்று உருவாக்கப்பட்டு நாளாந்தம் மக்கள் எதிர்கொள்ளும் அவலங்களை முடிவுக்கு கொண்டுவருவதற்கு பிரதேச அரசியல்வாதிகளும் சம்பந்தப்பட்ட அதிகாரிகளும் துரித நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.

பல வருடங்களுக்கு முன்னர் இவ்விடயம் தொடர்பாக பேசப்பட்டு வந்ததாகவும் அது தற்போது கிடப்பில் போடப்பட்ட நிலையில் இருப்பதுடன் அதுபற்றி யாரும் கவனத்திற்கொள்வதில்லை எனவும் மக்கள் விசனத்துடன் சுட்டிக்காட்டுகின்றனர்.

# சாய்ந்தமருதில் மார்க்க ஒன்றுகூடல்

(பொலிவேரியன் செய்தியாளர்)

சாய்ந்தமருது ஜாமிஉல் இஸ்லாஹ் ஜும்ஆப் பள்ளிவாசல் தஃவா குழு ஏற்பாடு செய்துள்ள மாபெரும் மார்க்க ஒன்று கூடல் நாளை வெள்ளிக்கிழமை (26) மஹ்ரிப் தொழுகையைத் தொடர்ந்து சாய்ந்தமருது ஜாமிஉல் இஸ்லாஹ் ஜும்ஆப் பள்ளிவாசலில் இடம்பெறவுள்ளது.

'குழந்தை வளர்ப்பும் இஸ்லாமிய வழிகாட்டலும்' எனும் தலைப்பில் அஷ்-ஷெய்க் ஏ.சி.தஸ்தீக் (ஹாமி, மதனி) மற்றும் 'இஸ்லாமிய கலாசாரத்துக்கு எதிரான இன்றைய அனாச்சாரம்' எனும் தலைப்பில் அஷ்-ஷெய்க் எஸ்.எல்.நிக்ராஸ் (தவ்ஹீதி) ஆகியோர் நிகழ்வில் விசேட சொற்பொழிவாற்றவுள்ளனர்.

இம் மார்க்க சொற்பொழிவு நிகழ்ச்சியில் பெண்களுக்காகவும் விசேடமாக இடம் ஒதுக்கப்பட்டுள்ளதால் இருபாலாரும் கலந்து பயன்பெறுமாறு ஏற்பாட்டுக் குழுவினர் அழைப்பு விடுத்துள்ளனர்.

# பிளாஸ்ரிக் முகாமைத்துவம் தொடர்பில் விழிப்புணர்வு

(கிண்ணியா செய்தியாளர்)



பிளாஸ்ரிக் முகாமைத்துவம் மற்றும் சூழல் பாதுகாப்புக்கான விழிப்புணர்வுக் கருத்தரங்கு திருகோணமலை இ.கி.ச. ஸ்ரீ கோணேஸ்வரா இந்துக் கல்லூரியில் றிங்கோ எயிட் நிறுவனத்தால் ஏற்பாடு செய்யப்பட்டு அதன் பிரதானி இ.ஹரிகரன் தலைமையில் புதன்கிழமை(24) நடைபெற்றது.

இந்நிகழ்வில் பிளாஸ்ரிக் பாவனை குறித்து அவர் தெரிவிக்கையில், பல கழிவுகள் திருகோணமலை நகரில் ஆழ்கடல், கரையோரப் பகுதிகள், நிலப்பகுதிகளில் அதிகமாகக் காணப்படுகின்றன. அவற்றில் 90 சதவீதம் பிளாஸ்ரிக் கழிவுகளே காணப்படுகின்றன. அவை காலப்போக்கில் சிதைவடைந்து மீனுக்கு இரையாக மாறுகின்றன. அந்த மீனை நாம் உண்கிறோம். நாம் பிளாஸ்ரிக் அரிசி, முட்டை என கேள்விப்பட்டிருக்கிறோம். ஆனால், உண்மையில் நாம் பிளாஸ்ரிக் மீன்களை உண்பது தெரியாமலே போகிறது.

திருமலை நகரம் சுற்றுலாத் தளமாக இருப்பதால் பிளாஸ்ரிக் கழிவுகள் அதிகமாக வீசப்பட ஒரு காரணமாக உள்ளது. என்றாலும், இதனைக் கட்டுப்படுத்துவதற்கான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும்.

ஆகவே, முதல் கட்டமாக பாடசாலைகளில் பிளாஸ்ரிக் முகாமைத்துவ விழிப்புணர்வுக் கருத்தரங்குகளை ஆரம்பித்துள்ளோம். அத்தோடு பிளாஸ்ரிக் சேகரிக்கும் தொட்டிகளும் பாடசாலைகளுக்கு வழங்கப்பட்டுள்ளன. இனி வரும் காலங்களில் பல பாடசாலைகளிலும் இது தொடரும். பின்பு இதற்கான செயற்றிட்டங்களை பொது வெளியில் நடத்தத் திட்டமிட்டுள்ளோம் என்றார்.





இந்திய பாராளுமன்ற புதிய கட்டடம் எதிர்வரும் 28ஆம் திகதி அந்நாட்டு பிரதமர் நரேந்திர மோடியால் திறக்கப்படவுள்ள நிலையில், பிரதமரிடம் தமிழகத்தின் வரலாற்றுச் சிறப்பு மிக்க செங்கோல் வழங்கப்படவுள்ளது.

அழகிய வேலைப்பாடுகளுடன் தங்கத்தால் செய்யப்பட்டுள்ள இந்தச் செங்கோலின் தலைப் பகுதியில் சிவனின் வாகனமான நந்தி இடம்பெற்றுள்ளது. சென்னையிலுள்ள நகை வடிவமைப்பாளர் ஒருவர் உருவாக்கிய இது, 8ஆம் நூற்றாண்டின் சோழ மன்னர்கள் பயன்படுத்திய செங்கோலை மாதிரியாகக் கொண்டு தயாரிக்கப் பட்டதாகும்.

# ‘கொவிட் 19’ ஐ விட ஆபத்தான பெருந்தொற்று ஏற்பட வாய்ப்பு

## உலக சுகாதார ஸ்தாபனம் எச்சரிக்கை



கொவிட்-19ஐ விட அதிக ஆபத்துகளை ஏற்படுத்தக்கூடிய கொடிய தொற்றுநோய் பரவ வாய்ப்புள்ளதாக உலக சுகாதார ஸ்தாபனம் எச்சரித்துள்ளது.

ஜெனிவாவில் இடம்பெற்ற உலக சுகாதார ஸ்தாபனத்தின் வருடந்த கூட்டத்தில் அதன் தலைவர் டெட்ரோஸ் அதனொம் கெப்ரியேசஸ் (Tedros Adhanom Ghebreyesus), கலந்துகொண்டு உரையாற்றும்போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்,

“கொரோனா தொற்றுநோயைவிட அதிக பாதிப்புகளை ஏற்படுத்தக்கூடிய ஆபத்தான தொற்றுநோய் பரவ வாய்ப்புள்ளது. அது பரவாமல் தடுப்பதற்கான பேச்சுவார்த்தைக்கு உலக நாடுகள் முன்னுரிமை கொடுக்கவேண்டும்.

கொரோனாவால் உலகம் முழுவதும் 2 கோடி பேர் உயிரிழந்துள்ளனர். கொவிட் பெருந்தொற்று இனி உலகிற்கு அச்சுறுத்தலாக இருக்காது என உலக சுகாதார நிறுவனம் அறிவித்துள்ளது. எனினும், அந்தப் பெருந்தொற்று மறைந்துவிடவில்லை. தொலைவிலிருக்கிறது.

புதிய பெருந்தொற்று கொவிட் பெருந்தொற்றைவிட அதிக உடல் பாதிப்புகளையும் உயிர்ச் சேதங்களையும் ஏற்படுத்துமென்பதால் அதனை எதிர்கொள்ள உலகம் தயாராக வேண்டும்.

கொவிட் தொற்று நோய் வந்தபோது அதனை எதிர்கொள்ள உலகம் தயாராக இல்லை. அதன் காரணமாக அது மிகப்பெரிய சுகாதார நெருக்கடியை ஏற்படுத்தியிருந்தது. புதிய தொற்றுநோயும் வீழ்த்தக் கூடியதாக இருக்காது. அது நமது கதவைத் தட்டப்போகிறது. நாம் செய்ய வேண்டியவற்றைச் செய்யாவிட்டால் அது நடக்கும். இப்போதே நாம் செய்யாவிட்டால் பிறகு எப்போது?” எனவும் அவர் கேள்வியெழுப்பியுள்ளார்.

## உலக செய்திகள்

### கேனரி தீவு பகுதியில்...

## நடுக்கடலில் சிக்கித்தவித்த புலம்பெயர்ந்தோர் 138 பேர் மீட்பு



கேனரி தீவுகளுக்கருகே நடுக்கடலில் சிக்கித் தவித்த 138 புலம்பெயர்ந்தோரை ஸ்பெயின் கடற்படையினர் மீட்டனர்.

ஆபிரிக்காவின் சஹாரா பகுதியைச் சேர்ந்த 4 பெண்கள், சிறார்கள் உட்பட 138 பேர் மூன்று இறப்பர் படகுகளில் இரவு நேரத்தில் நடுக்கடலில் சிக்கித் தவித்தனர்.

இதையறிந்த ஸ்பெயின் கடலோர கடற்படையினர் வேறொரு படகில் சென்று அவர்கள் அனைவரையும் மீட்டு கரைக்கு அழைத்துச் சென்றுள்ளனர்.

## நட்புறவின் அடையாளம்: ஆஸி. இல் ‘லிட்டில் இந்தியா’



அவுஸ்திரேலியாவின் சிட்னியிலுள்ள ஹரிஸ் பூங்காவில் இந்தியர்கள் தீபாவளி மற்றும் அவுஸ்திரேலிய தினத்தை வெகுவிமரிசையாகக் கொண்டாடுவது வழக்கம். இருநாட்டு நட்புறவின் அடையாளமாக இப்பகுதிக்கு ‘லிட்டில் இந்தியா’ எனப் பெயர் சூட்டப்பட்டுள்ளது.

இதில் பிரதமர் மோடியும் அவுஸ்திரேலிய பிரதமர் அல்பனீஸும் இணைந்து ஹரிஸ் பூங்காவில் ‘லிட்டில் இந்தியா’ நுழைவாயில் அமைப்பதற்கான அடிக்கல்லை நாட்டினர். மேலும், இந்தியர்களின் நீண்ட நாள் கோரிக்கையை நிறைவேற்றும் வகையில் பிரிஸ்பேனில் இந்திய துணை தூதரகம் திறக்கப்படுமென்றும் பிரதமர் மோடி அறிவித்தார். அவுஸ்திரேலியாவுக்கு விஜயம் மேற்கொண்டிருந்த இந்தியப் பிரதமர் நரேந்திர மோடிக்கு அங்கு பிரம்மாண்ட வரவேற்பளிக்கப்பட்டது.

**‘மோடி என்கிற பாஸ்’**

பிரதமரை வரவேற்றுப் பேசிய அவுஸ்திரேலியப் பிரதமர் அல்பனீஸ் மோடிக்கு கிடைத்துள்ள உற்சாக வரவேற்பை இதற்கு முன் தான் பார்த்ததில்லை என்றார். அந்த வகையில் ‘மோடி தான் பாஸ்’ என்றார் அல்பனீஸ்.

சிட்னி நகர ஒலிம்பிக் பார்க்கில் 20 ஆயிரத்துக்கும் மேற்பட்ட இந்திய வம்சாவளியினர் கூடியிருந்த நிலையில் அங்கு மோடி உரைநிகழ்த்தினார். இந்நிலையில், சிறப்பு விமானம் மூலம் வானத்தில் ‘வெல்கம் மோடி’ என்ற வாசகம் வரையப்பட்டது. இதற்கிடையே மோடிக்கு எதிராக ஆர்ப்பாட்டம் நடத்திய காலிஸ்தான் பிரிவினைவாத அமைப்பைச் சேர்ந்த 60 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.



## மீண்டும் வெடித்துச் சிதறும் மெராபி

இந்தோனேஷியாவின் மெராபி எரிமலை மீண்டும் வெடித்துச் சிதறத்தொடங்கியுள்ளது.

கடல் மட்டத்திலிருந்து 9 ஆயிரத்து 721 அடி உயரத்திலுள்ள இந்த எரிமலை வெடித்துச் சிதறியதில் அடர் சாம்பலுடன் 2 கிலோ மீற்றர் உயரத்திற்கு நெருப்பு குழம்பு வெளியேறியது.

எரிமலையிலிருந்து வெளியேறிய சாம்பல் அருகிலுள்ள பகுதிகளை போர்வைபோல் போர்த்தியுள்ளது. மெராபி எரிமலை கடந்த 2010ஆம் ஆண்டு வெடித்தபோது 300இற்கும் மேற்பட்டோர் உயிரிழந்தமை குறிப்பிடத்தக்கது.

## வானுயர்ந்த கட்டடங்களின் அழுத்தம்; நிலத்துள் மூழ்கும் நியூயோர்க் நகரம்



வானுயர்ந்த கட்டடங்களின் அழுத்தம் காரணமாக அமெரிக்காவின் நியூயோர்க் நகரம் மூழ்கி வருவதாக ஆராய்ச்சி முடிவுகள் தெரிவிக்கின்றன.

இதுகுறித்த ஆய்வுத் தகவல்கள் ‘எர்த் ஸ் ஃப்யூச்சர்’ என்ற இதழில் வெளியிடப்பட்டுள்ளன. நியூயோர்க் நகரிலுள்ள ஐந்து முக்கிய பகுதிகளில் சராசரியாக 10 இலட்சத்திற்கும் மேற்பட்ட கட்டடங்கள் உள்ளன.

அவை அண்ணளவாக 1.7 ட்ரில்லியன் பவுண்டுகள் எடையிலான அழுத்தத்தை பூமிக்கு கொடுக்கின்றன. இவற்றின் காரணமாக ஆண்டொன்றுக்கு 1 முதல் 2 மில்லிமீற்றர் அளவு நியூயோர்க் நகரம் மூழ்கிவருவதாகக் கூறப்படுகிறது.

செயற்கைக்கோள் தரவுகள் மூலம் இந்த ஆய்வு முடிவுகள் தெரிவிக்கப்பட்டுள்ளன. புவி வெப்பமயமாதல் காரணமாக கடல் நீர்மட்டம் வேகமாக உயர்ந்து வருவதால் நியூயோர்க் நகரத்திற்கு வெள்ள அபாயம் அதிகரித்துள்ளதாகவும் ஆய்வறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## ஒவ்வொரு ‘டொட்’ பந்துக்கும் 500 மரக்கன்றுகள் நடுகை

### பி.சி.சி.ஐயின் புதிய முயற்சி




மரம் நடுதலை ஊக்குவிக்கும் விதமாக பி.சி.சி.ஐ. புதிய முயற்சியை முன்னெடுத்துள்ளது. ப்ளேஆப் சுற்றின் முதல் ஆட்டத்தில் சென்னையும் குஜராத்தும் மோதின. இந்த ஆட்டத்தில் ஒவ்வொரு டொட் பந்துக்கும் டி.வி. ஸ்கோர் கார்டில் மரக்கன்று போன்ற அடையாளம் காண்பிக்கப்பட்டது.

இது பலரையும் குழப்பமடையச் செய்த நிலையில் அதற்குப் பின்னனியில் உள்ள பி.சி.சி.ஐயின் பசுமைத் திட்டம் பற்றிய தகவல்கள் தற்போது வெளியாகியுள்ளன. அதன்படி, பிளேஆஃப் ஆட்டங்களில் ஒவ்வொரு டொட் பந்து வீசப்படும்போதும் 500 மரக்கன்றுகளை நட பி.சி.சி.ஐ. திட்டமிட்டுள்ளது. இதன்மூலம் இந்தியா முழுவதும் மரக்கன்றுகள் நடப்படவுள்ளன.

## நான் எப்போதும் சி.எஸ்.கேவின் அங்கமாகவே இருப்பேன்

### ஓய்வு குறித்த கேள்விக்கு டோனி பதில்



சென்னை சுப்பர் கிங்ஸ் அணி இறுதிப்போட்டிக்கு தகுதிபெற்றமை குறித்தும் தனது ஓய்வு குறித்தும் அணியின் தலைவர் எம்.எஸ். டோனி கருத்து வெளியிட்டார்.

இது மற்றுமொரு இறுதிப்போட்டி என அத்தனை எளிதாகக் கூறிவிட மாட்டேன். நாங்கள் இதற்காக 2 மாதங்களாக கடினமாக உழைத்திருக்கிறோம். ஹர்ஷா போக்லே “இதுதான் சேப்பாக்கத்தில் உங்களின் கடைசிப் போட்டியா? ரசிகர்கள் நீங்கள் மீண்டும் சென்னையில் விளையாடுவதைப் பார்க்க முடியுமா”- எனக் கேட்க

புன்னகைத்தபடியே டோனி “எனக்கு முடிவெடுக்க 8-9 மாதங்கள் உள்ளன. இப்போது ஏன் அதைப் பற்றி யோசிக்க வேண்டும்? வரும் டிசம்பரில் மினி ஏலம் நடக்க உள்ளது. விளையாடுவேனா அல்லது வேறு ஏதாவது பொறுப்பிலா என்பது தெரியவில்லை. ஆனால், நான் எப்போதும் சி.எஸ்.கே. அணியின் அங்கமாகவே இருப்பேன்” எனத் தெரிவித்தார்.

## விளையாட்டு செய்திகள்

thamilansports@gmail.com

## இலங்கை வீரர்களின் பங்களிப்புடன் 10ஆவது முறையாக பைனலில் சி.எஸ்.கே.

குஜராத் டைட்டன்ஸ் அணிக்கு எதிரான முதல் குவாலிபயர் போட்டியில் சென்னை சுப்பர் கிங்ஸ் அணி 15 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றிபெற்று நடப்பு ஐ.பி.எல். தொடரில் முதல் அணியாக இறுதிப் போட்டிக்கு முன்னேறியதுடன் 10ஆவது தடவையாகவும் இறுதிப்போட்டிக்கு முன்னேறி சாதனை படைத்தது.

சென்னை சேப்பாக்கம் மைதானத்தில் நேற்று முன்தினமிரவு நடைபெற்ற ஆட்டத்தில் முதலில் துடுப்பெடுத்தாடிய சென்னை அணி 7 விக்கெட்டுகளை இழந்து 172 ஓட்டங்களைக் குவித்தது. இதையடுத்து 173 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் களமிறங்கிய குஜராத் அணி இடையிடையில் விக்கெட்டுகளைப் பறிகொடுக்க இறுதியில் 20 ஓவர்கள் முடிவில் அனைத்து விக்கெட்டுகளையும் இழந்து 157 ஓட்டங்களை மட்டுமே குவித்தது.

சென்னை சுப்பர் கிங்ஸ் அணியின் பந்துவீச்சில் இலங்கை வீரர்களான மஹேஷ் தீக்ஷன மற்றும் மதீஷ பத்திரன ஆகியோர் தலா இரு விக்கெட்டுகள் வீதம் வீழ்த்தினர்.



## அகில இலங்கை ஜூனியர் குத்துச்சண்டை விளையாட்டுப் போட்டி: பேராற்றுவெளி முஸ்லிம் பாடசாலை மாணவன் சாதனை

**(கந்தளாய் செய்தியாளர்)**

அகில இலங்கை ஜூனியர் குத்துச்சண்டை விளையாட்டுப் போட்டிகள் அண்மையில் கந்தளாய் நகர மண்டபத்தில் நடைபெற்றன. இதில் திருகோணமலை மாவட்டத்தில் கந்தளாய் வலயக்கல்வி அலுவலகத்திற்குட்பட்ட தி/பேராற்றுவெளி முஸ்லிம் மகா வித்தியாலய மாணவன் குத்துச்சண்டைப் போட்டியில் மாகாண மட்டத்தில் மூன்றாம் இடத்தைப் பெற்றார்.

இவ்விளையாட்டுப்போட்டியில் அகில இலங்கை பாடசாலைகளைப் பிரதிநிதித்துவப்படுத்தி 89 பாடசாலைகளைச் சேர்ந்த 400 விளையாட்டு வீரர்கள் கலந்துகொண்டு 4வயது பிரிவுகளில் 25 தங்கப் பதக்கங்களுக்காக போட்டியிட்டனர். இதில் கந்தளாய் தி /பேராற்றுவெளி முஸ்லிம் மகா வித்தியாலய மாணவன் 20 வயது பிரிவின் கீழ் கலந்து கொண்டு மாகாண மட்டத்தில் 3ஆம் இடத்தைப் பெற்று வெண்கலப் பதக்கத்தை தன்வசப்படுத்திக்கொண்டார்.

## அக்கரைப்பற்றில் நடைபெறவுள்ள மர்ஹூம் என்.ரி.பாறூக் மாபெரும் உதைபந்தாட்ட வெற்றிக் கிண்ணம்

**(அக்கரைப்பற்று செய்தியாளர்)**

அக்கரைப்பற்று ஏஸ் கழகம் நடத்தும் மர்ஹூம் என்.ரி.பாறூக் (கீப்பர் பாறூக்) மாபெரும் உதைபந்தாட்ட வெற்றிக் கிண்ணச் சுற்றுப்போட்டி அடுத்த மாதம் (ஜூன்) அக்கரைப்பற்று பொது மைதானத்தில் நடைபெறவுள்ளது.

உதைபந்தாட்ட சம்மேளன பிரதித் தலைவராக கடமையாற்றியவரும் உதைபந்தாட்டத்தில் ஜாம்பவானாகத் திகழ்ந்தவரும் சிறந்த கோல்காப்பாளருமான அக்கரைப்பற்றைச் சேர்ந்த மர்ஹூம் என்.ரி.பாறூக் (கீப்பர் பாறூக்) அவர்களின் ஞாபகார்த்தமாக அணிக்கு 11பேர்




கொண்ட 16 கழகங்கள் பங்கு கொள்ளும் உதைபந்தாட்ட சுற்றுப் போட்டி ஜூன் மாதம் அக்கரைப்பற்றில் நடைபெறவுள்ளது.

சம்பியனாகத் தெரிவுசெய்யப்படும் அணிக்கு 50 ஆயிரம் ரூபா பணப்பரிசும் வெற்றிக் கிண்ணமும் இரண்டாம் இடம்பெறும் அணிக்கு 30ஆயிரம் ரூபா பணப் பரிசும் வெற்றிக் கிண்ணமும் வழங்கப்படுவதுடன் ஆட்ட நாயகன், தொடர் ஆட்ட நாயகன், சிறந்த கோல் காப்பாளர் போன்றோருக்கு விருதுகளும் வழங்கப்படவுள்ளன.




**வத்துகாமம் பாரதி தமிழ் மகா வித்தியாலயத்தின் வருடாந்த இல்ல விளையாட்டுப்போட்டி அண்மையில் நகர சபை பொது விளையாட்டு மைதானத்தில் நடைபெற்றது. பிரதம அதிதியாக வத்தேகம வலயக் கல்விப் பணிப்பாளர் ஐ.எம்.ஹாசீம், அதிபர் எஸ்.பி.செல்வராஜ் மற்றும் அதிதிகளுடன் பழைய மாணவர்கள், பெற்றோர், ஆசிரியர்கள் கலந்துகொண்டிருப்பதையும் இடம்பெற்ற போட்டி நிகழ்வுகளையும் படங்களில் காணலாம். (எஸ். ராமதாஸ்)**

Printed by the Kalukodayawa, Malwana Press & Published by Liberty Publishers (Pvt.) Ltd. 91, Wijerama Mawatha, Colombo 7